JL
m211, N36eD.
N36.1.5.
221397

JL
M211, N36OD
N36.1.5
221397

தி ஸ்டார் ஆப் இந்தியா
இண்டஸ்டிரியல் & ஜெனரல் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்:—நெ 8, செம்புதாஸ் தெருவு, மதருஸ்

நம் இராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்டு மிகவும் திறமையுடன் நடத்தப்பட்டு வருகின்றது.

இக்கம்பெனியின் இன்ஷூரன்ஸ் திட்டங்கள் மிக விசேஷமான நன்மைகளுடன் கூடியவை. எல்லாவிதமான சௌகரியங்களும் அளிக்கப்படுகின்றன.

கம்பெனியின் அபிவிருத்தி.

அளிக்கப்பட்ட பாலிஸிகளின் தொகை	23,00,000
ஐவேஜிகள் சுமார்	2,00,000
கவர்ன்மெண்டு செக்யூரிடிகள்	1,00,000
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை (இண்டஸ்டிரியல் இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்)	3,00,000

இந்த இராஜதானியில் ஒவ்வொரு முக்கிய இடத்திலும் ஏஜண்டுகள் சம்பளத்திலும், கமிஷனிலும் தேவை. செல்வாக்கும், சாமர்த்தியமும் உள்ளவர்கள், மற்ற விவரங்களுக்கு தலைமை ஆபீஸுக்காவது, அல்லது கீழ் கண்ட ஆர்கனைஸர்களுடைய ஆபீஸுகளுக்காவது எழுதவும்.

எஸ். பாலசுப்ரமணிய ஐயர்,
டிஸ்டிரிக்ட் ஆர்கனைசர்,
வைதீஸ்வரன் கோவில், தஞ்சை ஜில்லா

வி. சங்கரசுப்பு,
டிஸ்டிரிக்ட் ஆர்கனைசர்,
திருநெல்வேலி ஜங்ஷன்.

எல். நரசிம்ஹம்
டிஸ்டிரிக்ட் ஆர்கனைசர், 80, மேல ஆவணி வீதி, மதுரை.

சந்திரோ,

5

(மாதமிருமுறைப் பத்திரிகை) ...

''கலந்தவர்க் கினியதோர் கள்ளுமாய்ப்
பிரிந்துலந்தவர்க்
குயிர்சுடு விடமுமாயுடன் புலந்தவர்க்
குதவிசெய் புதிய தூதுமாய்
மலர்ந்தது நெடுநிலா
மதனன் வேண்டவே.'' —கம்பர்

ஆசிரியர் :—என். விஜயகுமார்.

தொகுதி	1936ஞ்	பகுதி
1	செப்டம்பர்மீ 15உ	5

வேல்பிச்சர்ஸ்
கவனிக்குமா?

தமிழ்ப் படங்களென்றால் எனக்கு பெரும் பயம். காசைக் கொடுத்து, கண் வலியையும், தலை வலியையும், வாங்குவதை யார்தான் விரும்புவார்கள்? தவிரவும் எனக்கு கழுதைப் பொறுமையும் கிடையாது. இருந்தாலும் சில பிடிவாதக்கார நண்பர்கள் சிற் சில சமயங்களில் எனக்கு இந்த தண்டனையை விதித்து விடுவார்கள். விதியை நினைத்துக்கொண்டு நேரத்தைப் போக்குவேன். அதே மாதிரி தண்டனையை சமீபத்தில் நான்ஒரு தமிழ்பேசும் படத்தில் அநுபவிக்க நேர்ந்தது.

இந்தப் படத்தின் பெயர் பட்டினத்தார் என்பது. வேல் பிச்சர்ஸ் கம்பெனியாரால் தயாரிக்கப் பட்டது.

இந்த 'வெறும்' பட்டினத்தார், லோடஸ் பிச்சர்ஸ் கம்பெனியாரின் பக்த பட்டினத்தாரை விட நூறு மடங்கு நல்ல முறையிலிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் மொத்தமாக படத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால், கேவலமானது என்றே சொல்ல வேண்டும். படத்தை பற்றி நான் விமர்சனம் செய்யப் போவதில்லை. அது என் நோக்கமுமல்ல. ஆனால் இந்தப் படத்தில் காட்டப்படுவதன் கருத்துதா னென்ன? என்பதைப் பற்றியே நான் பேசப் போவது.

த் லட்சியத்திற்காக படிக்க வேண்டும்' என்று ஒரு மாணவன் முன்னதாக நிச்சயிக்காது, படித்துக் கொண்டு சென்றால், அதனால் ஒரு பயனு மேற்படாது. காரணமின்றி காரியம் நடக்கக்கூடாது.

நோக்கமில்லாமல், காரணமில்லாமல் நடக்கும் காரியங்கள் பித்தர்கள் செய்கைகளில் சேர்ந்து விடும். இது எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்.

சென்னையில் பதின்மூன்று வாரங்களுக்கு மேல் 'ஓடும்' இந்தப் பட்டினத்தார் படம் என்ன நோக்கத்துடன் தயாரிக்கப் பட்டது? இதைத் தயாரித்தவர்கள் கருத்தென்ன? இது கொஞ்சம் பகுத்தறிவுள்ள ஒவ்வொருவனும் சிந்திக்கத் தக்க விஷயம்.

ஒரு படம் பின் வரும் நோக்கங்களுடன் தயாரிக்கப் பட வேண்டுமென்பது பொதுவிதி.

(1) பணம் சம்பாதிக்க.
(2) ஜனங்களின் சோர்வைப் போக்கி இன்பத்தை உண்டாக்க.
(3) லோகத்தில் எப்படி நடந்தால் வாழ்க்கை ரோஜா மெத்தையாக இருக்கும் என்பதைப் போதிக்க.
(4) உலகத்தின் விசித்திரங்களை அறிவிக்க.

விசேஷ விதிகளாவன:—

(1) தேச பக்தியை அதிகப்படுத்த
(2) ஒரு குறிப்பிட்ட மதப் பிரசாரம் நடத்த.
(3) ஒரு கொள்கையை விதைக்க.
(4) வாழ்க்கையின் உண்மையை அப்படியே எடுத்துக் காட்ட.
(5) கடவுளின் காதலையோ, அல்லது பேரின்பக் கலப்பற்ற சிற்றின்பத்தையோ சித்தரிக்க.
(6) பொது அறிவை சிருஷ்டிக்க.

இந்தப் பொது, விசேஷ விதிகளின் கீழ் காணப்படும் நோக்கங்களில் எந்த நோக்கங்களுடன் பட்டினத்தார் படம் தயாரிக்கப் பட்டது? இதுவே நம் முன்புள்ள பிரச்சினை.

பணம் சம்பாதிப்பது என்ற நோக்கத்துடன் இந்தப் படம் தயாரிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தவிர வேறு எந்த நோக்கத்துடனும் தயாரிக்கப் பட்டதாக எனது அறிவுக்கு எட்ட மாட்டேனென்கிறது. அதாவது பொதுவிதியில், முதல் நோக்கம் தவிர, மீதி நோக்கங்களில் இது சம்பந்தப் பட முடியாது. விசேஷ விதியின் கீழ், 2, 3, 4, 5, (முதற் பகுதி மட்டும்) இந்த நோக்கங்களுடன் ஏதோ படம் எடுக்கப் பட்டிருப்பதாக தோன்றுகிறதே ஒழிய, வேறில்லை. அப்படி இந்த நோக்கங்களுடன் எடுக்கப் பட்டிருந்தாலும், இந்த நோக்கங்கள் இந்தப் படத்துக்குப் பொருந்துமா? என்பதே கவனிக்கத் தக்கது.

முதலாவதாக—சிவ மதத்தைப் பரப்புவதானால், இப்படத்தில் காணப் படும் திருக்கைலாயக் காட்சியைக் கண்டாலே, ஏதோ கொஞ்சம் பற்று வைத்திருப்பவன் கூட சிவமதத்திற்கு 'கோவிந்தா' கூறி விடுவான். இந்த மாதிரித் தோற்றத்தில் கிருஸ்துவின் உருவத்தை மேனாட்டுப் படங்களில் காட்டவே முடியாது. காட்டினாலும் அது தடுக்கப் பட்டாவது விடும்; அல்லது நெருப்புக் கிரையாகவாவது ஆகிவிடும்.

இரண்டாவதாக — பட்டினத்தாரின் கொள்கை துறவறம். 'ஊரும் சதமல்ல, உற்றார் சத மல்ல; உற்றப்பெற்ற பேறும்சத மல்ல; பெற்றோர் சத மல்ல. உடல் பொய்! உள்ளம் பொய்; பெண்கள் மாயை. செல்வம் நிலையற்றது, துறவறமே சிறந்தது. கௌபீன வாழ்க்கையே உத்தமமானது'—இதுதான் அவர் கொள்கை.

இந்தக் கொள்கை அவசியமா? இப்போதிருக்கும் நிலையில் நாட்டிற்கு வேண்டியது துறவறமா? துறவறத்தால் சினிமா முதலாளிகள் வயிறு வற்ற லாகுமா? வண்ணான் சாலாகுமா? என்டதைப் பார்த்தால், இந்த நோக்கத்துடன் படமெடுக்கப் பட்டிருக்கும் என்று சொல்வதற்கில்லை.

5-வது நோக்கமும், இரண்டாவது நோக்கத்துடன் இணைக்கப்பட்டே யாக வேண்டும். பட்டினத்தார் கடவுள் காதலைக் கண்டது துறவறத்தால். மற்றெதனாலு மல்ல. மீண்டும் துறவறத்துக்கே மக்களை இழுத்துச் செல்கிறது இதுவும். ஆக, இந்த நோக்கத்துடனும் பட மெடுக்கப் பட்டதாக எவரும் சொல்ல முடியாது.

பொது விதியின் கீழ், இரண்டாவது நோக்கத்துடன் எடுக்கப்பட்டது என்றாலும், அதற்கும் பட்டினத்தாரில் இடம் கிடையாது. சோர்வுற்றிருக்கும் ஜனங்களுக்கு பட்டினத்தார் சரித்திரம் சோகத்தையே அதிகமாக்கும். ஆதலின் நோக்கத்தைக் கொண்டுதான் இந்தப் படம் தயாரிக்கப் பட்டிருக்கிறது. அந்த நோக்கந்தான் பணம் சம்பாதிப்பது.

படங்கள் வெறும் 'பொழுது போக்குக்காக' என்ற நோக்கத்துடன் எடுக்கப் படுவதினாலேயே தமிழ்ப் படங்கள் மூத்தாள் சாட்சிகளாக விளங்குகின்றன. ஆனால் மேனாட்டுப் படங்களிலோ 'பொழுது போக்கு' படம் பூராவும் 'பரிமளிக்கும்' ஆனால் இதர நோக்கங்களும் இடையில் தாண்டவமாடும். அதன் காரணமாகவே மேல் நாட்டுப் படங்கள் மேன்மையான நிலையை அடைந்து வருகின்றன.

'சிலுவையின் குறி' 'பென் - ஹூர்', 'ராஜாதிராஜன்', 'கௌசோ' 'பிராங்கின்ஸ்டீனின் மணப்பெண்' "கண்ணுக்குத் தெரியா மனிதன்" — என்ற படங்களெல்லாம், கிறிஸ்துவ மதத்தைப் பிரசாரம் செய்யும் ஒரே நோக்கத்துடன் தயாரிக்கப் பட்டவை என்பது ஊன்றிப் பார்த்தவர்களுக்கு தோன்றிய உண்மை. இவைகளைப் பார்க்கும் போது தீவிர ஹிந்துவின் மனதில் கூட சற்று சலனம் ஏற்பட்டு, கண்ணீர் பெருக்குகின்றான்.

இன்னும் சற்று யோசிக்கப் போனால், 'வெள்ளையன் உயர்ந்தவன்' 'கருப்பன் தாழ்ந்தவன்' என்பதை ஊர்ஜிதப் படுத்தும் நோக்கத்துடன் பல மேனாட்டுப் படங்கள் இருப்பதையும்; இன்னும் பல படங்கள் 'வெள்ளையர்களால் நாம் ஆளப்படுதல் தகுதியே' என்று கருதக் கூடிய வகையில் அமைந்திருப்பதையும் காண்கிறோம். காசு சம்பாதிப்பது என்ற நோக்கம் ஒன்று மட்டுமே மேனாட்டுப் படங்களை ஆட்சி செய்வதில்லை. தவிரவும் நோக்கங்கள் உயர்ந்தவையாயிருக்க வேண்டுமென்பதும் மிகவும் அவசியம். ஆனால் கூடுமானவரையில் அவைகள் சித்தரிப்பதற்கு உகந்தவைகளா யிருக்க வேண்டும் என்பதையும் மேனாட்டுச் சினிமா உலகம் தெரிந்து வைத்திருக்கிறது. இதனால்தான் புராணப் படங்களும், கிறிஸ்துவ மதப் பிரசாரப் படங்களும் மேனாடுகளில் வருடத்திற்கு ஒன்றிரண்டுக்கு மேல் தயாரிக்கப் படுவதில்லை.

* * *

நமது புராணங்களோ உலகத்திலேயே தலை சிறந்தவை. அட்டைப் பாம்பும், புலித் தோலும், தகரச் சூலமும், முறுக்கு மீசையும் இருந்து விட்டால், ஒரு பரமசிவனையும், சப்ளாக்கட்டை, ஓட்டைத் தம்புரு, இமிடேஷன் சடை இவைகளிருந்தால் ஒரு நாரதரையும் சிருஷ்டிக்கும் வழக்கம் நம்மிடம் இருக்கும் வரையில் நாம் விளங்கவே மாட்டோம். இந்த மனப்பான்மையின் எதிரொலி, தொழில் வளர்ச்சியில் எவ்வளவு தூரம் செல்லும் என்பதை இவர்களுக்கு எடுத்துக் காட்டினால் கூட, இவர்கள் காதில் போட்டுக் கொள்ள மறுத்து விடுகின்றனர், 'இந்த நிலையை வெறும் கர்வம்! முதலாளித் தவக திமிர்! என்றே அழைக்க வேண்டும்.

பரிபூர்ணமான துறவறத்தில் தவழும் ஒரு பக்தனின் வாழ்க்கையை சித்தரிப்பதற்கு பெரு முயற்சி அவசியம்; பெரு நோக்கம் அவசியம்; இந்த நிலையில் சிறு நோக்கத்தைக் கொண்டு தயாரிக்கப் பட்ட இந்த பட்டினத்தார் படம் ஜனங்களை ஏமாற்றி விட்டது.

மீண்டும் கேட்கிறேன், இவர்கள் இந்தப் படமெடுத்ததின் கருத்து என்னவென்று? 'காதற்ற ஊசியும் வாராதுகாணும் கடை வழிக்கே' என்ற மந்திரவாணனின் கூற்றுப்படி, "இந்த ஒன்றுக்கும் உதவாக் காசை எங்கள் டிக்கட் ரூமில் கொண்டு வந்து கொட்டி விட்டு, ஒற்றியூருக்கு நடந்து காட்டுங்கள்" என்று இந்தப் படம் கூறுவதாக நாம் கொள்ள வேண்டுமே ஒழிய வேறு விதமாகக் கொள்வதற்கில்லை. தேசத்திற்கும் சமூகத்திற்கும் அவசியமான படங்களை ஒரு கம்பெனி தயாரிக்க வேண்டுமே ஒழிய, இம்மாதிரி மதத்தின் பெயரால் 'சுரண்டல்' செய்யலாம் என்ற நோக்கத்துடன் படங்கள் தயாரிக்கக் கூடாது. கூடாது! கூடாது! கூடாது! என்று மும்முறை சொல்லுகிறோம். எதை வேண்டுமானாலும் படங்களாகத் தயாரித்து, 'எங்கள் படந்தான் பாருங்களேன்! நிகரற்றது! போலிகளல்ல, என்று பறைசாற்றும் 'டாக்கிப்' படத் தயாரிப்புக் கம்பெனிகளைப் பற்றி ஒரு ஆசிரியன் என்ற ஹோதாவில் இதை இன்னும் எத்தனை தரம் வேண்டுமானாலும் உரத்திச் சொல்ல அதிகார முண்டு.

பக்தர்கள் பெயராலும், மதத்தின் பெயராலும் இன்றைய சினிமா உலகத்தில் நடக்கும் அதிக்கிரமங்களை ஜனங்கள் இன்றைக்குப் பொறுக்கலாம், நாளைக்குப் பொறுக்க மாட்டார்கள். வட்டியும் முதலுமாக வாங்கி விடுவார்கள். அதைப்பற்றி வேல் பிக்சர்ஸ் கம்பெனிக்குச் சிறிது கூட சந்தேகம் வேண்டியதில்லை.

பக்தர்களது படங்களைத் தயாரிக்க வேண்டுமானால், அவை குற்றமற்ற முறையில் தயாரிக்கப் பட வேண்டும். இடையில் கோமாளி மெட்டில் பாட்டுகளைப் போட்டு அமர்க்கள மாக்கக் கூடாது.

இப்படிச் செய்ய முடியா விட்டால் இந்தப் படங்களண்டையே போகக் கூடாது. இதை வேல் பிக்சர்ஸ் கம்பெனியார் உணர வேண்டும்.

துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், காட்சி சாலையின் வாசலில் 'கலியாணப் பந்தல்' இவைகள் எல்லோரையுமே மயக்க முடியாதென்பதையும் இவர்கள் உணர வேண்டும்.

இந்தப் பட்டினத்தார் படத்தின் ஒரு காட்சியின் வசூலில் கிடைத்த பணத்தில் ஏழைகளுக்கு அன்னமிடப் பட்டதாம். "பசுவைக் கொன்று செருப்பு தானம் செய்வது" என்றும் விரும்பத் தக்கதல்ல.

கடைசியாக வேல்பிச்சர்ஸ் கம்பெனிக்கு சில வார்த்தைகள். மத சம்பந்தமான படங்களைத் தயாரிக்கும் போது கொஞ்சம் இந்தக் கம்பெனி தாராள நோக்கங்களைக் கொண்டாக வேண்டும்; அவற்றில் கூடுமான

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீமதி. ஜீன் பார்க்கர்

[ஸ்ரீமதி. எஸ். கமலவேணி]

"இந்தப் படத்தால் உனக்கு அமோகமான நன்மை ஏற்படலாம்."—என்று பாஸடினு ஹைஸ்கூல் கிளீ கிளப்பிலிருந்த எட்டு சிறுமிகளடங்கிய ஒரு கோஷ்டியில் ஒரு பெண்ணைப் பார்த்து கூறினன் ஒரு காமிராக்காரன்.

அவன் எந்தப் பெண்ணை நோக்கிச் சொன்னானே அவள், 'என்னையா சொல்கிறீர்கள்?' என்று கேட்டாள்.

'ஆம், உன்னைத் தான் குழந்தாய். ஈஸ்ட்மான் ஜூனியர் சொன்னது இது வரையில் தவறியதே கிடையாது. ஜாக்கிரதையாக நடந்துகொள். நீ அவர்களிடம் சண்டைகிண்டை போட்டுக்கொள்ளாதே" என்று சொல்லிவைத்து ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான்.

இது இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த சம்பவம். ஹாலிவுட்டில், ஒலிம்பிக் விளையாட்டுகளை விளம்பரப்படுத்த வேண்டி சில கலாசாலைப் பெண்கள் படமெடுக்கப் பட்டனர். அந்த சமயமே மேற்குறித்த சம்பவம்.

இந்த காமிராக்காரரின் பெயர் மறைந்து விட்டது. ஆனால் பெண்ணான ஜீன் பார்க்கரின் பெயர் பிரசித்தி பெற்று விட்டது.

இந்தப் பெண்ணின் வாழ்க்கை பூராவும் முட்கள் நிறைந்தது. போராட்டத்தில் வாழ்கை நடத்தி வந்தாள் இவள்.

வறுமையில் பிறந்ததால் அவளுக்கு இன்பமே தெரியாமல் போயிற்று. சாப்பாட்டுக் கலங்களைக் கழுவிக் கொண்டே, தன்னை மணக்க ஒரு ராஜ குமாரன் வருவானென்று எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். இந்த பகற் கனவுகளே அவளை பைத்தியமாக்காமலிருந்தன.

அவள் மிகவும் வருந்தினதால், வயதுக்கேற்ற யௌவனம் அவளிடம் தோன்றவில்லை. அவளது கண்கள் கவலையின் கண்ணாடிகளாக விளங்கின.

அவள், மாண்டனா, டீர்லாட்ஜில் பிறந்தாள். அவளுக்கு அப்போது பெயர் மே கிரீன். காட்டையும், காற்று நிறைந்த இடங்களையுமே அவள் விரும்ப ஆரம்பித்தாள். அவள் ஒரு வருஷத்துக் குழந்தையாக் கும்போதே, அவளது பெற்றோர்கள், ஓரிகானுக்கு வந்து சேர்ந்தனர்.

'வறுமை வாயிற் கதவு வழியாக உள் நுழைந்தால், காதல் ஜன்னல் வழியாய் பறந்து செல்லும்' என்பது ஒரு பழமொழி.

அதே மாதிரி ஜீனின் பெற்றோர்கள் பிரிந்து விட்டனர்.

வேலை செய்தறியாத அவள் தாய், தனது சிறு பெண்களுடன் (அவளுக்கு ஒரு தங்கையுமிருந்தாள்) ரயில் ரோட்டிலுள்ள ஒரு சிறிய சந்தில் குடியேறினாள். சுமாராக அவள் படித்தவளான போதிலும், அவள் சொற்பக் கூலிக்கு வேலை செய்து வந்தாள்.

ஜீனுக்கு எட்டு வயதானதும், அவள் படுக்கைகள் செய்வதில் உதவினாள். ஒரு ஹோட்டலில், செய்திகளை, குறிப்பிட்ட விலாசதார்களுக்குக் கொடுக்கும் தொழிலையும் செய்து வந்தாள். அவள் கண்ணீர் விட்டு அழும்போது கல்வனெஞ்சமும் கலங்கிப்போய் விடும்.

மழை காலங்களில் ஜீன் சின்ன படங்களை வர்ணம் தீட்ட ஆரம்பிப்பாள். நீண்ட நாட்களுக்குப் பின்னரே அவள் 'போதிய பணம்' சம்பாதித்தாள். போதிய பணம் எப்படி யென்றால், "எனது தங்கைக்கு அடிச்சட்டை வாங்குவதற்குப் போதுமான பணம்" என்கிறாள் ஜீன் பார்க்கர். நகரத்திற்குச் சென்று, வாசற்படி வாசற்படியாய் ஏறி, படங்களை வாங்கிக் கொள்ளும்படி கெஞ்சியபோது, அவள் பால் பரிதாபம் கொண்டவர்கள் அவள் துயரத்தைப் போக்குவதற்காக அந்தப் படங்களை வாங்கினார்களே ஒழிய, அவள் படங்களின் பெருமையால் வாங்கவில்லை.

சில வருஷங்கள் கழிந்த பின்பு அவர்கள் உப்பேரி நகரத்திற்குச் சென்றனர். அப்போது அவளின் நாய் ஒன்றை, வறுமையின் கொடுமையால் ஓரிகானிலேயே விட்டுவிட நேர்ந்ததைக் கண்ட அவள் 8 நாட்கள் வரையிலும் விம்மி விம்மி அழுதாள். பபனென்ன? சமயம் வாய்த்தபோதெல்லாம் அவள்

பள்ளிக்கூடத்திற்குச் சென்று வந்தாள்.

அப்போது தான் ஜீனுக்கு ஒரு சம்பவம் நேரிட்டது.

அவள் அன்னை மீண்டும் கலியாணஞ் செய்து கொண்டாள். சிற்றப்பன் அவளுக்கு ஒரு தோழனாய் விளங்கினான். சித்திரம், தீட்டுதலையும், நடனமாடுதலையும் அவன் ஆதரித்தான். அவனது பெயர் ஹென்ரி கோல்வாட்.

"அவர் ஆபிரகாம் லிங்கன் மாதிரி. அவர் முகத்தில் புன்னகை இருந்து கொண்டேயிருக்கும். அவர் பிறரை நன்றாக அறிந்து கொள்வார்" என்று ஜீன் இப்போது அவரைப் பற்றிக் கூறுகையில் குறிப்பிடுகிறாள்.

இடையில் அவள் தாயாருக்கு பாரிசவாய்வு கண்டு விட்டது.

அப்போது ஜீனின் தகப்பனார் இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு, ஊர் ஊராய்ச் சுற்ற ஆரம்பித்தார். இதன் காரணமாக ஜீன் பல பள்ளிக்கூடங்களை ருசி பார்த்து விட்டாள்.

ஒரு சமயம் அவள் துன்பத்தினால் அதிகமாகத் தாக்கப்பட்டபோது அவள் தனது வீட்டிலிருந்து ஓடிச் சென்று ஓர் இளம் உபாத்தினியிடம் வசித்து வந்தாள்.

மீண்டும் அவள் பாஸடீனாவுக்கு வந்து சேர்ந்தாள். அண்டை அயல்களில் வேலை செய்தும், 'ஆர்கெஸ்டிராவில்' நடனமாடியும் ஜீன் குடும்ப காரியங்களுக்கு உதவி வந்தாள்.

ஒரு நாள். நாட்டிய மாடுமிடத்திலிருந்த ஒரு சங்கீதக் கருவியின் கம்பியை உடைத்து விட்டாள் ஜீன். அது அல்ப விவகாரம், ஆனால் ஜீன் அதைப் பிரமாதமானதாகக் கருதினாள். ஆகவே, அவள் தான் வியாதியால் வருந்துவதாகவும், வருவதற்கில்லை யென்றும் 'ஆர்கெஸ்டிரா' மானேஜருக்குச் சொல்லி விட்டாள். பாஸடீனாவில் ஜூனியர் டெக்னிகல் ஹைஸ்கூலில் ஓர் ஆசிரியை இருந்தாள். அவள் பெயர் ஆலிவர் பிலிப்ஸ். அவள் ஜீனை நாடகங்களுக்கும், நடனங்களுக்கும் நாட்டியங்களுக்கும் அழைத்துச் சென்றாள். இதனால் அவள் வறுமையின் துன்பத்தை சற்றேனுமாவது மறக்க முடிந்தது.

ஜீன் பார்க்கரின் தோற்றம். கீழே இருப்பது அவள் நடித்த படமொன்றின் காக்ஷி.

பின்னர் அவள் சிறு பெண்களுக்கு நாட்டியம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியையாக அமர்ந்தாள். இந்த அநுபவம், அவள் பிற்காலத்தில் நடித்த 'இருதய மிருக்கட்டும்' என்ற படத்தில் நன்கு சித்தரிக்கப் பட்டுள்ளது.

பின்னரே ஹாலிவுட் கோஷ்டியார் கேட்டிருந்தபடி 8 பெண்கள் காமிராக்காரரால் படமெடுக்கப் பட்டனர்.

இந்த 8 பெண்களின் படங்களும் ஹாபி பி. மேயரின் நிர்வாகக் காரிய தரிசியான இடா கோவர் மானிடம் சென்றன. அவள் படங்களை ஒன்றின் பின் ஒன்றாக பார்த்துவரும் போது, திடீரென்று ஒரு படம் அவளை வாரிப் போட்டது. ஒரு வானசாஸ்திரி கூட ஒரு புதிய நக்ஷத்திரத்தைக் கண்டு அவ்வளவு திகைப் படைந்திருக்க மாட்டான்.

அந்தப் படத்தை கையி லெடுத்துக் கொண்டு யோசிக்க ஆரம்பித்து விட்டாள்.

அச்சமயம் ஜீன் பார்க் கருக்கோ ஹைஸ்கூல் படிப்பு பூர்த்தியாக இன்னும் ஒரு வருஷமே உள்ளது. அந்த வருஷத்துக் கோடை காலத்தில் அவள் ஒரு மருந்துக் கடையில் கற்கண்டு விற்றுக்கொண்டிருந்தாள்.

அப்போது கடையில் ஒரு இளம் மாது நுழைந்தாள். அவள் ஜீனின் கண்களுக்கு மஹா சுந்தரியாகக் காணப்பட்டாள். அவள் தான் நார்மா ஷியரர்.

அடுத்த நாள் இடா கோவர்மானின் அந்த பெண்ணுக்காக ஆட்களை அனுப்பி வைத்தாள்.

அதே சமயம் நார்மா ஷியரர் அவள் முன்பு தோன்றினாள். "இடா, நான் என்ன சொல்லப்போகிறேன். ஒரு பெண் கற்கண்டு விற்கிறாள். ஆனால் அவள் ஒரு அற்புதமான அழகி' என்றாள் ஷியரார்.

'இவளை விடவா?' என்று ஒரு படத்தை எடுத்துக் காட்டினாள் இடா.

ஷியரார் கற்சிலை போலாகி விட்டாள்.

"இவளே நான் கூறும் பெண்" என்றாள்.

மிகுதி நடந்தது ஒரு கதை.

ஜீன் ஸ்டுடியோவிற்கு அழைத்து வரப்பட்டாள். அவளுக்கு உடனே ஒரு நீண்ட கால ஒப்பந்தம் அளிக்கப் பட்டது.

முதலில் கிடைத்த உண்டியலை அவள் தனது தாய்க்கும், சகோதரிக்கும் அர்ப்பணித்து விட்டாள். பின்னர் அவள் ஒரு சைகிள் வாங்கிக் கொண்டாள்.

'ராஸ்புடீனி'ல் ஒரு துண்டுப் பாத்திரத்தை தாங்கி நடித்தாள்.

பின்னர், 'பிசாசு மேற்கு நோக்கிச் செல்கிறது' என்ற படத்தில் அவள் கதாநாயகியாக நடித்தாள்.

நடித்துக்கொண்டே, அவர், பிரைவேட் ஆசிரியர்கள் உதவியினால் பி. ஏ., பட்டமும் பெற்று விட்டாள். சமீபத்தில் இவள் பட்ரெட் ஸ்டோனுடன் 'டெல்லில் வசிக்கும் உழவன்' என்ற படத்தில் நடித்திருக்கிறாள்.

குழந்தைகளுக்காக பிரத்தியேகப் படங்களை எடுக்க வேண்டுமென்பதே இவள் எண்ணம். இதற்காக அவளே திட்டங்கள் போட்டு, கதை எழுதி வருகிறாள். இதைக் கருதி வாரந்தோறும் கிடைக்கும் தனது சம்பளத்தில் ஒரு பங்கை மிச்சப்படுத்திவைத்து வருகிறாள். இப்படங்களைத் தானே இவள் டைரக்ட் செய்யவேண்டுமென்பதும் இவள் எண்ணம்.

வறுமையில் வாழ்ந்த இவள் இன்று செல்வத்தில் திளைக்கிறாள். ஆனால் அன்புக்கும் தாழ்மைக்கும் இன்றும் இவளிடத்தில் பஞ்சம் கிடையாது.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

வரையில் களங்க மிருக்கலாகாது. காசைக் கொடுத்து இவர்கள் படங்களைப் பார்க்க வருபவர்களுக்கு அறிவு உண்டென்பதை உணர்ந்து, அவர்கள் அவ்வளவு பேர்களையும் மடையர்களெனக் கருதாதிருக்கும் நிலையில் படங்கள் இருக்க வேண்டும்.

இல்லா விட்டால் எவ்வளவு சீக்கிரத்தில் வேல்பிச்சரின் பெயர் பிரசித்தி பெற்றதோ, அவ்வளவு சீக்கிரத்தில் அதன் பிரசித்தி மறைந்து விடும் என்பதை இப்போதே எச்சரிக்கின்றோம்.

என். விஜயகுமார்.

நமது பத்திரிகை
எல்லா சுதேசமித்திரன் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
மானேஜர்.



கலியாண விவகாரம்

[ஸ்ரீ டி. போவன் பார்டிங்டன், எப். ஐ. எல்: எப். ஆர். ஈ. எஸ்.]

கலியாணத்தின் நோக்கமென்ன? இலட்சியமென்ன?

(1) ஆண், பெண் இருபாலரிடத்திலும் உள்ள சிற்றின்ப உணர்ச்சி திருப்தி செய்யப்படுதல்.

(2) நல்ல பலமுள்ள சந்ததிகளைச் சிருஷ்டிப்பது.

(3) வாழ்க்கையின் இன்பத்தை அதிகரிக்கச் செய்வது. குழந்தைகளை சரிவர வளர்ப்பது!

இவைகளை வைத்துக்கொண்டு பார்க்கும்போது நோயாளிகளைக் கலியாணம் செய்துகொள்ள அநுமதிக்கலாகாது என்பது வெளிப்படை. ஏனெனில் அவர்களால் மேற்படி நோக்கங்களை நிறைவேற்ற முடியாது. இதைச் சொல்லும்போது காம நோய்களைப் பற்றி மட்டும் நான் கருதவில்லை; ஆனால் மனோ, தேக சம்பந்தமான இதர வியாதிகளும் கலியாணத்தில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். கலியாணம் செய்து கொள்வதற்கு முன்பு, ஆணும், பெண்ணும் தேர்ந்த டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்டு, 'சர்டிபிகேட்' வழங்கப்பட்ட பின்னரே கலியாணம் செய்து கொள்ள வேண்டியது என்று ஓர் சட்டம் நாட்டிற்கு மிக மிக அவசியம். இப்படிச் சொல்லும்போது என்னைப் பைத்தியக்காரனென்று பலர் கூறலாம். ஆனால் என்னைப் பொருத்த மட்டில் நாட்டின் நிலைமை மஹா கோரமாக விளங்குகிறதென்றே கூறுகிறேன்.

சர்க்காரோ, மிருகங்களின் பாதுகாப்புகளுக்காக சட்டம் செய்கின்றனர். நல்ல மாடுகள் அபிவிருத்தியாகவேண்டுமென்று கிராமவாசிகள் பாடுபடுகின்றனர். ஆனால் அறிஞர்கள், வலிமையிழந்து உடல் நலம் குன்றிவருவதைத் தடுக்க சர்க்கார் சட்டம் செய்யக் காணோம். மனிதக் கும்பலை அழிப்பதற்கு வேண்டியவற்றைக் கண்டு பிடிக்க லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப் படுகின்றன. நல்ல பலமுள்ள இளைஞர்களெல்லாம் ராணுவத்தின் அங்கத்தினர்களாகி விடுகின்றனர். குற்றவாளிகளும், காதகர்களும், முட்டாள்களும் சந்ததியைப் பெருக விடப் படுகின்றனர். உடல் நலம் ஒழிந்தவர்கள், குற்றவாளிகள், தரித்திரம் பிடித்தவர்கள், குடிகாரர்கள், விபசாரிகள், அல்பமனதுடையவர்கள் பிஞ்சில் பழுத்தவர்கள் இவர்களெல்லாம் கல்யாணம் செய்து கொள்வதை நமது சட்டங்கள் அநுமதிக்கின்றன. டாக்டர்களிடம் அத்தாட்சிபெற்று கலியாணம்செய்து கொள்பவர்களுக்கு' "ஆண்டவன் இவர்களை இணைத்து விட்டான்; காலம் ஒன்றே இவர்களைப் பிரிக்கும் சக்தியுடையது. மற்றது அப்படிச் செய்ய சக்தியற்றது," என்று வாழ்த்துக் கூறலாம்.

கலியாணத்துக்குத் தடையாயிருப்பவை காமநோய்களே (Vencreal Diseases) யாகும். வைத்திய சாஸ்

திரத்திலேயே இந்த நோய்களே மஹா பயங்கரமானவை. இந்த மாதிரி நோயால் வருந்தும், ஆணும், பெண்ணும், கலியாணம் என்ற பேச்சை கனவிலும் கருதக்கூடாது. ஆண் இதனால் வருந்துவதாயிருந்தால், அவனை மணக்கும் பெண்ணும் இந்த நோயை பங்கு கொள்ள வேண்டியிருக்கும். இதன் விளைவாக இருவருக்கும் பிறக்கும் குழந்தைகளும் அந்த நோயை பிறவிச் செல்வமாய் பெற்றே வெளிவருகின்றன.

காம நோய் கருநாகத்தின் விஷத்தைவிட கடுமையானது. நாகத்தின் விஷமானது மனிதனை நிமிஷத்தில் கொன்றுவிடும்; ஆனால் காமநோய் வருஷக் கணக்கில் ஆணையும், பெண்ணையும் சித்திரவதைக் குட்படுத்தி புழுப்போலத் துடிக்கச் செய்யும். இன்று வீதியில் காணப்படும் பெருவியாதி பிடித்தவர்களெல்லாம், ஒரு காலத்தில் பொன்மேனி பெற்றவர்களாகவே இருந்தார்கள். ஆனால் காமநோய்களின் முதிர்ச்சியே அவர்களை இன்று காணும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது.

அஸ்தப் பிரயோசம் கலியாணத்திற்கு முட்டுக் கட்டை போடுகிறதா? இந்தக் கேள்வியை பல இளைஞர்கள் எனக்கு அடிக்கடி எழுதி வருகின்றனர். இளம் பெண்களும் எழுதி வருகின்றனர். அஸ்தப் பிரயோகம் மிகவும் முட்டாள் தனமான பழக்கம் என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். அளவு மீறி இதில் ஈடு படுவது உடலுக்கு பெரிதும் பலவீனத்தைக் கொடுக்கும். ஆனால் இது கலியாணத்துக்கு முட்டுக் கட்டை என்று நான் சொல்ல முடியாது. இதில் ஈடு படும் ஒரு வாலிபன், கலியாணம் செய்து கொண்டதும் இதை மறந்து விடுகிறான். அத்துடன் அவனுக்கு இதில் இருந்த ஆசை முற்றுப் புள்ளி பெற்று விடுகிறது. பெண்களைப் பற்றி எடுத்துக் கொண்டால் இதுவும் இப்படித்தான். பெண்கள் அஸ்தப் பிரயோகப் பழக்கத்தில் ஈடு படுகிறார்களா என்று பலர் என்னைக் கேட்கிறார்கள். இதில் என்னைப் பொறுத்த மட்டில் சந்தேகமே கிடையாது. கண்களால் பிரத்யட்சமாகக் கண்டதிலிருந்தும், எனக்கு வாரந் தோறும் பெண்களிடமிருந்து வந்து குவியும் கடிதங்களி லிருந்தும், அஸ்தப் பிரயோகம் செய்யும் ஆண்கள் கூட்டத்தை விட, பெண்கள் கூட்டமே அதிகமானது என்பதை இங்கு வெளிப்படுத்தத்தான் வேண்டி யிருக்கிறது. காம உணர்ச்சி அதிகமாகவுள்ள ஆயிரக் கணக்கான பெண்கள் இந்த பழக்கத்தில் ஈடுபட்டே தங்கள் ஆவலைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். ஆனால் இப்படிச் செய்யும் ஒரு பெண், கலியாணத்துக்கு லாயக்குடையவள் என்பதில் ஒரு சிறு சந்தேகமும் கிடையாது.

பேடிகள்—அதாவது போக சக்தியை இழந்தவர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் கலியாணம் செய்து கொள்ளக் கூடாது. ஏனெனில், இப்படிக் கலியாணம் செய்து கொள்ளும் குடும்பத்தில் இன்பம் இருக்காது. சதா சண்டையும் சச்சரவுமாகவே இருக்கும். மனைவி இன்னொருவனிடம் சிற்றின்பத்துக்காக உடலை அர்ப்பணித்து விடுவாள். அவமானத்திற்கும் இடமாகும். போக சக்தி யிழந்தவர்கள் என்று சொல்லும் போது, சாந்தி முகூர்த்த இரவன்று, பேடியாக விளங்கும் ஆண்மக்களைப்பற்றி நான் கூறவில்லை. ஏனெனில் அந்த புதுமை அனுபவம் போய் விட்டதும், அவர்கள் போகத்திற்கு உரித்தான புருஷர்களாகி விடுகின்றனர். டாக்டர் டி. வெல்ட் ஒரு சமயம் இதைப்பற்றிக் குறிப்பிடுகையில், “30 வயதுள்ள மனிதன் ஒருவன், அந்த இரவில் தனது இளம் மனைவியுடன் கலவிக்கு முயற்சிக்கையில் அவன் முயற்சிகளெல்லாம் பயனற்று விட்டன. அதன்மீது அவன் தான் பிரயோசனமற்றவன் என்று அவளிடம் பகிரங்கமாக ஒப்புக்கொண்டான். ஆனால் அவளோ. ‘இல்லை! இது வெறும் நரம்புத் தளர்ச்சி! நாளடைவில் சரியாகிவிடும்’ என்று கூறினாள். அப்படியே நாளடைவில் அவன் நிலைமை ஒழுங்காகி விட்டது. அவர்கள் மதனனும் ரதியுமாய் விட்டார்கள்” என்று கூறினார். கலியாணத்திற்கு வயதும் மிகவும் முக்கியமானது.

ஆண் மகனுக்கு 28, 30 வயதே கலியாணத்திற்கு ஏற்ற காலம். பெண் மகளுக்கு 21-லிருந்து 25-வயது வரையிலும் கலியாணத்துக்கு உகந்த பருவம். இந்த வயதில் கலியாணம் செய்து கொள்பவர்கள்—நோயற்றவர்களாக யிருப்பார்களேயானால் — கடைசி வரையில் திடசரீரிகளாக இருக்க முடியும்.

ஆக, தக்க வயதில், சுகசரீரிகளாய், டாக்டர்களின் பரிசோதனைக் குட்பட்டு மணம் செய்து கொள்ளும் தம்பதிகள் வாழ்க்கை இன்பமயமாக ஜொலிக்கும். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் கடைந்தெடுத்த பதுமைகள் மாதிரி விளங்கி, தம்பதிகள் வாழ்க்கையின் இன்பத்தை அதிகப்படுத்தும்.

இந்த நிலைமைக்கு வேண்டியது சர்க்கார் சட்டமேயாகும்.

ஐரோப்பாவில் 4300 விதமான மலர்கள் இருக்கின்றன. ஆனால் இவைகளில் 420 மலர்களே நல்ல வாசனை யுடையவை.

“கவிரத்ன காளிதாஸ்”யில் ஸ்ரீமதி P. T. நாகபூஷணம்

சினிமா உலகமும் விளம்பர ஏஜண்டுகளும் *

(ஓர் ஒற்றையங்க நாடகம்)

"கிரிஜா சங்கர்"

(கீழ்ப்பாக்கத்தில் ஒரு பங்களா. பெயர் இந்திர விலாஸம். பங்களாவின் அறையொன்றில் ஆனந்த ரங்கச் செட்டியார் (சித்திரகலா டாக்கீஸ் சொந்தக்காரர்.) தமது பீப்பாய் வயிற்றைத் தடவிய வண்ணமிருக்கிறார். அவரது பக்கத்தில் மானேஜர் ராமநாத அய்யர் அமர்ந்துள்ளார். (தார்வான் 'விசிடிங்' கார்டு ஒன்றை மானேஜரிடம் நீட்டுகிறான். முகத்தைச் சுளித்தவண்ணம் அதை வாங்கிக்கொள்கிறார் அவர். அப்போது.)

செட்டியார்.—(யானைப் புகையிலையை வாயில் அடக்கிக்கொண்டே.) என்ன, எவனாவது பத்திரிகைக்காரனோ?.

அய்யர்:—ஆமாம்! 'ஆமாம்' தரித்திரங்கள்! நிசி, ஜாமம், ஒரு வேளை கிடையாது முண்டங்களுக்கு. பிசாசுமாதிரி ஒவ்வொன்னும் அலைஞ்சுண்டிருக்கு!. இப்போது வந்திருக்கே சனி, இது 'மோகானந்த விகடன்' ஏஜண்டாம். பெயரைப் பார்த்தீளா? மிஸ்டர். சங்கர். பி. ஏ. வாம். ஏதோ இரண்டெழுத்தைப் போட்டுண்டு இவா பண்றது சகிக்கல்லே.

செட்டியார்:—சரி, அந்த நாயை உள்ளேவிடச் சொல்லு. ரொம்ப கெஞ்சனுன்னு, 'கொலைக்கிற நாய்க்கு எலும்புபோட்ர மாதிரி ஒரு கால் பக்கம் கொடுத்தனுப்பு. க்ஷாமம்! பத்திரிகைலே அப்போதான் ஏதாவது தாறுமாறுன்னு உளராது.

(தார்வான் போகிறான். அடுத்த நிமிஷம் அவர்கள் முன்பு'புல்-ஹாட்டுடனும்' 'மூக்குக் கண்ணாடியுடனும் கையில் 'ஸ்டிக்'குடனும், ஒரு தோல் பையுடனும் அவர்கள் முன்பு பிரசன்னமாகிறார் ஒரு ஆசாமி'.)

வந்தவர்:—ஹல்லோ '.....ஹல்லோ'. (செட்டியார், அய்யர் இருவருடனும் கை குலுக்குகிறார்)

சங்கர்:—சார்! உங்களைப் பார்க்கவேண்டும், பார்க்கவேண்டும் என்று பல நாட்களாய் திட்டம் போட்டிருந்தது, இன்றுதான் பலித்தது. தமிழ் நாட்டில் (ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக்கொள்கிறார்) செட்டியார்வாளைப்போல் இன்று படமெடுக்கிறவர்கள்......

செட்டியார்:— (பரவசமடைந்தவராய், இடைமறித்து) அதை என் கேட்கிறீர்கள், ஒரு லக்ஷம் ரூபாய் போட்டு எடுத்த 'உலக்கைக் கல்யாணம்' படத்தை சுத்த மோசம்; எலக்டிரிக்கில் போட்டு எரிக்கணும்னு எழுதிட்டானே சார்; நல்லது கெட்டது இப்போது யாருக்குத் தெரியாது?

சங்கர்:—அவன் கிடக்கிறான் காலிப் பயல்! போன வருஷமெல்லாம் ரயில்வே பிளாட்பாரத்தில் முடிச்சுமாறி வேலை செய்துகொண்டிருந்தான்; எப்படியோ திடீரென்று கத்தரிக்கோலைப் போட்டுட்டு, பேனாவைப் புடிச்சுட்டான். பய, அந்தப் பத்ரிகேலே வந்து இன்னும் ஒரு மாதமாகல்லே. அதற்குள் எதை வேண்டும்னாலும் உளறிக் கொட்றான்.

(ராமநாதய்யர் குறுக்கிட்டு, ஆங்கிலத்தில்) 'மிஸ்டர்' இங்கே மூட்டை அளக்காதீர்கள்! 6-வருஷங்களாய் புத்திரிகைத் தொழிலில் இருந்துவரும் அவர் முகத்தைக்கூட நீங்கள் பார்த்திருக்கமாட்டீர்கள்! வந்த காரியத்தை சொல்லிட்டு நீங்களும் நட்வுங்கள். உங்களைப்போல் பத்துபேர்கள் வந்துவிட்டால் 'விடிஞ்ச'மாதிரிதான். கொஞ்சம் சாடை நிறுத்திக்கோங்கோ. வேறு இடத்திற்கு வேண்டியிருக்கும்.

(சங்கர் முகத்தில் அசடு தட்டுகிறது. ஆடுமாதிரி விழிக்கிறார்.)

சங்கர்:—(ராமநாதய்யரைப் பார்த்து) ஆங்கிலத்தில் 'எக்ஸ்கியூஸ் மி' சார்! நான் 'அதிர்வேட்டு' ஆபீஸிலிருக்கும் சப்-எடிடர் சந்திரமோஹன் என்று பார்த்தேன்............

ராமநாதய்யர்:— (தமிழில்) வந்த வேலையைச் சொல்லுங்கோ சார்! வளவளன்னு தவளைமாதிரி கத்துகிறீர்களே?

செட்டியார்:—(தமது உண்மை சொருபத்துடன்) ராமநாதய்யர்! இந்தப் பயலுவ வந்தா, நேரத்தை வீணா குட்டிச் சுவாடிக்கிறானுங்கோ! ஏதோ குல்ட்

* இதில் வரும் பெயர்கள் அவ்வளவும் கற்பனைப் பெயர்கள் ஒருவரையும், ஒரு ஸ்தாபனத்தையும் இவை குறிப்பிடுவன வல்ல.

சேரிலே உட்கார்ரதிலே, மூதேவிங்க, ஏதாவது இப்படிச் சொல்லிண்டே இருக்கு! அதுவும் கோணை எழுத்து ரெண்டு தெரிஞ்சுட்டுதுனா, நம் பிராணனை வாங்காதுகள்.

(சங்கர் முகத்தில் இன்னும் 'வெட்கம்' அதிகமாகிறது. ஆனாலும் சமாளித்துக்கொண்டு)

சங்கர்:—செட்டியார்வாள்! நம்ம பத்திரிகை இப்போது நாலாயிரம் காபிகள் போகின்றன. ஆசிரியர். மிஸ்டர். எஸ். ஜி. லோட்டா எம். ஏ. ஹானர்ஸ், தமிழ் நாட்டிலுள்ள ஆசிரியர்களில் தலை சிறந்த ஒருவர். இவர் பெயரை சீமைப் பத்திரிகைகள் கூட பிரசுரித்துள்ளன.

ராமநாதய்யர்:—ஆமாம் 'சார்' லோட்டாவை பெர்னார்ட்ஷா என்று சொல்கிறீர்களா? லோட்டா எழுதுவதுதான் சிரிப்பாய்ச் சிரிக்கிறதே! அவன் என்ன? எழுதுவது பேனாவிலா? அல்லது காண்டியிலா? சார்! உங்கள் எடிட்டர் மசியை உபயோகப்படுத்துவது கிடையாது போலிருக்கிறது சாம்பாரில் தானே பேனாவை தோய்த்து எழுகிறார், நான் ஆபீஸில் மானேஜராயிருந்தால், உங்கள் எடிட்டரை 'களபாக' டிபார்ட்மெண்டில் போட்டு விடுவேன்.

(சங்கர் இவ்வளவு வார்த்தைகளையும் கேட்காதவர் போல் இருந்துவிட்டு)

சங்கர்:—லண்டன் சினிமாப் பத்திரிகைகளெல்லாம் எங்கள் பத்திரிகைக்கு 'எக்ஸ் சேஞ்சுகள்' அனுப்புகின்றன. இந்த வாரம் கிரிடா கார்போ தனது காதலைப் பற்றிக்கூட ஓர் கட்டுரை நமக்கு எழுதியிருக்கிறாள்..........

ராமநாதய்யர்:—(ப்ரளியாக நகைத்துக்கொண்டே) ஆமாம்! நீங்கள் கொடுக்கும் காசுக்கு 'ஹிக்கின் பாதம்ஸ் புக்ஸ்டால்'காரன் பத்திரிகைகள் எக்ஸ் சேஞ்ச் கொடுக்கிறான்போலிருக்கிறது,.....லோட்டா மீது கார்போ காதல் கொண்டு விட்டாளோ!...ஆமாம் 'சார்'. உங்கள் பத்திரிகை, சீமையிலிருந்து வருகிறதே "ஸ்டிராண்ட் மாகஸின்" அதை மண் கவ்வ வைக்கிறது ....மிஸ்டர் சங்கர்! இந்த காஸ் எல்லாம் வேண்டாம். வந்த காரியத்தைச் சொல்லுங்கள்.(சங்கரின் அரைமீசை அலறுகிறது. குறைந்த ஸ்தாயியில்)

சங்கர்:—நமது பத்திரிகைக்கு ஒரு பக்கம் விளம்பரம் வேண்டும். இப்போது நீங்கள் தயாரிக்கும் 'கோயில் பந்தம்' என்ற படத்தைப் பற்றி நமது பத்திரிகையில்..........

ராமநாதய்யர்:—இதை முதலிலேயே செ. தொலைப்பதுதானே! நீர் இவ்வளவு நேரம் கிருந்தினால், உமக்கு ஒரு பக்கம் விளம்பரம் கொடுக்கிறேன். ஆனால் இது 'ட்ரயல்'தான். சார்ஜு கிடையாது. அடுத்த இதழுக்கு கால் பக்கம் கொடுக்கிறோம். அதற்கு வேண்டுமானால் பணம் கொடுப்போம். பக்கத்திற்கு 5-ரூபாய்தான் நம்ம ரேட். என்ன சம்மதமா?

(சங்கர், இருவருக்கும் வந்தனமளித்துவிட்டு அங்கிருந்து நகர்கிறார்)

(சங்கர் சென்றதும், செட்டியார் சற்று நேரத்திற்கு முன்புதான் வந்த தமிழ்ப் பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறார். திடீரென்று கன்றுக்குட்டிமாதிரி துள்ளுகிறார் செட்டியார். ராமநாதய்யரோ திகைத்துப் போகிறார். 'அம்பட்டப்பயலுவ,என்ன இப்படி எழுதியிருக்கான் என்று கோபமாகக் கேட்கிறார். ராமநாதய்யர் விஷயத்தை அறிந்துகொள்கிறார்)

அய்யர்:—எந்த கம்மனாட்டி பேப்பர்காரன் அப்படி எழுதிட்டான்.

(செட்டியார் அய்யர் கையில், 'ஒண்டர் உலகம்' பத்திரிகையைத் திணிக்கிறார். ராமநாதய்யர் பத்திரிகையின் ஏடுகளைப் பரபரவென்று தள்ளுகிறார். ஒரு பக்கத்தில் அவர் கண் லயிக்கிறது. உரக்க, நிறுத்தி, நிதானமாகப் பாடுகிறார்)

"நித்திரா கலா டாக்கீஸாரின்......'தூங்குமூஞ்சி துரைக்கண்ணு' என்ற சமூகப்படத்தில் நடித்துள்ள மிஸ். எலியாம்பாள் பாட்டுகளை பூனைபோல் பாடுவது சற்றும் பொருத்தமாயில்லை. காதல் ஸீனில் இவள் முத்தம் கொடுக்க மறுப்பதிலிருந்தே இவள் சினிமாவுக்கு லாயக்கற்றவள் என்பது நன்கு புலனாகிறது. இவளது தோழியாக நடிக்கும் மிஸ். கந்திரியின் பாடல்கள் கர்ணாமிர்தமாயிருக்கின்றன. ஏன்? இவள் பாடல்களுடன் 'ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஐஸ் ப்ரூட்கூட' இனிமையில் போட்டிப் போடமுடியாது. ஆனால் கதா நாயகனான மிஸ்டர். பி. ஏ. கே. மோ. தரம் ரேடியோ மாதிரி அலறுவதினால் படத்தின் சோபிப்பே போய்விட்டது. மொத்தத்தில் சமூகப்படமென்ற முறையில் இது பூரண தோல்வி அடைந்துவிட்டது. இப்படி வடிகட்டின அசத்துக்களை நடிகர்களாகப் போட்ட இந்தக் கம்பெனியாரின் நெஞ்சு வன்மையை குண்டுபோட்டுக் கொளுத்தினால்

அய்யர்:—சுத்த பேமானித்தனமாக வல்லவோ இருக்கிறது!

செட்டியார்:—ராஸ்கல்,விளம்பரம் கொடுக்கவில்லையென்றுதானே இப்படி வைகிறான்!

அய்யர்:—ஆமாம்! திருட்டு நாய்! படவாப் பயல் இப்போது என் எதிரிலிருந்தால் அவனுக்கு பாதுகா பட்டாபிஷேகம நடத்திவிடுவேன்.

செட்டியார்:—இவனை இப்படியே விட்டுடக்கூடாதுன்னா? அல்லாடியிடம் 'கன்ஸல்ட்........'

அய்யர்:—ஆமாம். பத்திரிகைக்கு பேப்பர் வாங்க தாளம் போட்ர இவன், எவ்வளவு நீளமா எழுதரான்; தடிக் கழுதை! இவனுக்கு இங்கிலீஷ் கூட சரியாத் தெரியாதே!......... ..

(இந்த சமயம் இருவர் அவர்கள் முன்பு தோன்றுகின்றனர். ஒருவர் ஆண். இன்னொருவர் பெண். வந்தவர் கதர் மயமாக விளங்குகிறார், நல்ல தடிச் சரீரமும்கூட. உட்கார்ந்ததும் 'ஸ்டேட் எக்ஸ்பிரஸ் சிகரெட்டுகளை' எடுத்து செட்டியாரிடமும், ராமநாதய்யரிடமும் நீட்டுகிறார். இருவரும் வாங்கிக் கொள்கிறார்கள்).

செட்டியார்:—இதுதானோ நீங்கள் சொன்ன உரு!

வந்தவர்:—ஆமாம்! சின்னக்குட்டிதான், ஆனால் சொகுசாப் பாடுவா! ஆட்டமும் கொஞ்சம் அப்பியாசமிருக்கு! தங்கள் தயவிருந்தா, இவ தானா முன்னுக்கு வந்துட்ரா!

செட்டியார்:—(பல்லிளித்துக்கொண்டே) குட்டீ! உனக்கு என்ன வயசு!

அந்தப் பெண்:—(மெதுவான குரலில்) சேக்கா, 14-வயசு. போன பௌர்ணமிக்குத்தான் திரண்டேன்.

(செட்டியார் பரவசம் அதிகமாகிறது)

செட்டியார்; —(வந்தவரை நோக்கி) சம்போ சங்கர்! உங்க 'செலக்ஷன்'ரொம்ப திருப்தி.பகு திருப்தி. (இந்தப் பக்கம் திரும்புகிறார்) ஏ குட்டி! உன் பெயரென்ன?.

பெண்:—எங்கப்பா, அம்மா வெத்த பெயர் எச்சிமி. சினிமாவுக்காக நான் மிஸ் சுந்தரி என்று பெயரை மாற்றிக் கொண்டு விட்டேன்.

செட்டியார்:— அதுதான் சரி! ரொம்ப சரி! ஒரு பாட்டு பாடு பார்க்கலாம்.

(மிஸ் சுந்தரி, 'வாடா மதனா? வேதனை தணிய வனிதை யான் வேண்டுறேன் வருத்தமும் விடடா) என்ற பாட்டைப் பாடுகிறாள்.

(செட்டியார் மெய் மறந்து விடுகிறார். பெண்ணோ ராமநாதய்யருக்குக் கடைக்கண்ணால் வரப்பிரசாதம் சாதிக்கிறாள்)

செட்டியார்:—ஆ! ஹா! ஹா! சபாஷ்! சம்போ சங்கர்! சுந்தரிக்குத்தான் நம்ம கம்பேனிலே 'ஹீரோயின்' பார்ட். மாதம் 5000 போதுமா?

சம்போ சங்கர்:—செட்டியார் அவாள். கோவிச்சக்கப்படாது. வயசைப் பார்த்து சம்பளம் போடுங்கள்...

செட்டியார்:— சரி! மேலே 500...... என்ன சுந்தரி, சம்மதமா!

சுந்தரி!:— (சம்போ சங்கரைச் சுட்டிக் காட்டி) மாமாவுக்கு சம்மதமானால் எனக்கும் சம்மதந்தான்.

(சம்போ சங்கர் கல கல வென்று ரசிக்கிறார்)

சங்கர்:— அதிர்ஷ்டம்னா, இப்படித்தானே அடிக்கணும்! இனிமே சுந்தரி என்னை ஏன் கவனிக்கப் போகிறாள்! புகழ் பெற்ற நக்ஷத்திரமாகி விடுவாள். அப்புறம் அவளைப் பேட்டி காண்பது கூட அரிதாகி விடும்,

(ஊம்:— என்று பெருமூச்செறிகிறார். சுந்தரி அப்போது கண்ணினால் ஒரு வெட்டு வெட்டுகிறாள்)

ராமநாதய்யர்:— சங்கர்! நாழிகையாகிறது! ஆர்யா சினிடோன் கம்பெனி முதலாளி ராம்லால் சிங் வரும் நேரமாகி விட்டது. விஷயத்தை சுருக்க முடித்துக் கொள்ளுங்கள்.

(செட்டியார் ஏதோ அவசரமாக வெளியில் போகிறார். ராமநாதய்யர் சுந்தரியிடம் வருகிறார். தலையை தாழ்த்திக் கொள்கிறாள் அவள். மெதுவாக அவள் முகவாய்க் கட்டையில் கையை வைத்து தூக்குகிறார். கன்னத்தில் லேசாக ஒரு அடி கொடுத்து)

'ஏது' சின்னக்குட்டியா யிருந்தாலும் பலே கைகாரியாக யிருக்கிறாயே!

சங்கர்:— அடீ! எச்சிமி! அய்யர்வாள் தான் ஆதரவு! இவர் நம்ம ஜாதி டீ! செட்டிப் பய 'பேருக்குதான்' அய்யர் இஷ்டத்திற்கு ஒண்ணும் குறுக்கே நிக்கப்படாது ......(அய்யரை நோக்கி) ராமநாதய்யர்! இவள் உங்கள் முறிச்சிறுக்கி மாதிரி......(அப்போது செட்டியார் உள்ளே நுழைகிறார்) இவளை கசக்கி வேலை வாங்குவதில் செட்டியார் தயவு காட்டினாலும் நீங்கள் காட்டக் கூடாது, சும்மா கிடைக்காது நக்ஷத்திரப் பதவி!

(அது சமயம், பூம்! பூம்! என்று மோட்டா ஹார்ன் சப்தம் கேட்கிறது! செட்டியார் தனது ஆசனத்தில் நன்றாக உட்கார்ந்து கொள்கிறார். சுந்தரி ஒரு புறமாய் ஒதுங்கி நிற்கிறாள். பிளேஸர்

கோட், ரோலிங் காலர், மூக்குக் கண்ணாடி இவைகளை யணிந்த் ஒரு நவநாகரிகப் பேர்வழி, உதடுகளில் சிகிரெட்டை இடுக்கிய வண்ணமாய் உள்ளே நுழைகிறார். அவருடன் மற்றொரு மாணவனைப் போன்ற வரும் வருகிறார்)

செட்டியார்:— வாங்கோ! வங்கோ! உங்களுக்காகத்தான் பம்பாய் போவதைக் கூட நிறுத்தி விட்டேன். (இடையில் ராமநாதய்யர் ஆங்கிலத்தில் முகமன் கூறி அவரை வரவேற்கிறார்) இவர் யாரோ? தங்களுக்கு நண்பரோ?

ராமநாதய்யர்:— (அந்த மாணவன் போன்றவனிற்கும் திக்கைப் பார்த்து) இந்தப் பெரிய வரையா கேட்கிறீர்கள். இவர்தான் 'சிடி சினிமாஸ் ஏஜன்ஸி மானேஜர்' மிஸ்டர் எ. எம். வி. நாதன்......மிஸ்டர் ராம்லால் இவனை எங்கே பிடித்தீர்கள்.

ராம்லால்:— (சூர்யா டாக்கீஸ் லிமிடெட் சொந்தக்காரர். ஆங்கிலத்தில் இவனை நான் எங்கே பிடிக்கிறேன்! இவன் தான் என்னைப் பிடித்துக்கொண்டிருக்கிறான்? எங்கு போனாலும் நன்றியுள்ள நாய் மாதிரி பின் தொடருகிறான்......உடும்புகூட இவனை விட மேல் சார்!

(ராம்லால், ராமநாதய்யர், சங்கர், சுந்தரி, நாதன் சிரிக்கிறார்கள். இங்கிலீஷ் தெரியாதபோனாலும் செட்டியாரும் சிரிப்பில் கலந்து கொள்கிறார். அப்போது தான் ராம்லால் சம்போ சங்கரைப் பார்க்கிறார்)

ராம்லால்:— ஏது! இந்தப் பாப்பான் (ராமநாதய்யரைப் பார்த்து கண் சிமிட்டிய வண்ணமாய்) எங்கும் வந்து சேர்ந்து விடுகிறானே.

என்ன அய்யங்கார்வாள்! ஏது? புது சரக்குடன் சஞ்சாரமோ?

சம்போ சங்கர் கொஞ்சம் முகத்தைச் சுளிக்கிறார்.)

செட்டியார்:— என்ன இப்படி புது கல்யாணப் பெண்மாதிரி வெட்கப்படுகிறாயே! எல்லாம் நம்மவாத்தான். சும்மா! கூச்சப்படாமே இருங்கோ.

ராம்லால்:—(சுந்தரி பக்கம் திரும்பி)

செட்டியார்! இந்த அம்மாள்............

செட்டியார்! :— ஓ, சுந்தரியா! நம்ம கம்பெனிலே புது ஆக்ட்ரஸ்! மாதம் ரூபாய் 6000 சம்பளத்தில் இன்றுதான் அமர்த்தியிருக்கிறேன்............

ராம்லால்:— ஓ!. டேம் சீப்!. நெவர் மைண்ட். சனி நன்றாயிருக்கையில் காசு கொடுக்க கண்ணீர் விடவேண்டிய தில்லை. (சங்கர் பக்கம் திரும்புகிறார்)

'மிஸ்டர் சங்கர்! ஏது! எங்களை யெல்லாம் கவனிக்கப் படாதா? எங்கள் ஸ்டுடி யோவில்' ஒரு 'லீடிங் ரோல் வான்டட்!' யாராவது உங்கள் மாரிபத்தில்......

(அப்போது, சுந்தரியின் கண்களும், ராம்லால் கண்களும் பேசிக் கொள்கின்றன.)

சங்கர்:— யார் யார் கொடுத்து வைக்கிறார்களோ அவாளுக்குத் தானே கிடைக்கும். பார்ப்போம்!

(இதற்குள் செட்டியார் குமாஸ்தா நாராயணன் வருகிறான். வந்தவன் ராமநாதய்யரைப் பார்த்து)

சார்! "கலாட்டா" பத்திரிகைக் ஏஜண்டு 'டாக்கி டாக்கி' படத்தின் பிளாகுகள் கேட்கிறான். போன தடவை கொடுத்த பிளாக்குகளே இன்னும் வந்து சேர வில்லை.

ராமநாதய்யர்:— க்ஷாம தேவதைகள்! இந்த மாதிரி பிளாக்குப் பிச்சை எடுப்பதை விட க்ஷவரம் செய்வது தானே! பொழுது விடிந்தால், இந்தப் பிளாக்கு கொடு! அந்த பிளாக்கு வேண்டாம்! இவனுக்கு விளம்பரமும் கொடுத்து, பிளாக்கும் வேறெயா! போ! கொடுக்க முடியாதுன்னு சொல்லிவிடு;,

(குமாஸ்தா போய் விடுகிறான்)

ராம்லால்:—(மிஸ்டர் நாதனைப் பார்த்து) என்னடா! உன் திருவாயைத்தான் கொஞ்சம் திறவேன். எந்தப் பெண்ணுக்கு உலை வைக்கலாம் என்று யோசிக்கிறாய்? ......அட பூல்! (fool) தமாஷாய்த்தான் பேசேன்.

மிஸ்டர் நாதன்:—சும்மா இருங்க பிரதர்! கிராமபோன்மாதிரி ஓயமாட்டேனென்கிறீர்களே!

ராம்லால் சிங்:—மிஸ்டர் ராமநாதய்யர்! நம்ம நாதனுக்கு கல்யாணமானதுதான் தெரியுமே!

அய்யர்:—ஆமாம்! விஷயமென்ன? எங்காவது அவள்.........

ராம்லால்சிங்:—ஓ, அப்படியெல்லாமொன்றுமில்லை. இவன்தான் பகல் முழுவதும் 'அட்வர்டைஸ்மென்டுக்கு திரிகிறான்! நமக்கோ பகல் முழுதும் தூக்கம். இவனுக்கு நல்ல கிராக்கி கிடைக்காதா?

(ஒரு பெரிய குடும்பத்தில் பிறந்து, இன்டர்மீடியட் படித்து, தலைவிதியால் படமுதலாளிகள் நட்பைப்பெற்ற நாதன்).

என்ன பிரதர்! எப்பவும் தமாஷ்தானா!

ராம்லால்:— (அவரைப்பார்த்து), என்ன பிரதர்! எப்பபார்த்தாலும் இப்படி அழுகிறீர்களே!

(தொடர்ச்சி 19-வது பக்கம் பார்க்க)

-:: பாமா பரிணயம் ::-

படம் தயாரித்தவர்கள்-ராயல் டாக்கி டிஸ்ட்ரிபியூட்டர்கள் (மதுரை)

டைரக் செய்தவர்—ஒய். வி. ராவ்.

போடோ கிராபி—ஜித்தன் பானர்ஜி.

சாமா, வித்வான் சீனிவாசன், எம். ஜி. தண்டபாணி, டி. பி. ராஜலக்ஷ்மி, சா. நடேச அய்யர் இவர்கள் பிரதம நடிகர்கள்.

கதை உங்களெல்லோருக்கும் தெரியும். ஆக, அதை விடுத்து மேலே போகிறேன்.

படம் எடுத்த எடுப்பிலேயே ஒரு வெறுப்பை சிருஷ்டித்துவிடுகின்றது. கடற்கரையில் சத்ராஜித் சூரியனை நோக்கித் தவம்புரிவது ஆரம்ப கட்டம். இதில் சேய்மைத் தோற்றத்தில், கடற்கரையில் சத்ராஜித் உட்கார்ந்திருப்பதாகக் காட்டப்படுகிறது. ஆனால் அண்மைத் தோற்றத்தில் (Close up) இவர் பக்கத்தில் ஏதோ பாறைகள் தோன்றி, மலை யடியில் அவர் தவம் செய்கிறாரென்பதைக் காட்டுவதாயிருக்கிறது. சேய்மைத் தோற்றத்தை கடற்கரையிலெடுத்துவிட்டு, அண்மைத் தோற்றத்தை ஸ்டுடியோவில் எடுப்பவர்கள் இந்த மாறுதலை அலட்சியமாகக் கருதியிருப்பது ஆச்சர்யப்படத் தக்கதாகவேயிருக்கிறது. தவிரவும் இந்தக் காட்சியைத் திரும்பத் திரும்பக் காட்டுவது எவ்விதத்திலும் அறிவுடைமையாகாது.

இரண்டாவதாக சத்ராஜித்தின் தோற்றம் மஹா ஆபாசம். நெற் குதிர்போல் அவன் உடல் காணப்படுகிறது. பாட்டும் சுத்த மோசம். அடுத்தபடி சூரிய பகவான் அவன் முன்பு பிரத்யட்சமாகிறான். சூரியன் முகம் அசல் ஹனுமாரையும் தோற்கடிக்கக்கூடியதாயிருக்கிறது. இவன் 'சுகமே வாழ்வாயாக' என்று சொல்லும் போக்கு, 'நீ செத்துப்போவாயாக' என்ற அர்த்தத்தில் தொனிக்கிறது. பின்னர் நாரதர் தோற்றம். தமிழ்நாட்டு நாரதரை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். ஆதலின் அவரைப்பற்றி விவரிக்க வேண்டியதில்லை. "உன்னதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்"என்று நாரதர் சத்திராஜித்தை நோக்கி அழுத்தந் திருத்தமாகச் சொல்லும்போது, "வித்வான் சீனிவாசன்' நீங்கள் சினிமாவில் நடிக்கிறீர்கள். உங்கள் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம் "என்று சொல்லவேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் உண்டாகிறது.

கிருஷ்ணன், பலராமன் வேஷங்களைப்பற்றியும் உங்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டியதில்லை. அதே மயில்கொண்டைக் கிரீடம். தலைவிரிகோலம். கழுத்தில் குருவிக்காரன்மாதிரி கண்ணாடி முத்த மாலைகள். சுருக்கமாகச் சொல்லப் போனால் தமிழ் நாட்டுக் கிருஷ்ணன் 'பேடன்ட்' உருவம் இதிலும் விட்டபாடில்லை.

சத்தியபாமா ஒரு அரசன் மகள். இவள் அரண்மனையை அரண்மனையென்று சொல்லமுடியாது. இருக்கும் தோழிப்பெண்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள். 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி' என்பது ஒரு பழமொழி. அதே மாதிரி, 'இராஜகுமாரி எப்படி, தோழிகள் அப்படி'யே இருக்கின்றனர். அதாவது முக அழகில். என்னதான் அலங்காரம் பண்ணிக்கொண்டாலும் ஸ்ரீமதி. டி. பி. ராஜலக்ஷ்மி 14-வயதுப் பெண்ணை முடியாது என்பதை சத்தியபாமை வேஷம் இடித்துக் காட்டுகின்றது. ஆனால் கிருஷ்ணன் அழகைப் பார்க்கும்போது, 'கூழுக்கு மாங்காய் தோற்கவில்லை' என்று கூறிவிடலாம்.

ருக்மணியின் அழகோ ஒரு தனி. வாஸ்தவத்தில் இந்தக் கண்றாவிக் காட்சிகளை தமிழன் ஒருவன் தான் சகித்துக்கொண்டிருக்க முடியும். மற்றெவனாலும் முடியாது.

கிருஷ்ணன் அரண்மனையும் இதே கதிதான். மகரந்தன் என்பவன் தான் கிருஷ்ணனுக்கு நண்பனாய், மந்திரியாய், (டாபர்) மாமாவாய் விளங்குகிறான். இந்த மாதிரி ஒருவன் கிருஷ்ணனுக்கு நண்பனாய் இருந்தானென்றால், அந்தக் கிருஷ்ணன் பகவானல்ல. ஒரு கோமாளி, என்றே சொல்ல வேண்டும்.

கண்ணாடி முன்பு நின்று சத்தியபாமை பாட்டுப் பாடுவது சகிக்கமுடியாத காட்சியாக இருக்கிறது. அவ்வளவு 'மேக்-அப்பு'ம் ஸ்ரீமதி. ராஜலக்ஷ்மியைக் கிழக் களையினின்று காப்பாற்ற முடியாமற் போய்விட்டிருக்கிறது. இந்த இடத்தில் ஸ்ரீமதிக்கு நான் சொல்ல விரும்பும் யோசனை: நீங்கள் கோஹரைப் போல் சின்னஞ்சிறு பெண்ணாக மாற முயற்சி செய்யாதீர்கள். அந்த அம்மாளுக்குத்தான் அவர் உடல் அதற்கு இடங்கொடுக்கவில்லையென்றால், உங்களுக்கோ முகத்தின் அழகு இடம் கொடுக்கமாட்டேனென்கிறது. ஆதலின் தாங்கள் சின்னப் பெண்

வேடம் தவிர மற்ற வேடங்களைத் தாங்கி நடித்தால் கட்டாயம் புகழ் பெறுவீர்கள்'' என்பதே.

காதல் காட்சிகளில் ஒரு சில இடங்களில் 'மின்னல்'கள் தோன்றி மகிழ்ச்சியை விளைவிக்கின்றன. அது தவிர, அவ்வளவு காட்சியும் மஹா ஆபாசமானவை. பாமாவுக்கும், கிருஷ்ணனுக்கும் நடக்கும் தர்க்கங்கள் மஹா மட்ட ரகத்தைச் சேர்ந்தவை. 'மதனனும் ரதியும்போல கூடி மகிழ நல்ல நேரமே; மதுர இதழ் கனி அதரம் பருகி நாம் மருவிப் பெறுவதே சாரமே'' என்று கிருஷ்ணனும் பாமாவும் சேர்ந்து பாடுவது கேலிக்கூத்தல்லாது வேறென்ன?

இடையில் இந்தக் கிருஷ்ணன் சிநேகிதனான மகரந்தனுக்கும், பாமா தோழியாகிய நளினிக்கும் நடக்கும் தர்க்கப் பாட்டுகள் படத்தின் மகத்துவத்தைப் பாழ்படுத்துகின்றன. 'தளுக்குக்காரத் தங்கம் தயங்குவனே சிங்கம்-வெளக்கெண்ணை மினுக்கே, வேண்டாமடி இந்தக் குலுக்கே' என்கிறான் மகரந்தன. 'மயக்கமேனுங்க போங்க, மரியாதை கெடவேண்டாங்கோ' தயக்கமேனுங்க நீங்க சும்மா தவிச்சு தவிச்சு யேங்க' என்கிறாள். இவள் சொல்லும் பதிலின் அர்த்தம் கடவுளுக்குத்தான் புரியவேண்டும்.

காட்சிக்குக் காட்சி குவிந்துகொண்டே போகும் ஆபாசங்களுக்கு இந்தப் படத்தில் கணக்கே கிடையாது.

இதில் டைரக்டர் இரண்டிடங்களில் காட்டியுள்ள திறமை மிகவும் பாராட்டத் தக்கது;—

முதல் இடம்:—கண்ணன் ஞாபகத்தோடு சத்தியபாமை படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறாள். அப்போது 'கண்ணா என்னை அழைத்துக்கொண்டு போய் விடு; நான் இனி இங்கிருக்கமாட்டேன்' என்று வாய் பிதற்றுகின்றாள். இதே சமயம் ஜயசேனனும், சததன்வனும் அவளை அப்படியே தூக்கிச் செல்கின்றனர். கனவில் மூழ்கிய அவள் கருத்து, அந்த சம்பவத்தில், கிருஷ்ணன் தான் தன்னை எடுத்துக்கொண்டு போகிறான் என்று கருதி நிம்மதியாய்ச் செல்கின்றது. கூச்சல் ஒன்றும் போடவில்லை. இது வாஸ்தவத்தில் பாராட்டத் தக்க கட்டம். இரண்டாவது கட்டம் ஜாம்பவனின் குகை. இங்கு கிருஷ்ணன் புள்ளாங்குழல் வாசிக்கிறான். குழலின் நாதத்தினால் தன் வயமிழந்த ஜாம்பவதி நடனமாடத் தொடங்கிவிடுகிறாள். இந்த இடம் எல்லோருக்கும் இன்பமளித்தது.

மூன்றாவதாக டைரக்டர் ஒரு திறமையாக ஒரு வேலையைச் செய்திருக்கிறார் என்று எதிர்பார்த்தது ஏமாற்ற மளித்துவிட்டது. சத்ராஜித்தின் நிலைமையைக் கண்ட அரண்மனை வாசிகள், 'ராஜாவுக்குப் பைத்தியம்' என்று சொல்லிக்கொண்டே போனார்கள். ஆனால் அங்கு நடந்ததைப் பார்த்தால் ராஜாவுக்கு ஒரு பைத்தியமுமில்லை. அவர்களுக்குத்தான் பைத்தியம் என்று நிச்சயிக்கவேண்டி நேர்ந்துவிட்டது. இதை கர்வமுற்ற அரசன் கதை முறையில் டைரக்டர் முடித்திருக்கலாம். ஒரு கர்வமுற்ற அரசன் கடவுளைப் பற்றி பழித்தவன்-நல்ல சுய வுணர்வுடனிருக்கிறான். ஆனால் எல்லோரும் அவனை தங்கள் அரசனென்று ஏற்றுக்கொள்ள மாட்டேனென்கிறார்கள். சுத்தப் பைத்தியக்காரன் என்று சொல்கிறார்கள். அரசன் மனமுடைந்து பின்னர் தன்னைப் பூரணமாக ஆண்டவனிடம் ஒப்படைத்துவிடுகிறான். அப்போது அரசனை மீண்டும் ஜனங்கள் தங்கள் அரசந்தானென்ன அங்கீகரிக்கின்றனர். இதே மாதிரி சத்ராஜித்தையும் செய்திருந்தால் அந்தக் கட்டம் அர்த்தமுடையதாக இருந்திருக்கும்.

போடோகிராபியைப்பற்றிப் பேசவேண்டுமானால் ஒரு சில இடங்களில் தவிர,—இதைக்கூட காமிராவின் தவறென்று சொல்ல முடியாது...மற்ற இடங்கள் பூராவும் ஸ்ரீ. ஜித்தன் பானர்ஜி நமது பாராட்டுக்குரியவர். ஒலிப்பதிவும் நன்றாகவே உள்ளது.

மொத்தத்தில் கூறப்போனால் ஸ்ரீமான்கள். சாமா, ஆர். நடேச அய்யர், எஸ். எஸ். ராஜாமணி, ஆர். ரங்க நாயுடு அவர்கள் முன்னுக்கு வரக்கூடிய நடிகர்கள். விசேஷமாக ஸ்ரீமதி. எஸ். எஸ். ராஜாமணிக்கு பெரிதும் முன்னேற்றத்திற்கு ஏராளமான இடமிருக்கிறது.

இவ்வளவு தமிழ்ப் படங்கள் வந்தும் இந்தப் படம் சிறிதுகூட நன்றாயில்லை யென்று சொன்னால் அதன் பிற்போக்கை நாம் விளம்பரப்படுத்தவேண்டியதில்லை.

* * *

புராணப்படங்களில் இம்மாதிரி கண்ணனையும் கிருஷ்ணனையும் கூட்டி ஜனங்களை இன்னும் ஒரு வருஷம் மயக்கலாம்; அல்லது இரண்டு வருஷங்களுக்கு மயக்கலாம், ஆனால் அப்புறம்.........

எதிலெடுத்தாலும் ஹாஸ்யத்தைப் புகுத்துவதென்பது கொஞ்சம்கூட மன்னிக்க முடியாத ஒரு விஷயம். அதிலும் பகவானைப்பற்றி சித்தரிக்கப்படும் கட்டங்களில் அசம்பாவிதமாக ஹாஸ்யத்தைக் கலப்பதானது, 'கலம் பாலில் துளி விஷம் கலந்ததாகி' விடும்.

புராணப்படங்களை சரியானபடி சித்தரிப்பதில் சக்தியற்றுக் கிடக்கும் தமிழ்ப்பட முதலாளிகள் சமூக சம்பந்தமான படங்களை எடுக்கவேண்டும்.

பாட்டுகள் இனிமையானவைகளாக இருக்கவேண்டும். அடிக்கொன்றும், அசைவுக்கொன்றும் இருக்கும் அர்த்தமற்ற பாட்டுகளினால் மண்டையிடி கண்டுவிடுகிறது. இதை முதலாளிகள் நிறுத்தாவிட்டால், என்றாவதொருநாள், பொது ஜனங்கள் ஆத்திரத்துக்கு படம் இலக்காகியே தீரும். இதை எவரும் விரும்பமாட்டார்கள் என்பதே எமது நம்பிக்கை. இதுவே இவர்களுக்கு நாம் கூறும் யோசனை.

இந்தப் 'பாமா பரிணயப் படத்தில்' பாட்டுக்களும் சம்பாஷணைகளும் மஹா கந்தலானவை. நல்ல சம்பாஷணைதான் 'டாக்கி'யின் முக்ய அம்சம். இந்த முக்கிய அம்சம் இல்லாததை 'டாக்கி' என்று கூறுவது, 'காக்கை'யை 'கிளி' என்று கூறுவதாகவிருக்கிறது.

'விமர்சனக்காரர்கள் கத்துகிறார்கள்; அதை நாம் கேட்பதா?' என்று பட முதலாளிகள் எண்ணக்கூடாது. இப்படி எண்ணுவதனால் நாளை ஏற்படும் பலன்களை விமர்சகர்கள் அனுபவிக்கமாட்டார்கள்; பட முதலாளிகளே அநுபவிப்பார்கள். இந்த உண்மையை ராயல் டாக்கி டிஸ்டிரிபியூட்டர்களும் தெரிந்துகொள்ளவேண்டும்.

''கிரிஜா சங்கர்''

(16-பக்கம் தொடர்ச்சி)

(பின்னர் செட்டியாரும், ராம்லாலும் எழுந்து வெளியே செல்கின்றனர்)

சம்போ சங்கர்:—(தனியாக ராமனாதய்யரை ஒரு புறம் அழைத்துச்சென்று மெதுவாக) என்ன ராமனாதய்யர்! டயம் ஆகிவிட்டது. இந்த இதழுக்கு ஒரு பக்கம் போட்டுக்கொள்ளட்டுமா?

அய்யர்:—சங்கர்! நீங்கள் இனி அடிக்கடி எங்களைக் கேட்டுக்கொண்டிருக்கவேண்டியதில்லை. இன்றைய இரவே ஒரு வருஷத்துக் கண்டிராக்ட் எழுதிவிடுவோம். பக்கத்துக்கு 15 ரூபாய் ரேட். ஸ்பெஷல் ரேட் என்பது ஞாபகமிருக்கட்டும். ஏதோ உங்கள் 'கொக்கரக்கோ' பத்திரிகையின் வருஷ மலர் வருகிறதென்று சொன்னீர்களே அது எப்போது?

சங்கர் இன்னும் 10 தினங்களில் வந்துவிடும்.

அய்யர்:—சரி! மேல் ராப்பருக்கு இந்த மேட்டரை போட்டுவிடுங்கள். (பாக்கெட்டிலிருந்து ஒரு விளம்பரத்தைக் கொடுக்கிறார்) ரேட் 200. திருப்திதானே?

சங்கர்:—திருப்தியல்லாமல் என்ன? சந்தோஷம்.

(அப்புறம் இருவரும் ஏதோ குசுகுசுவென்று பேசுகின்றனர்).

(ராமநாதய்யர் திரும்பிவந்து, அங்கு நிற்கும் நாதனைப்பார்த்து)

என்னடா! உன் பார்வையில் சுந்தரி தீய்ந்துவிடுவாள்போலிருக்கிறதே! 'உன் வலைக்குப் படமுடியாதமானப்பா இது. சற்றுநேரம் வெளியில் போய்இரு.

(முகத்தைத் தொங்கப் போட்ட வண்ணமாய் வெளிச் செல்கிறான் நாதன். உடனே அய்யர் சம்போ சங்கரின்கையில் கத்தைப் பச்சை நோட்டுகளை திணிக்கிறார். அதை வாங்கிக்கொண்டு வெளியே நழுவுகிறார் சங்கர். அவர் போனதும் அய்யர் நேராக சுந்தரியிடம் வந்து அவளை அப்படியே கைகளில் தூக்கிக்கொண்டு மாடிமீது சென்றுவிடுகிறார்.)

(திரை விழுகிறது)

மதிப்புரை

The Caramels supplied by Messrs Popular Products Company of Madras are very pleasant to taste:

(Sd). N. Parthasarathy, L. M. & S.
Gurvappa Chetty St.
Chintadripet, MADRAS.

சென்னை, மெஸர்ஸ் பாபுலர் பிராடக்ட்ஸ் கம்பெனியாரால் சப்ளை செய்யப்பட்ட காரமல்கள் சாப்பிடுவதற்கு மிகவும் இனிமை வாய்ந்தனவாக இருக்கின்றன.

என். பார்த்தசாரதி,
எல். எம். அண்டு எஸ்.

25, குருவப்ப செட்டி தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை. 9-9-36

இந்த மதிப்புரை நமது 'சந்திரோதயம்' சுகாதாரப் பகுதியை சேர்ந்த டாக்டர். ஸ்ரீ. என். பார்த்தசாரதியால் கொடுக்கப் பட்டிருக்கிறது.

—ஆசிரியன்.

முகப்புப் படம்.

ஸ்ரீமதி. நர்கீஸ்

தேவி பிலிம்ஸாரின்

"ஸம்சார நௌகா"

முதல் சமூக கன்னட பேசும் படம்.

பொது ஜனங்களாலும் பத்திரிகைகளாலும் புகழப்பட்டது.

மன்மையான நடிப்பு! உன்னதமான படப்பிடிப்பு!!

உல்லாசமான சீன் ஜோடிப்பு!!!

ஒவ்வொருவரும் குடும்பத்துடன் பார்க்கவேண்டிய படம்.

மகத்தான இப்படத்தை பார்க்கத் தயாராயிருங்கள்.

சன்னையில் குதூகலமான ஆரம்ப தேதி **26-9-1936.**

பிராட்வே டாக்கீஸில்

மைசூர் ஒலிம்பியா தியேட்டரில்

மங்களகரமான ஆரம்ப தேதி **2-10-36.**

இப்பொழுது வெற்றிகரமாக கீழ்கண்ட இடங்களில் நடைபெற்றுவருகிறது.

பெங்களூர் "சாகர்" தியேட்டரில் 4-வது வாரம்
சேலம் "எல்ஜின்" ,, 3-வது வாரம்
தஞ்சாவூர் "ராஜா ராம்" ,, 2-வது வாரம்
கதக் "விஜயா" ,, (19-9-36) முதல் ஆரம்பம்
திருச்சி "பெரமவுண்ட் ,, ,,

ங்கள் அபிமான தியேட்டரில் வெளிவரும் நாளை எதிர்பாருங்கள்.

தேவி பிலிம்ஸ் லிமிடெட்,

45, தங்கசாலை வீதி, சென்னை.

இங்கிலாந்தின் 'ஆபரா' நிலையங்களில், டோரிடா ப்ரௌனின் பெயர் மிகவும் பிரசித்தமானது. ரப்பர் போல் வளைந்து கொடுக்கக்கூடியது இவள் உடல். இவள் அழகும், உடலின் லயமும் கீத வாத்திய இன்னிசைகளுடன் இழையும்போது வெளிப்படும் 'நாட்டியத்தில்' நெஞ்சைப் பறிகொடுக்காத ரஸிகர்கள் அங்கு ஒருவரும் கிடையாதாம். இவளின் 5 வித நாட்டியத்தோற்றங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.



:: பயங்கரப் படங்கள் ::

[ஸ்ரீ. என். விஜயகுமார்]

........எக்ஸ்பிரஸ் கனவேகத்துடன் போய்க் கொண்டிருக்கிறது.—ஸ்டேஷனைப் போய்ச் சேர இன்னும் மூன்று மைல்களே இருக்கின்றன. ...ஆறு பாலம் வந்துவிட்டது. ரயில் சக்கிரங்கள் தண்டவாளங்கள்மீது கடகடவென்று உருண்டு செல்கின்றன. பாலத்திற்கும், ஆற்றுக்கும் இடையில் 150 மைல் தூரம். ஆற்றிலோ ஒரே பாறை மயம்...... திடீரென்று! சொல்லவும் நாவெழவில்லை; வண்டி தலை கீழாய்க் கவிழ்ந்து விட்டது........

நல்ல இரவு. மேகங்கள் சந்திரனை மூடிவிட்டன. நடுக்கடல்மீது மிதந்துசெல்லும் கப்பலிலுள்ள பிரயாணிகள் ஆனந்தத்தில் தான் மூழ்கிக் கிடக்கின்றனர். இருந்தாற் போலிருந்து காற்றின் வேகம் அதிகரித்து விட்டது. அலைகளோ ஆர்ப்பாட்டப் படுத்துகின்றன. இப்போது முற்றிப்போய் விட்டது. கப்பல் அலைக் கழிக்கப்படுகின்றது. தங்கள் தாயைநினைத்து ஏங்கும் தனையர்கள் பலர்; காதலியை நினைத்துக் கலங்கும் இளைஞர்கள் பலர். காதலனை நினைத்துத் தவிக்கும் பெண்கள் சிலர்; குழந்தைகளைக் கண்டு புலம்புவார் பலர்—என்ன செய்ய முடியும்! கப்பல் மூழ்கி விட்டது........

நள்ளிரவு. திடீரென்று கண்முன் ஓர் கறுப்புருவம் தெரிகின்றது. அதன் கையிலோ குத்துவாள் பளபளவென மின்னுகிறது! இதற்குள் வீட்டுப் பெண்கள் எழுந்து ஓவென்று கூக்குரலிட முயலுகின்றனர். ஆனால் எல்லோருக்கும் வாயடைத்துப் போய்விடுகின்றது! அந்த உருவமோ திடீரென்று பாய்ந்து பெண்கள் குடல்களைக் கிழித்து விடுகின்றது. ஆண்மகனுக்கும் அதே கதி நேர்ந்து விடுகிறது. பிற்பாடு வீட்டிலுள்ள நகைகளும் ரொக்கமும் மறைந்து விடுகின்றன......

அது என்ன? மனித உருவமா! இல்லை! கால்களைக் காணோம். அது நடந்துதான் வருகின்றது. அடே யப்பா! 16 அடி உயரத்திற்கு மனிதன் இருக்க முடியாது. கைகள் இரும்புத் தூண்களைப் போலிருக்கின்றன...... அதன் பற்கள் இவ்வளவு கோரமாக இருக்கின்றனவே...... ஐயோ! இது என்ன?......

மேற்படி சம்பவங்களில் ஏற்படும் காக்ஷிகளில் எந்த உள்ளம் தான் நடுநடுங்காதிருக்கும்? எந்த நெஞ்சம் திடுக்கிடாது? எந்த உயிர் துடிக்காது? இந்த மாதிரி பயங்கரங்களை யார் தான் சகிக்க முடியும்?

முடியும்! யாரால் என்பதற்கே இந்தக் கட்டுரை இனி பதில் சொல்கிறது?

ஹாலிவுட்டில் பயங்கரங்களைச் சிருஷ்டிப்பதில் நிகரற்றவராய் விளங்கும் டாட் ப்ரௌனிங் என்ற ஒருவரே 'இருடியம் 'நெஞ்சு' கொண்டவர். பயம் என்றால் பாதாம் அல்வா மாதிரி இவருக்கு.

"டாட் ப்ரௌனிங்"கும் காலஞ்சென்ற லான்சானியும்

காலஞ்சென்ற லான்சானியை முன்னுக்குக்கொண்டுவந்தவர் இவர் தான். மனித உள்ளத்திற்கு எது நடுக்கத்தைக் கொடுக்கிறது என்பதை பல வருஷங்களாக ஆராய்ச்சி செய்து வந்திருக்கிறார். 'டிராகுலா' என்ற படத்தில் பெலா லூகோஸியை ஜோலிக்கச் செய்ததும் இவர்தான். அந்த மகத்தான பயங்கர நடிகனுகிய போரிஸ் கார்லாப் மூலமாக பயங்கரங்களைச் சிருஷ்டித்து வருபவரும் டாட் ப்ரௌனிங் யாவார்.

இவரிடம் ஒரு பெரிய புஸ்தக சாலை இருக்கிறது. இதில் பயங்கரங்கள், நடுக்கந்தரத்தக்கவைகள், இரத்தத்தை தோய்ந்து போகும்படிச் செய்பவைகள் சம்பந்தமான கதைப் புத்தகங்கள் ஆயிரக்

கணக்கில் இருக்கின்றன.

உலகத்தில் மனித சக்திக்கு அப்பாற் பட்டதெனக் கூறப்படும் சம்பவங்களைப் பற்றி தஸ்தாவேஜிகள், ஏட்டுப் பிரதிகள், செப்புத் தகடுகள் முதலியனவும் இவர் புஸ்தக சாலையை அலங்கரித்து நிற்கின்றன. ரேகை சாஸ்திரம், சூன்ய சாஸ்திரம், தாந்திரிக சாஸ்திரம், பைசாச சாஸ்திரம், முதலிய பல நூல்களையும் இவர் தமது புஸ்தக சாலையில் பொன்னே போல் போற்றி வருகிறார்.

டாட் ப்ரௌனிங் கொஞ்ச நாட்களுக்கு முன்பு லண்டன் பத்திரிகை நிருபர் ஒருவருக்கு பேட்டியளித்தபோது பின் வருமாறு குறிப்பிட்டார்:—

"பயானக உணர்ச்சி, உணர்ச்சிகளில் மஹா மேன்மை பொருந்தியது. இந்த உணர்ச்சி யிருப்பதால் தான் உலகம் இவ்வளவாவது நல்ல நிலையிலிருக்கிறது. இல்லாவிட்டால் ஒருவரை ஒருவர் பிய்த்துத் தின்று விடுவார்கள்......... ரத்தக் காட்டேரி என்று ஒரு 'சாமான்' இருப்பதாக இந்தியா தேசத்திலிருந்து, 'துருவ நக்ஷத்திரம் வரையிலும் சொல்லப்படுகிறது. இறந்து போனவனது ஆவி இராக் காலங்களில் உயிரோடிருப்பவர்களின் உதிரத்தை உறிஞ்சி பிழைத்து வருகிறது—இது தான் ரத்தக் காட்டேரியாம். இதை வைத்துக்கொண்டு தான் நான் 'டிராகுலா' படத்தைத் தயாரித்தேன்.

"முதலில் நான் இந்தப் படத்தை எடுக்க விரும்பியபோது, முதலாளிகள் கதையின் போக்கைக் கண்டு சிணுங்கினார்கள். இது ஏற்கனவே நாடக மேடைகளில் ஆடப்பட்டிருந்தும், அதற்கே இப்படி முகம் சுளித்தார்கள். ஆனால் படம் வெளியில் வந்த போது ஹூகோசிக்கு 'டிராகுலா' என்ற பெயரே வந்து விட்டது.

'ஜோம்பிகள்'—அறிவற்ற 'இறந்து போகாத' உயிர்களை பூமியினின்று எழுப்பி கழனிகளில் வேலை செய்ய விடுவதாகும். இதை வைத்துக் கொண்டும் ஒரு பயங்கரமான படத்தைத் தயாரிக்கலாம்.

மின்சார மரணக் கதிர்கள், யந்திர மனிதர்கள், சூனியம், ரசாயனக் கொலைகள், வேறொரு நக்ஷத்திர மண்டலத்திலிருந்து சில ஆசாமிகள் நம்மிடம் வருதல், மனிதனைத் தின்னும் மலர்கள் போன்ற பயங்கரமான தாவர வர்க்கங்கள், மனிதனால் சிருஷ்டிக்கப்படும் ராக்ஷஸர்கள் ஆகிய இத்யாதிகள் மூலமாகவும் பயங்கரப் படங்களைத் தயாரிக்க முடியும்.

'பஞ்ச பூதங்களையும் ஆளும் ஒரு மனிதனைக்கொண்டு மஹா பயங்கரமான படத்தை எடுக்கமுடியும். இதைவிட மஹா பயங்கரமானது வேறு எதுவும் இருக்க முடியாது. அவன் நினைத்தால் உலகத்தை கணத்தில் அழித்துப் போட்டுவிடலாமல்லவா"

"பயங்கரமான படங்களில் கதை முக்கிய மல்ல; ஆனால் அதைக்கொண்டு செல்லும் போக்கே முக்கியமானது" என்கிறார் அவர்.

"உலகத்தில், வாழ்க்கையில் நடப்பதையே அப்படியே பயங்கரப் படங்களில் எடுத்துக்காட்டினால், ஒன்று, ஜனங்களுக்கு 'சப்'பென்றுவது ஆகிவிடும்; அல்லது சிரித்துத் தீர்த்தாவது விடுவார்கள்.

மற்ற ரஸங்களில் வேண்டுமானால் இயற்கை அப்படியே காட்டப்படலாம். ஆனால் பயானக ரஸ சம்பந்தமான படங்களிலும் இயற்கையே இருக்கக் கூடாது. விளங்க இயலாத மர்மங்களும், செய்கைகளுமே குவிந்து நிற்க வேண்டும்."

டைரக்டர் டாட் ப்ரௌனிங் நடிகர்களுக்கு முதலில் பாடம் சொல்லிக் கொடுக்க மாட்டார். கதையின் பிரதியை நடிகர்களிடம் படிப்பதற்காகக் கொடுத்து விடுவார்கள். அவர்களாக அதன் ரஸனையை அறிந்து கொள்ளவேண்டும். அப்போது அவர்களுக்கே நன்றாக நடிக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டு விடுகிறது.

மற்றொரு நூதனம் எட்கார் ஆலன் போ எழுதிய பயங்கரமான கதைகள் பல பயங்கரமான படங்களுக்கு லாயக்கற்றவை என்று கூறுகிறார் அவர்.

"மனோ தத்துவத்தை படத்தில் எப்படிச் சித்திரிக்க முடியும்? கய் டி மொப்பஸான் எழுதிய 'ஹார்லா' என்னும் கதை மஹா பயங்கரமானது. அதில் ஒருவனுக்கு பைத்தியம் பிடித்துவரும் நிலையில் அவன் மனக்கோளாறுகளை ஆசிரியன் வர்ணித்துள்ளான். இதை எப்படி திரையில் காட்ட முடியும்? பயங்கரத்திற்கு சலனம் இருக்கவேண்டும்.

ஆனால் உண்மையில் டாட் ப்ரௌனிங் மனிதர்களிடம் மிகவும் அன்புள்ளவர், பரம ஹாஸ்ய ரஸ ரஸிகர். தமாஷ் கதைகளுக்கும் அவர் புத்தகசாலையில் பஞ்சம் கிடையாது.

அவரது வாழ்க்கையும் சம்பவங்கள் நிறைந்தது. ப்ரௌனிங் பையனாக யிருக்கையில், வீட்டிலிருந்து திருட்டுத்தனமாக ஒரு சர்கஸ் கம்பெனியுடன் ஓடிவிட்டார். கொஞ்சநாள் அதில் டிக்கட் வசூலிப்பவராகவும், கொஞ்ச நாள் "கோமாளி" யாகவும், இருந்து வந்தார். ப்ரௌனிங்கும் அவர் மனைவியும் ஒரு ஹாஸ்யப் படத்தில் நடித்து வெற்றி பெற்றார்.

பின்னர் அவர் ஹாஸ்யக் கதைகளை டைரக்ட் செய்தார். இடையில் அவருக்குப் பிரியமான பயங்கர விவகாரங்களையும், சிற்சில கதைகளில் புகுத்தின

போது, அந்தக் கதைகளை ஏராளமானவர்கள் ரஸிக்க ஆரம்பித்தனர்.

"நீங்கள் உலகத்தை வேண்டுமானால் திடுக்கிடச் செய்யலாம். ஆனால் ஹாலிவுட்டை மட்டும் அசைக்க முடியாது" என்று சொல்கிறார் ப்ரௌனிங். சபையினர் ரத்தத்தை உறையச் செய்யும் சம்பவங்கள் ஹாலிவுட்டில் அடிக்கடி எடுக்கப்படுகின்றன.

"ஏதாவது ஒரு புதிய பயங்கரமான கதையாக இருந்தால், நான் அதனால் பெருமகிழ்ச்சி யடைகிறேன். அது தான் முதல் பயங்கரமான கதைபோல் தோன்றுகிறது?" என்கிறார் அவர்.

அனேக பயங்கரப் படங்களின் டைரக்டர்களெல்லாம் கௌரவம் வாய்ந்த பிரஜைகள்! எல்லோரிடமும் தாராளமாய்ப் பழகுபவர்கள். உதாரணமாக ஜேம்ஸ் வேலை எடுத்துக் கொள்ளுவோம். இவர் மஹா தந்தரமான புருஷர்களில்ஒருவர். பிராங்கின்ஸ்டீனும்', 'கண்ணுக்குத்தெரியாத மனிதனை'யும் இவர் தான் தயாரித்தார். மீண்டும் சமீபத்தில் பிசாசுக்கு பெண்டாட்டியையும் கொடுத்து 'பிராங்கின்ஸ்டீனின் மணப்பெண்' என்ற படத்தையும் சிருஷ்டித்தார்.

கார்லாபும் ரொம்பவும் நல்ல மனிதர். ஹாலிவுட் குழந்தைகளுக்கெல்லாம கார்லாபிடம் தான் மிகவும் பிரியம். 'மேக்-அப்' ஒழிந்த சமயங்களிலெல்லாம், கிரிக்கெட் துடுப்பு, அல்லது மம்மட்டி இவைகளுடன் உறவாடுவார். தோட்டவேலை செய்வதிலும், கிரிக்கெட் ஆடுவதிலும் இவருக்கு மிகவும் இன்பம் உண்டு.

லான் சானியிடம் இவர் மிகவும் நெருங்குப் பழகியிருக்கிறார்.

இப்போது 'ஆயிரம் முகங்கள்கொண்ட அற்புத லான்சானி'யின் ஸ்தானத்தில் ஏறக்குறைய வீற்றிருப்பவர் கார்லாபே யாகும்.

"தோற்றம், சப்தம், மனத்தில் ஓடிக்கொண்டிருக்கும் படங்கள் இவைகளே பயத்தை உண்டாக்குகின்றன. இவைகளை திரையின்மீது காட்டப் படுகையில் அதற்கு வெற்றி கிடைத்து விடுகிறது. 'பிராங்கின்ஸ்டினின் மணப்பெண்' என்ற படத்தில் நான் நடித்தேனல்லவா? அதில் ஒரு மனிதனை உற்பத்தி செய்வது தத்ரூபமாக காட்டப்படுகிறது. இதற்கேற்ற வகையில் படம் எடுக்கப்பட்டிருந்ததால், ஜனங்கள் அதைப் படம் என்று கருத முடியாதவர்களாகி விடுகின்றனர். காட்சியில் லயித்துப்போன அவர்கள் உள்ளம் அது வெறும் படம் என்பதை மறந்தே போகின்றனர். இதுதான் முழு ரகசியமும்" என்கிறார் கார்லாப்.

"தியேட்டர், மேடை, படுதா, எல்லாம் மறைந்து போய் அங்கு நடப்பவைகளே உண்மைச் சம்பவங்களாக தோற்றமளிக்கப் படுகையிலேயே ஓர் பயங்கரப் படம் ஜனங்களிடம் பூரண செல்வாக்குப் பெற்றதாகின்றது.

வேலின் புதிய பயங்கரங்கள் நடிகர்களை புட்டிகளுக்குள் விடுவது. இது வெறும் 'காமிராத் தந்திரமே ஒழிய, வேறில்லை.

போரிஸ் கார்லாப், கிளாடட் ரெயின்ஸ், பிரடெரிக் மார்ச், ஹென்ரி ஹல், சார்லஸ் லாப்டன் முதலியவர்கள் பயங்கரங்களை நடிப்பதில் வல்லவர்கள்.

இவர்கள் நடித்த படங்களைப் பார்க்கும்போது மனம் எவ்வளவு நடுங்குகிறது?

தமிழ்ப் படங்களில் ராக்ஷஸன், யுத்தம்—முதலியவைகளெல்லாம் காட்டப்படுகையில் சிரிப்புத் தான் வருகிறது. என்ன வேற்றுமை பார்த்தீர்களா?

நமது வெளி நாட்டு சோல்ஏஜண்டுகள்

இலங்கை சோல் ஏஜெண்டு.

திரு. P. M. R. முத்துசாமி செட்டியார் அவர்கள்
தி இந்தியன் நேஷனல் நியூஸ் மார்ட்,
89, மாதாகோவில் வீதி, கும்பெனித் தெரு,
கொழும்பு

பர்மா சோல் ஏஜெண்டு:

மெஸர்ஸ். ஜெனரல் நியூஸ் ஏஜென்ஸி,
244, பியாரி தெரு, ரங்கூன்

மலாய் நாட்டு சோல் ஏஜெண்டு.

திரு. P. சிவகுரு அவர்கள்.
50, பிரிக்பீல்ட் ரோடு, கோலாலம்பூர்.

மலாகா சோல் ஏஜெண்டு,

திரு. R. நடேசன் செட்டியார்,
நியூஸ் ஏஜெண்ட்,
மலாக்கா.

பினங்கு சோல் ஏஜெண்டு.

நவீன கதாவாசக புத்தகசாலை,
40 A, சோலியா தெரு, பினங்கு.

ஒரு உண்மைக் கதை

பாம்பின் வஞ்சம்

[ஸ்ரீ தேவ தேவ பட்டாசார்யா]

"தன் பூரணவலிமையுடன் அதன் தலையை........"

மாதுமதி நதியின் கரைமீதுள்ள திகால்—பயாறு என்ற கிராமத்தில் (இது ஜெஸ்ஸூர் ஜில்லாவைச் சேர்ந்தது) ஒரு பிராமணக் குடும்பம் வசித்து வந்தது. மிகவும் ஏழைகள். ஆனால் அவர்கள் உள்ளம் புனிதமானது. அவர்கள் நாட்கள் யாதொரு அசம்பாவிதங்களின்றி நன்றாகவே நடந்து வந்தன. ஒரு நாள் காலஞ்சென்ற காளி பிரசன்ன செளத்திரியின் தங்கை தனது மாமனார் வீட்டிலிருந்து முதலாவது தடவையாகத் திரும்பி வந்தாள். அவளுக்கு அப்போது தான் கலியாணமாகி யிருந்தது. அன்றிரவு ஏக ஆர்பாட்டம். தமாஷிலேயே பொழுது சென்றது. விருந்து வைபவமும் நடைபெற்றது. அந்த இரவு அழகான வசந்தகால இரவு. சந்திரன் மேகக் கூட்டங்களிடையில் ஒளிவதும், வெளிவருவதுமாக இருந்தான்.

மாதுமதி யாற்றிலிருந்து எழுந்த மந்தமாருதம் அனைவரையும் தூங்கச் செய்து விட்டது. எல்லோரும் கட்டாந் தரையில் பரப்பப் பட்டிருந்த பாயின்மீது படுத்து உறங்கிப் போயினர்.

நள்ளிரவில் திடீரென்று அந்தப் பெண்ணிடமிருந்து பரிதாபமான கூச்சல்கள் கேட்டன. அனைவரும் தூக்கத்திலிருந்து எழுந்து விட்டனர். நடுங்கும் குரலில் தன்னை ஏதோ கடித்து விட்டதென்று அவள் கூறினாள். விளக்குகள் ஏற்றப்பட்டன. பெண் உடல் நீலம் பூத்து விட்டதையும், வாயில் நுரை தள்ளுவதையும் அவர்கள் கண்டனர்.

அப்போதே பாம்பு கடித்து விட்டதென்ற பயங்கரமான உண்மை அவர்களுக்குத் தெரிந்து போய் விட்டது. உடனே மாந்திரிகர்கள் தங்கள் வேலையைச் செய்தார்கள். வைத்தியர்கள் மூலிகைகளைக் கொடுத்தார்கள். பாம்போ அவள் தொப்புளண்டைக் கடித்து விட்டிருந்தது. ஆகவே அவள் மாண்டுபோய் விட்டாள். சகோதரர் கொண்ட சஞ்சலம் இவ்வளவு அவ்வளவு அல்ல. அப்போதே அவருக்கு பாம்பைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டு விட்டது. அது வரையிலும் தமது ஆன்மா சாந்தியடையாது என்பது அவருக்குத் தெரிந்து போய் விட்டது.

பிற்பாடு மண் வெட்டிகளுடனும், கடப்பாரைகளுடனும் இரவு பூராவும், பொழுது விடியும் வரையில் பூமியைத் தோண்டினார்கள். அப்போது விஷப் பாம்பு அகப்பட்டு விட்டது. எலி வளை ஒன்றின் மூலமாக பாம்பு வந்து பாய் வழியாக அவளைக் கடித்திருக்கிறது. ஆட்களை கண்டதும் அது சீறி அவர்கள்மீது பாய்ந்தது. ஆனால் கடப்பாறைகள் நிமிஷத்தில் தங்கள் வேலையைச் செய்து விட்டன. பாம்பும் செத்து விட்டது. இதிலிருந்து இரண்டு சந்ததிகளுக்கு "பாம்பின் வஞ்சம்" இருந்து வந்தது.

அந்த பிராம்மணரின் சகோதரி பரிதாபமாக இறந்து ஒரு வருஷம் கடந்து போய் விட்டது. ஒரு நாள் மாலை அந்தப் பிராம்மணர் (காளிபிரசன்ன செளத்ரி) தமது வீட்டை அடுத்துள்ள ஒரு குளத்திலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது அவரது பாதம் அகஸ்மாத்தாக ஏதோ ஒன்றின் மேல் விழுந்தது. அது ஒரு பெரிய நல்ல பாம்பு. உடனே அது அவர் காலைச் சுற்றிச் சுற்றிக் கொண்டது. அதாவது பாதத்திலிருந்து முழங்கால் வரையிலும். அவர் அப்போது 'சப்பாத்துக்

"சம்சார நௌகா"வில் ஒரு காக்ஷி

கட்டை' போட்டிருந்தார். அவர் தமது பூரண வலிமையுடன் அதன் தலையை மிதியடியால் அழுத்திக்கொண்டு உதவிக்காக கூச்சலிட்டார். சமயத்தில் கூச்சல் அண்டை அயலிலுள்ளவர்கள் காதில் விழவே அவர்கள் விளக்குகளுடனும், கம்புகளுடனும் அங்கு வந்து சேர்ந்தனர். அதற்குள் பாம்பின் தலை நசுங்கி விட்டதானாலும், வந்த ஆட்கள் கண்டா கோடரியினால் அதன் தலையை சேதித்துவிட்டனர். அதன் முதுகெலும்பு முறிந்து போய்விட்டது. பிராம்மணர் காப்பாற்றப் பட்டார். அப்போது அவருக்கு கவலை அதிகமாகிவிட்டது. தன்னைப் பாம்பு எதிர்க்க ஆரம்பித்து விட்டதல்லவா? என்ற எண்ணம் அவருக்கு உண்டாயிற்று.

இதற்குள் அவர் மாண்டு போய்விட்டார். அவருடன் பாம்பின் வஞ்சம் போய்விட்டதென்று கருதப் பட்டது. அவருக்கு மூன்று புதல்வர்கள் இருந்தனர். அவர்களில் மூத்த புதல்வர் (கவிராஜ் அஸ்வினி குமார் சௌத்ரி) இருபத்து ஐந்து வயதுடைய இளைஞர். ஒரு நாள் தொழில் சம்பந்தமாக தமது கிராமத்திலிருந்து 5 அல்லது 6 மைல் தூரத்திலுள்ள மற்றொரு கிராமத்திற்குச் செல்ல ஆரம்பித்தார். அவர் புறப்பட்டபோது ஏற்கனவே மாலைப் போதாகி விட்டது. ஆகவே தமது இளைய சகோதரரை (வயது 15) அழைத்துக்கொண்டு வெளிக்கிளம்பினார். பையன் விளக்குடன் வர, அவர் ஒரு மூங்கில் கழியைப் பிடித்துக்கொண்டு முன்னே சென்று கொண்டிருந்தார். அவர் ஒரு வைத்தியர். அப்போது திடீரென்று அவர் எகிறிக் குதித்து கம்பினால் எதையோ தாக்கினார். அப்போது பக்கத்தில் வந்து கொண்டிருந்த சைலேந்திரன் (அவரது இளைய சகோதரன்) விஷயத்தை ஊகித்துக் கொண்டான். ஆனால் அதற்குள் பாம்பு புதருக்குள் மறைந்து விட்டது. பையன் உடனே தனது துணியைக் கிழித்து தமது சகோதரரின் முழங்காலை அப்படியே இறுகக் கட்டினான். உடனே உதவிக்காக கத்தினான். பாம்பு அவரது கட்டை விரலில் கடித்து விட்டிருந்தது. ஸ்மரணையற்றுப்போன அவர் அருகிலிருந்த மாந்திரிகர்களிடம் எடுத்துச் செல்லப்பட்டார். மணி மந்திர ஔஷதாதிகளின் பயனால் ஒரு மாத கஷ்டத்திற்குப் பின்பு அவர் பிழைத்துக் கொண்டார். அதிலிருந்து அண்ணன் தம்பி இருவரும் பாம்புகளைக் கண்ட போதெல்லாம்பழி தீர்த்துக் கொண்டனர். நூற்றுக் கணக்கான பாமபுகளை இருவரும் கொன்று குவித்தனர்.

இளையவனான சைலேந்திர நாத், கோப்ரா பஜாரில (ஜெஸ்ஸூர்) கடை வைத்திருந்தான். ஒரு நாள் அவன் கடையில் மரப்பலகை மீது படுத்துக்கொண்டு தூங்கிக் கொண்டிருக்கையில், அவன் கண்ட கெட்ட கனவு ஒன்று அவனை திடீரென்று துயிலினின்று எழுப்பி விட்டது. வியர்வை வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. விளக்கு அறையில் மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. சைலேந்திரன் ஒரு மூலையிலிருந்து வரும் சீறல் சப்தத்தைக் கேட்டான். அவன் உடனே விளக்கை நன்றாகத் தூண்டிவிட்டான். எதிரில் ஒரு பெரிய நல்ல பாம்பு தன் படத்தை விரித்துக் கொண்டு தன்னை நோக்கிப் பாய்வதைக் கண்டான் சைலேந்திரன்.

கண்ணிமைக்கு முன் அவன் தரையில் குதித்து, ஒரு பெரிய மரக் கம்பினால் அதைத் தாக்கினான். பல தடவை அடித்த பிறகு அவன் அதைக்கொன்று போட்டான்.

மூன்றாவது சகோதரன் முறையும் சீக்கிரத்திலேயே வந்து விட்டது. அவரது பெயர் நரேந்திர குமார் சௌத்ரி. அவர் தமது சொந்த கிராமத்தில் தங்கி வருகையில் தங்கள் பசுக்களில் ஒன்றின் மடியிலிருந்து பாலை பாம்பு சாப்பிட்டுப் போய் விடுகிறதென்று சொல்லப்பட்டது. (இது மாதிரி நம்பிக்கை ஒன்று கிராமாந்திரங்களிலிருந்து வருகிறது) பல இரவுகள் அவர் மாட்டுக் கொட்டில்மீதுகண் வைத்திருந்தார். ஒரு நாள் இரவு, ஒரு பாம்பு மெதுவாகக் கிளம்பி, கொட்டிலை நோக்கிச் செல்வதைக் கண்டார். உடனே அவர் ஒரு பெரிய கம்பை எடுத்து அதன்மீது எறிந்தார். கம்போகுறி தவறி அதன்முதுகில் விட்டது. உடனே அது ஓடிப்போய் விட்டது. கோபங்கொண்ட பாம்பு ஒரு அபாயகரமான விரோதி யென்பதற்கு சந்தேக மில்லை, அன்றிரவு பூராவும் அவர் ஜாக்கிரதையுடன் விழித்திருந்தார். பல இரவுகள் கழிந்தன. ஒரு பாம்பையும் காணோம். ஒரு நாள் தமது நண்பர் ஒருவரிடத்தில் பேசிவிட்டு, கொட்டில் பக்கமாக வருகையில் சீறல் சப்தம் கேட்டது. உலர்ந்த சருகுகள் சலசல வென்றன. திரும்பிப் பார்த்தபோது ஒரு பாம்பு தன்னைத் தொடருவதைக் கண்டார். தான் முன்னர் அடித்த பாம்பாகவே அது இருக்க வேண்டுமென்று கருதினார். ஆகவே உயிருக்காக அவர் கன வேகமாக சென்று தமது நண்பர்கள் சிலருடன் கம்புகள் தாங்கி அங்கு மீண்டும் திரும்பி வந்தார்.

அந்தப் பாம்பு அப்போதும் அங்கிருந்ததால், உடனே அது அடித்துக் கொல்லப்பட்டது.

ஒரு நாள் நாங்கள் (இதை எழுதுபவரும் சைலேந்திர நாத் பாபுவின் சகோதரர், இன்னும் சிலர்) எங்கள் கிராமத்து வீட்டில் (கோலாரா—ஜெஸ்ஸூர் ஜில்லாவைச் சேர்ந்தது) உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் மாட்டுக்கொட்டிலினின்று எங்கள் வேலைக்காரன் விரைந்தோடி வருவதைக் கண்டோம். வந்தவனுக்கு முதலில் பேசவே முடியவில்லை. பின்னர் மெதுவாக அவன், அங்கிருக்கும் எலி வளையிலிருந்து ஒரு பெரிய கரு நாகம் வெளிவந்ததாகவும், தான் கொட்டிலைப் பெருக்கிக் கொண்டிருக்கையில் தனது பக்கத்தில் அதன் படத்தை விரித்துக் கொண்டிருந்ததாயும், எப்படித் தப்பினானென்பது தனக்கே தெரியாதென்றும் கூறினான். இதை நாங்கள் நம்பாமலிருக்க முடியவில்லை. சென்ற மாதம் நடந்த அந்த துக்க சம்பவம் எங்கள் கண்களை விட்டு இன்னும் அகலவில்லை. நாகத்தால் கடியுண்ட ஒரு பசு துடிதுடித்து, சுழன்று சுழன்று, நுரை தள்ளி மாண்ட காட்சி எங்கள் மனதில் இன்னும் இருந்து கொண்டுதானிருக்கிறது. உடனே நாங்கள் கருவிகளுடன் சென்று அங்கு தோண்டினோம். ஒன்றும் காணப்படவில்லை. ஏதோ வீண் கலாட்டா செய்வதாக வேலைக்காரன் பகவன் தாஸைத் திட்டினோம். ஆனால் அவன் ராமச்சந்திரன்மீது ஆணை வைத்தான். திடீரென்று மாட்டுத் தொட்டி பக்கம் வேலை செய்து கொண்டிருந்த கடப்பாறை ஏதோ வொன்றின்மீது பட்டது. பார்த்தபோது கரும் பாம்பின் முதுகு தெரிந்தது. அவ்வளவு தான் தாமதம். சைலேந்திர பாபு ஒரு துறடை அதன் முதுகில் தன் முழு பலத்துடன் இறக்கினார். சீறிக்கொண்டு பாய்ந்தது பாம்பு. ஆனால் 5, 6 கம்புகள் ஏக காலத்தில் அதன் மீது விழவே அது 'சட்னி'யாகி விட்டது.

பின்னர் அதன் உடல் ஆற்றங்கரையில் தகனம் செய்யப்பட்டது.

அதிலிருந்து இதுவரையிலும் சைலேந்திரர் நூற்றுக் கணக்கான பாம்புகளை கொன்று வருகிறார். ஒன்று தான் பாம்புகளால் கொல்லப்படும் வரையில பாம்புகளைக் கொன்று கொண்டே வரவேண்டும்; அல்லது இயற்கையான மரணம் தனக்கு சம்பவிக்க வேண்டுமென்பதே அவரது வாழ்க்கை இலட்சியமாகிவிட்டது.

—"அமிருத பஜார் பத்திரிகா"

சென்னையில் டிபாசிட் கட்டும்
ஏஜென்ஸிகள் தேவை

சின அழகி

அவள் 18-வது நூற்றாண்டின் மஹா சுந்தரி. லோகத்திலுள்ள மஹா ராஜாக்களெல்லாம் அவள் காதலுக்காகவேண்டி பைத்தியக்காரர்களானார்கள். ஆனால் அவளோ ஒரு சாதாரண நாடோடியையே காதலித்தாள். அவனுடன் சரஸசல்லாபமாக பொழுது போக்குவதில் அவள் நாட்கள் சென்றன......பொறாமை கொழுந்துவிட்டு எரிந்தது. முடிவாக ஒரு போர் வீரனது கத்தி அவள் அழகை சின்னா பின்னப்படுத்திவிட்டது. அவளுக்குச் சித்தப்பிரமை பிடித்து மாண்டாள்.

இந்த அழகி கையாண்ட அழகு ரகசியங்கள்; மயிர்க்கூச் செரியும் இவளது வாழ்க்கை வரலாறு, கண்ணீரை வரவழைக்கும் இவளது அந்திய நாட்கள் ஆகியவை எந்த ரஸிகர்களைத்தான் இன்பத்திலாழ்த்தாது?

"ரோஜா மலர்கள் தூவப்பட்டிருந்த மஞ்சத்தின் மீது அவள் உடல் தங்கப் பதுமையைப்போல் கிடந்தது. அங்கங்களில் காமரஸம் ததும்பியது. மையல் தோய்ந்த அவள் மைவிழிகளை அந்த நாடோடி தன் அதரங்களைக்கொண்டு மூடினான். இருவர் அதரங்களும் ஒன்றாயின. அவள்....... ... ."

"வேறு வழியில்லை. அவள் விம்முகின்றாள்! அடுத்த நிமிஷம் சிங்கத்தின் கோபம் அவள் சிரிப்பில் எதிரொலிக்கின்றது. எதிரே நின்ற மோவாங் பூமியூவின் கரத்திலிருந்த கத்திபளபளவென மின்னல்போல் ஒளி வீசுகின்றது.

அவன் பிசாசைப்போல் நகைக்கிறான்.

காமம் அவனை வெறியனாக்கிவிட்டது.

.....................ரத்தி அவள் கண்களில் சரேலென்று இறங்கியது. விழிகள் கீழே உருண்டன..................

அப்புறம்!............

(இந்த நவரஸங்களும் நிறைந்த ஒரு அழகு ராணியின் சரித்திரத்தை 'தாவி' எழுதியிருக்கிறாள். அடுத்த இதழி'ல் வெளியாகிறது.

—ஆசிரியன்.

786

பொடிகளுக்கு அரசன் பவுன் கலர்

தயாரிப்பவர் :
அநேக தங்க மெடல்கள் பரிசு பெற்ற கே. முஹம்மது உசேன் சாயபு.

தபால் பெட்டி நெ. 135.

டெலிபோன் நெ. 4184.

இதையே கேட்டு வாங்கி, உபயோகியுங்கள்.

தொழிற்சாலை :
48, பாரிஷ் வெங்கடாசல அய்யர் தெரு,
ஜி. டி. மதராஸ்.

வருகிறார் ! வருகிறார் ! !

தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளவே
உங்களூர் தியேட்டருக்கு விஜயம் செய்கிறார்.

யார் ?

அவர் தான்
திருச்சி தியாகராஜ டாக்கீஸாரின் அரிய
முதல் மணி

ச த் தி ய சீ ல ன்

அல்லது

தந்தை சொல் மறவாத் தனயன்

விரு விரு வென்று போகும் கதை !
மயிர் சிலிர்க்கும் கத்திச் சண்டைகள் ! !
மனமிளகும் சோக சம்பவங்கள் ! ! !
பரவசப்படுத்தும் கீதா கானங்கள் ! ! ! !

நிறைந்தது.

டைரெக்டர் :—B. சம்பத் குமார்

தியாகராஜா டாக்கீஸ், திருச்சிராப்பள்ளி.

"சாண்டர்ஸ் ஆப் தி ரிவர்"யின் கதாநாயகி மிஸ். நினா மாக் மேக்கனி

நாட்டியம்

"தாண்டவன்"

ஹிந்துஸ்தானத்தில் நடனக் கலைக்கு நீளமான முன்னுரை எதுவும் வேண்டியதில்லை. லோகத்தின் நாகரிக வளர்ச்சிக்கு இந்தியா அளித்துள்ள உதவி இவ்வளவு அவ்வளவு அல்ல. இந்தியக் கலைகள், இந்திய நாகரிகம், இந்தியப் புராணங்கள் யாவும் மேனாட்டுக்கு ஊக்கமெழுப்புபவைகளாகவே எப்போதும் இருந்து வந்திருக்கின்றன.

விரைவில் மறைந்து விட்ட கலைகளில் இந்திய நடனமும் ஒன்று.

தவிரவும், கேவலமான 'வேசி' யினுடைய கூட்டுறவால், நடனக் கலைக்கு ஒரு அபகீர்த்தி ஏற்பட்டு விட்டது. ஆனால் இன்றோ மறைந்த நாட்டியக் கலை மெதுவாக உயிர் பெற்று வருகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் இக்கலை அடியோடு அழிந்து போகவில்லை. ஆனால் வட நாட்டிலே மஹாகவி ரவீந்திரநாத் தாகூரின் அரும் முயற்சிகளே நடன மறுமலர்ச்சிக்குப் பெரிதும் காரணம். இந்தக் கலை சாந்தி நிகேதனத்தில் ரொம்பவும் அற்புதமாய் போதிக்கப்பட்டு வருகின்றது. ஆக, இந்தியா பூராவிலும் 1923-வருஷத்தில் தான் நடனம் புத்துயிர் பெற்றதென்றே கூறவேண்டும். ஸ்ரீமதி. ஆன்னா பாவ்லோவா, ரூத். செயின்ட் டென்னிஸ், உதய சங்கர், ராகினி தேவி, மேனகா, கோபிநாத், இவர்கள் போன்றவர்களின் 15 வருஷ உழைப்பின் பயனாக நாட்டியத்தின் உன்னதம் மீண்டும் நிலை நாட்டப்பட்டது.

ஒரு பேராசிரியன் நடனத்தைப் பற்றி பின் வருமாறு சொல்கிறான்.

"காதல் மிதக்கும் கண்களுடனும், மெலிய பூங்காற்றில் அசையும் முல்லைகளைப் போன்ற விரல்களுடனும் தோன்றி, சமிக்ஞைகளின் பாஷையால், காதல், சோகம், முதலியவைகளை பூரண அழகுடன் வெளிப்படுத்துவது நடனம். வீணை, புல்லாங் குழல் இவைகளினின்று எழும் நாதங்களுடன், மிருதங்கம், தாளம், சதங்கை இவைகளினின்று வெளிப்படும் நாதம் மோத, இத்தியாதி நாதங்களுடன், உடலின் அசைவையும், சமிக்ஞையையும் இழைப்பதே, உன்னத நாட்யம். இதுதான் இந்திய நடனம்.

நடனம் நமது மதத்தில் பெரியதோர் ஸ்தானம் வகித்து வந்தது என்று ஏற்கனவே கூறியுள்ளேன். நடனத்தை சிருஷ்டித்தவன் சிவன். அதற்கு நாயகன் நடராஜன். உலகத்தின் சக்தியையும், சிருஷ்டி, ஸ்திதி ஸம்ஹாரம் ஆகிய முத்தொழில்களையும் சித்தரிப்பதே சிவ—அல்லது தாண்டவ நடனம்.

ஹிந்து புராணப்படி, சிவனுக்கு நாயகி பார்வதி. லக்ஷ்மி விஷ்ணுவின் காதலி. மேகநாதனுகிய இந்திரனது லோகத்தில், அழகுடைய நாட்டியமாடும் 'அப்சஸ்' என்ற நாட்டியப்பெண்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு உதவியாக கானத்தில் வல்லவர்களாகிய கந்தர்வர்கள் இருக்கின்றனர். வாய்ப்பாட்டுக்களிலும் கீதவாத்தியங்களிலும் நிபுணர்களான கின்னரர்களுமிருக்கின்றனர்.

கிருஷ்ணன் பெரிய நாட்டிய ரஸிகன். உதாரணமாக அவனது 'ரஸ லீலை'யைக் குறிப்பிடலாம். இதில் கிருஷ்ணன் புள்ளாங்குழலால் கீதமிசைக்கிறான். அவனைச் சுற்றி, கோபிகைகள் நடனமாடுகின்றனர். இது மத சம்பந்தமான நடனம். இதன் தாத்பரியம்:- அதாவது புள்ளாங்குழல் ஆண்டவனுடன் ஐக்கியமாகும்படி எல்லா ஆத்மாக்களையும் அழைக்கிறது. ஆண்களின் ஆத்மாக்களாகிய பெண்கள் அந்த அழைப்புக் கிணங்க, நாட்டியத்தில் கலந்துகொண்டு கண்ணனிடம் ஐக்கியமாகின்றனர். இது தான் ரஸலீலை. மீராபாய் சொன்னாள்:—"ஆண்டவன் முன்பு நான் நடனமாடுவேன், எனது ஆத்மா அவனுடன் ஐக்கியமாகிவிடும்' என்று. மனிதன், தர்ம அர்த்த, காம, மோக்ஷம் என்பது நான்கு புருஷார்த்தங்கள்.

ஒவ்வொரு நடனமும் இந்த பாக்கியத்தை அடையும் மார்க்கத்தையே குறிப்பிடுகின்றது. இந்திய நடனத்தில் அர்த்தமில்லாத சமிக்ஞையே கிடையாது. கைகளின் சமிக்ஞை 'முத்திரைகள்' என்று அழைக்கப்படும். பொதுவாக சமிக்ஞைகளை பின் வருமாறு பிரிக்கலாம். 'ரஸ அபினயம்'—இது கண்கள் கன்னங்கள், உதடுகள்—இவைகளின் சமிக்ஞைகள். 'ஹஸ்த அபினயம்' முத்திரைகள் தவிர, உடலின் அசைவுகளும் இதில் சேர்ந்தது. 'நிருத்திய திருஷ்டி' அல்லது 'நேத்திர நிருத்தியம்'—அதாவது கண்களை பல திக்குகளில் சுழற்றுவது—அர்த்தத்தோடுதான். ஹிந்து நடனம் இரண்டு விதமாய் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறது. கடவுளின் முன்பு ஆடும் நடனத்திற்கு 'மார்க்க' நடனம் என்று பெயர். அதாவது மோக்ஷம் அடைய சாதனமான நடனம். மற்றொரு நடனம்' மஹா ராஜாக்களையும், மற்றவர்களையும் குஷிப்படுத்துவதற்கு. இது 'தாஸி' நடனம் என்று அழைக்கப்படும். இதை கோயில்களில் நடனமாடும் தேவதாஸிகள் நடனத்துடன் சேர்த்துப்பேசக் கூடாது. 'தாண்டவ' நடனம். அல்லது வீர நடனம். பூராசக்தி நிறைந்தது. ஆண்களுக்கே உரித்தானது. இரண்டாவது நடனம் 'லஸ்யம்'. பெண்களுக்கு உரித்தானது. உடலின் லயத்தினால் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் பாவைக பொருந்திய நடனத்திற்கு 'பிரகாசினி' என்று பெயர், லஸ்ய நடனத்திற்கு அழகிய பெண்களே ஏற்றவர்கள். இந்த ரகத்தில் சேர்ந்தது தான் ரஸலீலை. நாட்டியமாடுபவன் வெளிப்படுத்த முயலும் உணர்ச்சிகள், தெளிவாக உணரப்பட வேண்டியது அவசியம். பல ரஸங்களும் (உணர்ச்சி வெளிப்பாடுகள்) நடனத்தில், ஒவ்வொரு குறிப்பிட்ட வர்ணத்தாலும், சமிக்ஞைகளாலும் குறிப்பிடப்பட வேண்டும்.

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கடவுளும் இருக்கிறான்.

'சிருங்கார ரஸத்தை' சித்தரிக்க வேண்டுமானால், அதாவது சிற்றின்ப உணர்ச்சி—சிருஷ்டிக்கு மூல காரணமான உணர்ச்சி—அதன் கடவுளானவிஷ்ணுவின் நிறமான பச்சை நிறம் நடனத்தில் பங்கு கொள்ளவேண்டும். 'வீர ரஸம்''...... லேசான மஞ்சள், அல்லது பொன் நிறம் இவைகளால் குறிக்கப்படவேண்டும். 'சாந்த ரஸம்'—அமைதியானது. இதற்கு வெள்ளை வர்ணமே ஏற்றது. 'ருத்ர நடனத்திற்கு' சிகப்பு வேண்டும். அதாவது பயங்கரமான உணர்ச்சிகளை பெருக்குகளைக் கொட்டுவது. 'பீபஸ்த்தா'—இது வெறுப்பைக் காட்டுவது. இதற்கு ஏதாவது மந்தமான வர்ணம் போதுமானது. 'கருணை ரஸத்திற்கு, கருப்பே சிறந்தது. காதல், துக்கம், அமைதி முதலிய நிரந்தரமான மனித உணர்ச்சிகள், "ஸ்தாயிபாவம்" என்ற வகுப்புள் அடக்கும்.

நடுக்கம், வியர்வை பெருக்குதல், பேச்சற்றுப் போதல் முதலிய திடீர் உணர்ச்சிகள், "சத்துவின் பாவம்" என்ற வகுப்புள் அடங்கும்.

நாட்டியத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் மலையாளத்து நடனங்களைப் பற்றிச் சொல்லாமலிருக்க முடியாது. கதா—களி நடனம் என்பதே இங்கு தலை சிறந்த நடனம். இங்கு இன்னும் இது உயிருடன் இருக்கிறது. கதா—என்றால் கதை—என்று அர்த்தம். களி—நாடகம். அதாவது நாட்டிய நாடகங்கள். 'கதா—களி'யின் மூலமாக புராணங்களும், பாரம்பரையாக வரும் கட்டுக்கதைகளும் மிகவும்

அற்புதமாக சித்தரிக்கப் படுகின்றன. கதாகளி—நடனத்தில் சாதாரணமாக, மஹாபாரதம், ராமாயணம். இவைகளிலிருந்து பல கட்டங்கள் காட்டப்படுகின்றன. சமிக்ஞைகளினாலும், தாளத்துடன் இழையும் அடிகளினாலும், இந்த கதா—களி நடனம் நடைபெறும். திரைக்குப் பின்புறத்திலிருந்து கதைக்குள்ள பாட்டை ஒருவன் பாடுவான். ஆக, கதா—களி ஆட்டக்காரர்கள் பேசுவதே கிடையாது. சில மத சம்பந்தமான பண்டிகை நாட்களில் மலையாளத்தில் இந்த நடனம் ஒரு இரவு பூராவும் நடப்பதுண்டு. இந்த நடிகர்கள் பல விசித்திரமான உடைகளைத் தரிப்பார்கள்—புராணக் கடவுள்களை உருவப்படுத்த வர்ணம் பூசப்பட்ட முகமூடிகளும் அணிந்து கொள்வார்கள். 'கதா களி' நாட்டியக்காரியான ஸ்ரீமதி. ராகினிதேவி ஒரு சமயம் பின் வருமாறு குறிப்பிட்டாள்:—

"கதா—களி பைசாச வேஷம் மனதினாலும் கருத முடியாத பயங்கரம் நிறைந்தது. அவ்வளவு பரிபூரணமான வேஷக்கலையை கதா—களியில் தான் காணமுடியும். இதில் மனித உள்ளத்தின் கீழ்த்தரமான உணர்ச்சியிலிருந்து, தீப்பொறி பறக்கும் கோபம் வரையில் சித்தரிக்கலாம். இது நினைப்பதற்கு கோரமாயிருந்தாலும், பூரணமாக இந்த உணர்ச்சிகளை இதில் தான் காட்ட முடியும்".

இத்தகைய நடனத்தில் கீத வாத்தியங்களின் இசை பிரதானத்துவம் வகிக்கின்றது. இதற்குரிய வாத்தியங்கள் எளிமையானவைகள். ஆனால் வாசிக்கப்படும் நாதங்களோ விசித்திரமானவை. ஜாலர்கள், மத்தளம், மிருதங்கம்—எல்லாம் இந்த நடனத்தில் உபயோகப்படும்.

கதா களி நடனத்திற்கு 'செண்டை' என்ற வாத்தியமே ஏற்ற இன்னிசைக் கருவி. இது ஒரு பெரிய மத்தளம் போன்றது. கம்புகளால் ஒரு பக்கத்திலேயே அடித்து ஓசையை எழுப்புவது.

மலையாளத்தின் கவிஞரான வள்ளத்தோலினாலேயே 'கதா—களி' மறு மலர்ச்சி யடைந்தது. இவரால் தான் கொச்சியில் கேரள கலா மண்டலம் ஏற்பட்டது. இதில் நாட்டியக் கலை போதிக்கப்பட்டு வருகிறது. இந்த கஷ்டம் நிறைந்த கலையின் மறுமலர்ச்சியின் வளர்ச்சிக்கு பெரிதும் காரண கர்த்தராயிருப்பவர் ஸ்ரீ சங்கரன் நம்பூத்ரி என்பவர். இவராலேயே கதா—களி இன்றைய உன்னத நிலைக்கு வந்துள்ளது.

உதய சங்கர், மேனகா இவர்களின் நடனங்களும் கலைசிறந்தவைகள். உதய சங்கருக்கு உகந்த நடனம் லங்கா—தகன நடனம். இதை கதா—களி' நடன இனத்தில் சேர்ந்ததென்றே சொல்லவேண்டும். ஆனால் 'அறுவடை நடனம்' தான் சங்கரிடமுள்ள இயற்கைச் சக்தியையும் சாமார்த்தியத்தையும் தெளிவாக்குகின்றது. ஒரு கழனியில் சில பையன்கள் சந்தோஷமாக கூத்தடித்தநிலையில் பயிர்களை அறுவடை செய்து வருகின்றனர். அப்போது ஒரு சூன்யக்காரி அங்கு தோன்றுகிறாள். அவளைக் கண்ட அந்த பையன்களில் ஒருவன் மயக்கம் போட்டு விழுந்து விடுகிறான். அப்போது சங்கர் ஒரு மாந்திரிகன் வேடத்தில் தோன்றி, அந்தப்பையன்களையை தெளிவிக்கிறான். உடனே யாவரும் மீண்டும் நடனமாடுகின்றனர். இதுதான் 'அறுவடை நடனம்' 'சிவ—பார்வதி' நடனம், அல்லது 'நிருத்திய—துவந்தம்' (சிவனும் பார்வதியும் போட்டிப் போட்டுக்கொண்டு நடனமாடுவது) என்பதும் சங்கருக்கு பிரியமான நடனங்களில் ஒன்று. இதில் அவர் ஏராளமான ரஸ உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறார். மேனகாவின் 'கிருஷ்ண லீலை' 'லக்ஷ்மியின் அவதாரம், ஆகியவை குறிப்பிடத் தக்கவை. 'லக்ஷ்மியின் அவதாரம்' என்ற நடனத்தை மேனகா; பல வர்ணச் சித்திரங்களிலிருந்தும், சில்பங்களிலிருந்தும் 'காபி'. அடித்துள்ளாள். இந்த இரண்டு நடனங்களிலும் கீத வாத்தியங்களினாலேயே பெரு வெற்றி யேற்பட்டுள்ளது.

வடநாட்டில் மார்வாரி நடனம் மஹா மேன்மை வாய்ந்தது. இதன் மேன்மையை உணர்ந்தோர் ஒரு சிலரே யாவர். இந்த நடனத்திற்கு பிறப்பிடம் ராஜபுதன நாடுகள். ஜோதிபுரி சமஸ்தானத்தில் தான் இந்த நடனம் இன்றும் புகழ்பெற்று மிளிர்கிறது. இதில் அங்கங்களின் அழகே பிரதானத்துவம் வகிக்கும்.

'கிருஷ்ண தாண்டவ' நடனம் என்று மற்றொரு விதமான நடனமும் இருக்கின்றது.

இந்த 'கிருஷ்ண தாண்டவ' நாட்டியக் கலை அவ்வளவு புராதன மானதல்ல. இந்தக் கலையை பெரிதும் ஆதரித்தவர் காலஞ்சென்ற அயோத்தி மன்னர் நவாப் வாஜித் ஆலி ஷா என்பவர். இவரே இந்த நடனத்தில், பெரிய நிபுணர். இந்த நடனத்தில், அன்ன நடை, யானை நடை, மணிப் புறுக்கள் நடை—முதலியவைகளெல்லாம் தத்ரூபமாய் சித்தரிக்கப்படும். அடிகளின் அசைவின் மூலமாகவே, தபேலா, மிருதங்க நாதங்களை எழுப்புவதும் இந்த நடனத்தின் முக்கிய அம்சம். ஊசி விழுவதால் ஏற்படும் சப்தத்தைக்கூட இந்த நாட்டியக்காரனின் அடிகள் கேட்கும்படிச் செய்யுமாம். இதில்

பிருந்தா, கால்சா, ஆச்சான், பண்டித் விஸ்வநாத், நேபாள சமஸ்தானத்திலுள்ள ராம் தத்தா இவர்கள் பெரிய நிபுணர்கள். இவர்களனைவரும் மாண்டுபோனவர்கள். இவர்கள் சிஷ்யர்களைத் தான் இப்போது நேபாளம், ஜோதிபுரி சமஸ்தானங்களில் காண்கிறோம். இவர்களில் சிலர் இன்றும் கூர்மையான கத்திகள்மீது நடனமாடும் காட்சி யாவரையும் திகைக்க வைக்கின்றது. இது உண்மையில் மிகவும் கஷ்டமானதோர் கலை. இதற்கு ஆதரவு அவசியம்.

இதுதான் இந்திய நடனத்தின் சாராம்சம். இன்னும் இதர விஷயங்களைப் பற்றி பின்னர் எழுதுவேன்.

“சந்திரோதயம்”

மாதமிருமுறை வெளிவரும் தமிழ்ப் பத்திரிகை

சந்தா விகிதம்

உள் நாடு

	ரூ.	அ.	ப.
வருட சந்தா	3	0	0
ஆறுமாத ,,	1	10	0
தனிப் பிரதி	0	2	0
இலங்கையில் தனிப்பிரதி	0	2	6

வெளி நாடு

வருட சந்தா	5	0	0
ஆறுமாத ,,	2	12	0
தனிப்பிரதி	0	4	0

மாதிரிப்பிரதி வேண்டுவோர் 0-2-0 ஸ்டாம்புகள் அனுப்பவும்.

மானேஜர்,
“சந்திரோதயம்”
வண்ணாரப்பேட்டை,
சென்னை.

படமுதலாளிகளே!

தோல்வியடைந்த உங்கள் படங்களுக்கு புத்துயிரளிக்க

இதோ

விஜேதைக் காதலன் :: ::
:: :: விபரீத விளைவு

என்னும் ஹாஸ்ய கதை சினிமா உலகில் சுமார் 10 வருடங்கள் அநுபவம் வாய்ந்த பி. பி. சாமி என்பவரால் எழுதப்பட்டு தயாராய் இருக்கிறது.

வேண்டுவோர் எழுதுக:—

P. P. SAMY,
c/o “சந்திரோதயம்”
வண்ணாரப்பேட்டை, மதருஸ்.

நுனிக்கொம்பில் நின்று அடிக் கொம்பை வெட்டும் மூடன்!

பண்டிதன் சதிசெய்யும் சூழ்ச்சியால் அரசிளங் குமரியை மணம் செய்த மாரன்!

காளியின் வல்லமையால் கல்விக் களஞ்சியமாகிய

கவிரத்ன-காளிதாஸ்

T. S. சந்தானம்
M. R. சந்தானலக்ஷ்மி
P. T. நாகபூஷணம்
முதலியோர் நடித்தது.

நாதஸ்வர வித்வான்
T. N. ராஜரெத்னம் பிள்ளை
ஊர்வலக் கச்சேரி, தர்பார், சங்கீதக் கச்சேரி மற்றெந்தப் படக்காக்ஷியிலும் காணுதற்கரிய சம்பவம்.

விபரங்களுக்கு:— கணேஷ் பிலிம்ஸ்,
20, சுங்குராம செட்டித் தெரு, ஜி. டி. மதராஸ்.

பாம்பேயின் வீழ்ச்சி

[ஸ்ரீ. ஏ. டி. பாலசுப்பிரமணியம்]

கி. பி. 79-வது ஆண்டு. ஆகஸ்டு மாதம் தென் இதாலியில் வெய்யல் தணலாய்க் காய்ந்து கொண்டிருக்கிறது. அந்த நாட்களில், இப்போது நேபிள்ஸ் பூசந்தி என்றழைக்கப்படும் இடத்தில் இரண்டு அழகிய நகரங்கள் இருந்தன.

இரண்டுக்கும் இடையில் சில மைல் தூரமே இருந்தது. கடற்கரைச் சரிவில் எழுந்து நின்ற எரிமலையால் இந்த இரண்டு நகரங்களும் பிரிக்கப்பட்டிருந்தன. இந்த எரிமலையின் பெயர் வெஸூவியஸ். பாம்பே, ஹெர்குலேனியம் என்பது அந்த நகரங்களின் பெயர்கள்.

சரியாக 1857-வருஷங்களுக்கு முன்பு, அந்த ஆகஸ்டு மாதத்தில் இரண்டு நகரங்களிலும் ஜனக்கூட்டம் சொல்லி முடியாது. வியாபாரம் மும்முரமாக நடந்து வந்தது. ஹெர்குலேனியத்திலுள்ளவர்களெல்லாம் பெரிய ரோமானியப் பிரபுக்கள்.

இந்த இரண்டு நகரங்களும் ஒரு எரிமலையின் சரிவுகளில்தான் கட்டப்பட்டிருந்தன. ஆனால் வெஸூவியஸ் தனது ஸ்வரூபத்தைக் காண்பித்து ஒரு நூற்றாண்டுக்கு மேலாகி விட்டது. ஆனால் அப்போதும் மெல்லிய புகைப்படலம் மட்டும் அதன் வாயிலிருந்து வந்து கொண்டிருந்தது. ஜனங்களோ அது சக்தியற்று அணைந்துவரும் ஒரு மலை என்று நம்பினர்.

தங்கள் வாழ்க்கையை அவர்கள் கவலையின்றி நடத்தி வந்தனர். மது ரஸ மருந்தி மகிழ்வுடன் இருந்தனர்; சிலர் ஏராளமான உயரிய நகைகளை வாங்கி உள்ளம் களித்தனர். சிலர் ரோமானிய ஸ்நான கட்டங்களுக்குச் சென்று நிர்வாணமாக நீர் விளையாடினர்.

ஜுலை—ஆகஸ்டு மாதங்களுக்கிடையில் அங்கு ஒரு மாதிரி 'பூ' என்ற உறுமல் சப்தம் கேட்டது. பூமி சில சமயங்களில் சீறியது. அருகேயிருந்த வெந்நீர் ஊற்றுக்கள் அதிகமாக கொந்தளித்தன. நகரைச் சுற்றியிருந்த காற்று வெப்பமடைந்தது. ஆனால் இவைகளைப் பற்றி ஒருவரும் சட்டை செய்யவே இல்லை.

பாம்பேயில் மாலை நேரம். குறுகிய வீதிகள் வழியாக ஜனங்கள் தங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர். பலர் வீடுகளில் விருந்துகள் நடந்து கொண்டிருந்தன.

திடீரென்று இடியொலிச் சப்தம் ஒன்று வானத்தைக் கிழித்துச் செல்வது போல் தோன்றியது.

வெஸூவியஸ் மலை தனது வேலையைத் தொடங்கி விட்டது. வாயிலிருந்து மேக மண்டலங்கள் புதைபாணங்கள் மாதிரி கிளம்பி, வானத்தை கருமயமாக்கின. பூமி அதிர்ந்தது.

வானத்திலிருந்து சாம்பல்கள், சூடான ஆலங் கட்டிகளைப்போல் விழுந்தன. பயத்தில் ஜனங்கள் வீதிகளுக்கு ஓடிவந்தார்கள். ஆனால் பயன் என்ன? எங்கு போவது?

சில நிமிஷங்களில் வீதிகள் பூராவும் முழங்கால் சாம்பல் நிறைந்து விட்டது. அதன் பிறகு தணலான கற்களை எரிமலை நெருப்பு மழையைப்போல் நகரத்தில் வீசியது. வீடுகள், மற்ற பொருட்கள் எல்லாம் தீப்பிடித்துக் கொண்டன. சில நிமிஷங்களுக்கெல்லாம் நகரம் பூராவும் தீப் பிடித்துக்கொண்டது.

தப்பவோ வழியில்லை. புகையால் கண்களும் தெரியவில்லை. வீதிகளில் நெருப்புக்கற்கள். வீடுகளோ தீப்பிடித்து எரிகின்றன. எங்கு ஒதுங்குவது? எங்கு நிற்பது? ஆயிரக் கணக்கான பேர்கள் பிணமாய் விட்டார்கள்.

ஹெர்க்குலேனியம் இன்னும் அதிக கேவலமாக அழிந்தது. அந்த நகரம் பாம்பேயைவிட பெரிதானது.

தவிரவும், எரிமலைக்கு அருகிலிருந்த நகரமும் அதுதான். அதிர்ச்சி ஏற்பட்டு, கற்களும், உலோகங்களும் உருகி அக்கலவைக் குழம்பு எரிமலைவாயில் கொந்தளித்து வானத்தில் பாய்ந்தபோது, அக்குழம்பு ஹெர்க்குலேனியம் வீதிகளில் பாய்ந்தது.

இந்த அக்கினிக் குழம்பு உடலில் படுகிறதென்றால் யார்தான் சகிக்க முடியும்? தப்புவதற்கோ நேரமில்லை. எங்கும் கந்தக நெருப்பு சூழ்ந்து விட்டது. இரும்பு நெஞ்சமும், கீறின் கோட்டில் நிற்கும் தன்மை யுடையவர்களான காவலாளிகள் மட்டுமே அவர்கள் இடத்திலிருந்து அசையாது நின்றுகொண்டிருந்தனர். அவர்களையும் அந்தக் குழம்பு மூடிவிட்டது.

நாய்கள், குழந்தைகள், பட்சிகள், பூச்சிகள், காதலர்கள்-யாவரும் ஒரு கணத்தில் மாண்டுவிட்டனர். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே இவர்கள் கல்லாய் மாறின உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டன. பயத்தினாலும், ஹிம்சையினாலும் அவர்கள் உடல்களும், முகங்களும் எப்படி கோரமாக மாறின வென்பது அந்தக் கல் சிலைகளிலிருந்து தெரியவருகிறது.

அந்த இரவு பூராவும், பின்னர் பல நாட்கள் வரையிலும் ஹெர்க்குலேனியம் பூராவும் உலோகக் குழம்பு ஓடி வீடுகள் முதலியவைகளை அப்படியே மூடிவிட்டது. இந்த உருகி ஓடும் ஆறுகள் உறைந்து போவதற்கு முன்பே, ஹெர்க்குலேனியம் 100 அடிக்குக் கீழ் மெதுவாகக் கல்லாகி வந்தது.

ரோமானியர்கள் இந்த நகரங்களை அடியோடு கைவிட்டு விட்டார்கள். மீண்டும் அவைகளைக் கட்ட அவர்கள் முயற்சியெடுக்கவில்லை.

காலம் அந்த விபத்தைப் பற்றி ஒரே ஒரு மனிதனுக்குத் தான் தெரியப்படுத்தியது. அவன் தான் பிளினி. விபத்தின் தன்மையை நேரில் கண்ட அவன், அப்படியே சித்தரித்து விட்டிருந்தான்.

இதைத் தவிர, இதைப்பற்றிய வரலாற்றை, பல்வர் லிட்டன் எழுதிய "பாம்பேயின் அந்திய நாட்கள்" என்ற புஸ்தகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இரண்டு யுகங்கள் வரையில் அவைகள் பூமியின் கீழிருந்ததென்பதே ஒருவருக்கும் தெரியாது. 1592வது வருஷம், ஒரு கால்வாய் கட்டவேண்டி, பாம்பேயின் மூலமாக ஒரு சுரங்கம் வெட்டப்பட்டது. அப்போது தான் பாழடைந்த நகரம் அகப்பட்டது. ஆனால் 1748-வருஷம் வரையில் உண்மையில் ஒரு பரிசோதனையும் நடைபெறவில்லை. அப்போது தான் ஒரு குடியானவன் சில சிலைகளையும், வெண்கலங்களையும் கண்டெடுத்தான்.

இது இதாலியின் அரசனான 3-வது சார்லஸின் கவனத்தைக் கவர்ந்தது. சார்லஸ் பெரிதும் கற்றறிந்தவன். அதைத் தோண்டும்படி உத்திரவிட்டான். ஆனால் அவனுக்கு நகைகளும், சிலைகளும் தான் வேண்டியிருந்தது. 1860-வது வருஷத்தில்தான் விஞ்ஞானிகள் உதவியுடன் இந்த நகரங்கள் தோண்டப்பட்டன. 1719-வது வருஷம் வரையில் ஹெர்க்குலேனியம் கண்டுபிடிக்கப் படாமலிருந்தது. அந்த வருஷம் ஒரு குடியானவன் அங்கு ஓர் கிணறு வெட்டினான். அதன் துவாரம் ஒரு பெரிய மண்டபத்திற்குள் சென்றது. அது தான் புராதன ரோமானிய நாடகச் சாலை.

100 அடிக்குக் கீழ்தான் நகரங்கள் இருந்தன. ஆனால் ஒவ்வொருவரும் சுரங்கங்கள் வெட்டுவதுடன் திருப்தி யடைந்து விட்டனர்.

சென்ற சில வருஷங்களுக்கு முன்பு தான் புதைந்து போன நகரம் பூராவும் வெளியிலெடுக்கப் பட்டன. அதனது வீதிகள் மீண்டும் வெளிக்கொண்டு வரப்பட்டன.

இப்போது அங்கு எல்லாப் பொருட்களும் அப்படியே கண்டு பிடிக்கப்பட்டு சரியான நிலைமையில் வைக்கப் பட்டிருக்கின்றன.

இந்த ஆயிரக்கணக்கான பிரிட்டிஷ் சுற்றுப் பிரயாணிகள், இறந்துபோன இந்த நகரங்களின் வீதிகளின் நடந்து செல்கின்றனர். வழிகாட்டிகள், ரோடுகள், ரோமானிய வாயில்கள், இறந்துபோன காவல்காரர்கள் இவர்களை யெல்லாம் அவர்களுக்கு காட்டுகின்றனர்.

இப்போதும் வெஸூவியஸ் உருமிக்கொண்டு தானிருக்கிறது. புகையும் மறைந்த பாடில்லை. அதைப் பார்க்கும்போது ஒவ்வொருவனும் நடுநடுங்குகிறான்.

இப்போது மலைமீதே, அதாவது அசையும் வாயின் அருகிலேயே ஒரு நக்ஷத்திரசாலை இருந்து வருகிறது. விஞ்ஞானிகள் அங்கு இரவு பகல் தூக்கமின்றி மலையின் போக்குகளை ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

இருபது வருஷத்திலிருந்து 30 வருஷங்களுக்கு ஒரு முறை தான் எரிமலை தனது வேலையை ஆரம்பிக்குமென்பதை அவர்கள் தற்போது கண்டுபிடித்திருக்கின்றனர்.

இப்போது அவர்கள் இதைவிட அதிகமான விவரங்களையும் எடுத்துக் கூறுகின்றனர். எந்த மணியில் எரிமலையை எதிர் பார்க்கலாம் என்பதை நுணுக்கமான கருவிகள் எடுத்துக் காட்டுகின்றன. வரப்போகும் அதிர்ச்சி எவ்வளவு வேகமாயிருக்கும் என்பதையும் இவைகள் காண்பிக்கும்.

இப்போது ஜனங்கள் முன்மாதிரி மாள வேண்டியதில்லை. பல மணி நேரங்களுக்கு முன் அவர்களுக்கு எச்சரிக்கை செய்து விடலாம்.

நீராவி அதிகமாக, பலகோடி டன்கள் பரிமாணத்தை அடைந்து வெளிவர முடியாத நிலையில்தான் எரிமலை வேலை செய்யத் தொடங்கி விடுகிறதென்பதையும் அவர்கள் கண்டறிந்து விட்டனர்.

இதற்காக வேண்டி, அவர்கள் மலையைச் சுற்றி பல சுரங்கங்களை வெட்டி யுள்ளனர். இன்னும் பல துவாரங்களையும் செய்துள்ளனர். இதனால் நீராவி எவ்வளவுதான் அதிகமானால் கூட, முன் மாதிரி அது உக்கிரமாய் வேலை செய்யமுடியாது.

இன்னும் பல பரிக்ஷார்த்தமான வேலைகளையும் அவர்கள் நடத்தி வருகின்றனர்.

அப்படி எரிமலை வேலை செய்யுமானால், உலோகக் குழம்பு உருகி பல வழிகளில் ஓட, கணக்கற்ற வாய்க்கால்களையும் தோண்டி வருகின்றனர்.

இரவும் பகலும் வேலை நடக்கிறது. விரைவில் வெஸூவியஸின் பல் பிடுங்கப்பட்டு விடும். ஆனால் ஆண்டவன் சித்தமும் இதற்கு இணங்கவேண்டும். இல்லாவிட்டால் விஞ்ஞானிகள் வேலை யெல்லாம் கனவுகளாகிவிடும்.

தினசரி 3 காக்ஷிகள்! தினசரி 3 காக்ஷிகள்!!

செப்டம்பர் மாதம் 12-ந் தேதி சனிக்கிழமை

மகத்தான ஆரம்பம்!

கெயிட்டி தியேட்டரில்

ஸ்ரீமதி டி. பி. ராஜலக்ஷ்மி

ஸ்ரீமான்

எம் ஆர். கிருஷ்ணமூர்த்தி

ஸ்ரீமான்

டி. பி. ராஜகோபால்

முதலியோர் நடித்தது.

சீமந்தனி

அல்லது

சோமவார விரத மகிமை

இத்துடன்:

எம். எஸ். முருகேசன்,

எம். ஆர். சுப்ரமணிய முதலியார், எம். எஸ். ராமச்சந்திரன், எம். ஏ. கணேசன், குளத்து மணி அய்யர், மிஸ். அங்கமுத்து, சக்குபாய் முதலியோர் நடித்த

மூன்று மடையர்கள்

என்னும் ஹாஸ்யப் பகுதி காண்பிக்கப்படும்.

தமயந்தி குமாரிகளின் சங்கீதத்துடன் கூடியது.

-: நேஷனல் மூவிடோனின்

பொக்கிஷ ரத்தினம்.

"கவிரத்ன காளிதாஸ"ல் நடிக்கும்

ஸ்ரீமதி. T. P. லோகநாயகி



"வீர அபிமன்யூ" வில் ஒரு காட்சி.



"வீர அபிமன்யூ" என்னும் தமிழ் படத்தின் யுத்தகளம்



''சந்திர மோஹனா' அல்லது ''சமூகத் தொண்டு'' வில் ஒரு காட்சி.

சலூன் வாலா *

"இளங்கோவன்"

இது ஒரு நாவிதரின் கதை.

இந்த நாவிதரின் பெயர் கந்தய்யா. வயதோ எழுபதுக்குமேல் ஓடிவிட்டது. மஹா சாதுவான மனிதர். தனது வாழ்க்கையில் உயிருள்ள எதையும் இவர் கரம் தொட்டு ஹிம்ஸித்ததில்லை.

மவுண்ட் ரோட்டில் நீல் சிலை யருகிலிருந்த சலூன் ஒன்றில் தான் இவர் வேலை செய்து வந்தார். கிழவனார் அவ்வளவு உயரமல்ல! இவர் தலை மயிரோ வெண்பனி உருவத்தில் விளங்கியது.

அங்கிருந்த ஐந்து நாற்காலிகளில் இரண்டாவது நாற்காலிதான் கந்தய்யாவினுடையது. முதல் நாற்காலியில் சலூன் எஜமானன் வேலை செய்து வந்தான். க்ஷவரம் செய்து கொள்ள ஒருவன் வந்துவிட்டால் போதும்! அங்கிருக்கும் ஐந்து பேர்களும் ஏக காலத்தில் அவனைக் கவனிக்க ஆரம்பித்துவிடுவார்கள். ஒருவன் 'வாருங்கோ' என்று வயணமாய் கை காட்டி அழைப்பான். மற்றொருவன் தனது புன்னகையினால் வரவேற்பான். இன்னொருவன் கண் வேலையினாலேயே வந்த ஆசாமியின் கருத்தைக் கவர்வான். எல்லார் உதடுகளிலும் சிரிப்பும், கண்களில் கொஞ்சல் பார்வையும் தாண்டவமாடும்.

கந்தய்யாவைப் போல் எஜமான விஸ்வாஸம் பொருந்திய வேறு ஆள் அந்த சலூனில் கிடையாது. தம்மாலான மட்டும் கிழவர் சலூனுக்கு வருகிறவர்களை வரவேற்பார். ஆனால் அவருக்கு ஒரு வாடிக்கைகூட பட்டது கிடையாது. அவர் கிழவனாராக இருந்தது இதற்குக் காரணமாக இருக்கலாம்; அல்லது ஒரு வேளை 'கிழவன் நன்றாக க்ஷவரம் செய்ய மாட்டான்' என்று அவர்கள் நினைத்திருக்கலாம். எது எப்படியிருந்தாலும் அவர்கள் வயோதிகரை கவனிக்காது மற்ற நான்கு பேர்களிடமே க்ஷவரம் செய்து கொண்டனர்.

> சென்ற இதழில் இந்தக் கதை மிகவும் அவசரமான நிலைமையில் 'புரூப்' கூட பார்க்காமல் வெளியிடப்பட்டது. அதன் காரணமாக சொல்லமுடியாத பிழைகள் ஏற்பட்டுவிட்டன. வாசகர்களையும், 'இளங்கோவன்' அவர்களையும் திருப்திப்படுத்த வேண்டி, நன்கு திருத்தப்பட்டு இது இம்முறையும் பிரசுரிக்கப்படுகிறது.
>
> ஆசிரியன்.

எஜமானனான சங்கரலிங்கம் கிழவனாருக்கு எப்போதோ 'சீட்டு' கொடுத்து விட்டிருப்பான். ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. அவனுக்கு கந்தய்யாவிடம் அளவற்ற ஆசை. இருபது வருஷங்களுக்கு மேலாக பாரிச வாய்வால் அவஸ்தைப் பட்டுவரும் ஒரு மனைவியுடன் கந்தய்யா எவ்வளவு காதல் கொண்டிருக்கிறார் என்பதையும் அறிவான். சொற்ப சம்பளத்தில் ஒவ்வொரு தம்படியையும் தனது மனைவியைக் காப்பாற்றவே கிழவர் செலவழித்து வருகிறார் என்பதும் சங்கரலிங்கத்திற்குத் தெரிந்த விஷயம்.

அதுவும் தவிர, சங்கரலிங்கத்திற்கு மனச்சாட்சியும் இருந்தது. "வேலையிலிருந்து நீக்கிவிட்டால், கிழவனாருக்கு வேறு வேலை எங்கும் கிடைக்க முடியாது. இப்படியே இருப்பது நல்லது. கந்தய்யா ஆயுள் வரையில் இங்கேயே வேலைபார்த்துவரலாம்.' என்பது அவன் எண்ணம்.

இப்படியாக பல வருஷங்கள்—நெடுங் கனவைப்போல்—தோன்றி மறைந்தன.

சென்ற மாதத்தில் ஒரு நாள், கடையை மூடிக்கொண்டு போகும் வரையில் இருக்கும்படி கந்தய்யாவிடம் சங்கரலிங்கம் சொன்னான். கிழவனாருக்கோ (இப்போது வயது எண்பத்தொன்று) ஆச்சர்யமும், திகைப்பும், கவலையும் ஏற்பட்டுவிட்டன. மற்றவர்கள் போகும் வரையில் கந்தய்யா காத்துக்கொண்டிருந்தார்.

"தாதா! கடையை விற்றுவிட்டேன். நானும் குடும்பத்துடன் சிங்கப்பூருக்குப் போகிறேன். உன்னைப்பற்றிதான் கவலையாயிருக்கிறது. இந்தக் கடையை வாங்கின மனிதன் நல்லவன். ஆனால் தொழிலில் இரும்பு மனசுடையவன், இதனாலேயே தாதா! நான் கவலைப்படுகிறேன்" என்றான் எஜமானன் சங்கரலிங்கம்.

"ஆனால் நீ கவலைப்பட வேண்டிய தில்லை. ரத்

* இந்தக் கதையில் வரும் பெயர்களெல்லாம் வெறும் கற்பனை.

தினப்பா நாளைக்கு இங்கு வரும்போது அவனைக் கவர்ச்சி செய்யும் முறையில் நீ நடந்து கொள்ள வேண்டும். உன்னாலான மட்டும் புன்னகை செய். அப்படி ஒன்றும் அதிக வயதாகி விட்டதாக நீ அவரிடம் காட்டிக்கொள்ளக் கூடாது. கடையில் நீ ஒருவனே கைதேர்ந்த வேலைக்காரன் என்றும் நான் அவனிடம் ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். தெரிகிறதா?......"

கிழவனார் தலையாட்டினார். தமது நன்றியை சிரிப்பினால் தெரிவித்துக்கொண்டார். ஆனால் என்ன நேரப் போகிறது என்பது அவருக்கு தெரியும்........

வீட்டில் இதைப்பற்றி அவர் ஒன்றும் பிரஸ்தாபிக்கவில்லை. கந்தைப் பாயின்மீது படுத்துக்கொண்டிருந்த கிழவியை முத்தமிட்டார் கிழவனார். யௌவனத்தில் அவளிடமிருந்த அழகை கந்தய்யா வர்ணிப்பதில் கிழவிக்கு இன்பமதிகம். அதையும் வழக்கம் போலச் செய்தார். அவர் ஏதோ 'கொள்ளைப் பசி' யுடையவரைப்போல வெளிக்குக் காணப்பட்டாரே ஒழிய, கால் கலயஞ் சோற்றைக்கூட அவரால் அன்று சாப்பிட முடியவில்லை.

காலையில் ரத்தினப்பா — புது எஜமான் — ஸலூன் ஆட்களைக் பார்வையிடவேண்டி கடைக்கு வந்தான். நல்ல கம்பீரத் தோற்றமும், முறுக்கு மீசையும், அவன் தலையிலிருந்த முண்டாசும் கந்தய்யாவின் உள்ளத்தைக் கலக்கின. வெளி நபர்கள் ஒருவருமில்லாதபோது ரத்தினப்பா தனது ஆட்களிடம் பேசினான்.

"இந்தக் கடையை 'அப்-டு-டேட்' டாக்க வேண்டும். இந்த மாதிரி பழங் கந்தல் கடையாக இருந்தால் எனக்கு கிராக்கி போய்விடும். சனிக்கிழமை சங்கரலிங்கம் உங்களுக்கு சம்பளம் கொடுப்பார். அதிலிருந்து உங்களுக்கு இரண்டு வாரங்களுக்கு வேலையில்லை. பின்னர் நான் உங்களுக்கு சொல்லியனுப்புகிறேன். அப்போது வேலைக்குத் திரும்புங்கள்'

கந்தய்யாவின் ஹிருதயம் வீழ்ந்து விட்டது. இரண்டு வாரங்கள், சம்பளம் கிடையாது. அதற்கப்புறம்? அப்புறம் என்ன?

இரண்டு வாரங்களும் சுழிந்தன. ஆனால் கந்தய்யாவிடம் எந்த ஆளும் வரவில்லை. ஆனபோதிலும் சற்று மனதை திடம் பண்ணிக்கொண்டு அவர் கடைக்குப் புறப்பட்டு விட்டார். ரத்தினப்பா அங்கிருந்தான். சலூன் சட்டையை கிழவர் மாட்டிக் கொண்டபோது ரத்தினப்பாவின் முகம் மாறப்பட்டது. மத்தியான முழுவதும் ஒரு ஆசாமிகூட கிழவரிடம் க்ஷவரம் செய்து கொள்ளாது மற்றவர்களிடமே க்ஷவரம் செய்து சென்றதை கண்டான் புது எஜமானன். அப்போது அவன் கந்தய்யாவை அழைத்தான்.

"கந்தய்யா! இங்கு சனிக்கிழமை வரையிலேயே நீ வேலை செய்யலாம். அது வரையிலும் நான் உன்னை இங்கு வேலைக்கு வைத்திருக்கிறேன். அதற்குள் புது வேலை சம்பாதித்துக் கொள்ள உனக்கு நேரமிருக்கிறது. அதுவுந் தவிர இங்கு காலேப் பையன்களையே வேலைக்கு அமர்த்தப் போகிறேன்"

கந்தய்யா திகைப்பினால் சுற்று முற்றும் பார்த்தான். எல்லாம் மாறிவிட்டிருந்தன. விசித்திரமான படங்கள் சுவரில் தொங்கின. அங்கங்கே சிறு சிறு குழாய்கள் காணப்பட்டன. பெரிய பெரிய நிலைக் கண்ணாடிகள். சில புதிய ஆட்கள் 'சிகரேட்' அடித்துக் கொண்டிருந்த காட்சியும் பெரியவர் கண்களுக்குப் பட்டது. எல்லாம் நூதனமாக யிருந்தன.

"தாதா! நீ கவலைப்படக் கூடாது" என்று மெதுவாகச் சொன்னான் ரத்தினப்பா. எங்கே பெரியவருக்கு அங்கேயே மாரடைத்துப் போய் விடுகிறதோ என்ற அச்சம் அவனிடம் குடி கொண்டு விட்டது. 'தாதா! உலகம் ஒரே மாதிரி இருக்காது. எவ்வளவு நாட்களுக்கு பழைய சாமான்களே இருப்பது? மேலும் நாம் எது நல்லது என்று நினைக்கிறோமோ அதைத்தானே செய்யவேண்டும்?

"ஒரு வேலை சம்பாதிக்க எல்லா தந்திரங்களையும் நீ செய்ய வேண்டும். வேலையில் கைதேர்ந்தவன் என்று அவர்களிடம் சொல். நானும் அப்படியே உனக்கு ஒரு 'சர்டிபிகேட்' எழுதிக் கொடுக்கிறேன். இதை யெல்லாம் நீ எப்படிச் செய்கிறாய் என்பதைப் பற்றிக் கவலையில்லை; நீ ஒரு வேலை சம்பாதித்து விடவேண்டும். அவ்வளவுதான்."

தந்திரங்கள்! தந்திரங்களை உபயோகப்படுத்துவது? இப்படித்தான் மனிதர்கள் வேலை சம்பாதிக்கின்றார்களா? நல்லது, எப்படியாவது அவருக்கு வேலை கிடைக்கவேண்டும். இல்லாவிட்டால் ஸ்ரீமதி கந்தய்யாவின் மூச்சு நின்றுவிடும்.

அவள் மாண்டு விடுவாள். அப்புறம் அவர் தனியாக மிச்சமுள்ள கொஞ்ச நாட்களைக் கழிக்க வேண்டும். இதுவரையும் பல வருஷங்களுக்கு அவர்கள் ஒன்றாயிருந்துவிட்டு இப்போது பிரிவதென்றால்...... அவர்—கந்தய்யா—இதை அனுமதிக்கப் போவதில்லை.

மனித நம்பிக்கைக்கு எல்லையுண்டா ?

ஆதலின் ரத்தினப்பாவிடம் தமது நிலையை எடுத்துக் கூறி விவாதித்தார். இந்த வயதில் வேலை தேடுவது தம்மால் இயன்ற காரியமா ? என்று அவர் கேட்டார். தம்மிடம் வருஷக் கணக்கில் க்ஷவரம் செய்து கொண்டிருந்தவர்களெல்லாம் இப்போது மாம்பலத்தில் குடியேறிவிட்டதாகக் கூறினார். தன்னிடம் இன்னும் ஏராளமான வாடிக்கைக்காரர்கள் க்ஷவரம் செய்து கொள்வார்கள் என்றும் ஆணையிட்டுச் சொன்னார் கந்தய்யா. ரத்தினப்பா இதையெல்லாம் நம்பினானா? சிரித்துக் கொண்டே

"தாதா! வேறு வழி யில்லை. நீங்கள் சனிக்கிழமை போய்விட வேண்டியதுதான்" என்று முடிவாகக் கூறிவிட்டான் அவன். சனிக்கிழமை மாலை கடையைச் சுற்றி நோக்கினார் கந்தய்யா. அவரது உடல் கிடுகிடு வென்றாடியது. ஒரு நீண்ட மூச்சுடன் வெளியே வந்துவிட்டார் கிழவனார்.

இரவில், வீட்டில், தமது மனைவியிடம் விஷயத்தை சொல்லி 'ஒ' வென்று கதறினார். அவளும் கதறினாள்.

ஆண்டவன் நகைத்தான்.

"நம்பிக்கைக்கு வழியில்லை. உனக்கோ வயதாகி விட்டது. அவர்களுக்கோ இளைஞர்கள் தேவை. வாழ்க்கை இப்படித்தானிருக்கும். இங்கு நான் ஒரு சுமை. நான்மட்டும் உனக்கு குறுக்கே யில்லாதிருந்தால் —".

அப்போதே கந்தய்யாவின் கை அவளது வாயை மூடியது.

அடுத்த செவ்வாயன்று ரத்தினப்பா கந்தய்யா வீட்டில் தோன்றினான். கந்தய்யாவோ அவனை வரவேற்றார்.

"கந்தய்யா! நான் ஒரு தவறு செய்து விட்டேன்? நீ என் கடைக்கு திரும்பவும் வந்துவிடவேண்டும். நீ அந்த பழைய நாற்காலி யண்டையே இருக்கலாம். இன்னும் நான்கு ரூபாய்கள் சம்பளமும் உயர்த்தியிருக்கிறேன். என்ன, நாளை காலையில் வந்து விடுகிறாயா?" என்று படபடப்புடன் கூறினான் ரத்தினப்பா.

தாதா, 'ஆகட்டும்' என்று கூறி மனதார ஒரு கும்பிடு போட்டார்.

கிழவனார் உள்ளே சென்று தமது மனைவியிடம் சங்கதியைக் கூறினார். அவளால் முதலில் நம்பவே முடியவில்லை. அந்த அதிர்ஷ்டச் செய்தியைக் கேட்ட அவள் ஆனந்த பாஷ்பம் பெருக்கினாள். கிழவனாரோ விம்மி விம்மி அழுதார்.

"எப்படி விஷயத்தைச் சாதித்தீர்கள் ?" என்று கேட்டாள் மனைவி.

கிழவர் சொன்னார்:—

"என்னை எஜமான் வேலைக்குக் கூப்பிட்டதற்கு வாடிக்கைக்காரர்களே காரணம். ஆக, இந்த வாடிக்கைக்காரர்களில் பலர் கடைக்கு வந்து என்னை கேட்பதும், நான் இல்லையென்று அறிந்ததும் போய்விடுவதுமாக இருந்தார்கள். தொழிலை கைவிட முடியாததலின் ரத்தினப்பா என்னை எடுத்து கொள்ளும்படி ஏற்பட்டு விட்டது.'

"எனக்கு ஒன்றும் விளங்கமாட்டேனென்கிறதே! வாடிக்கைக்காரர்களா? எந்த வாடிக்கைக்காரர்கள்?... என்று கேட்டாள் கிழவி.

"அமிர்தம்! இந்த உலகத்தில் உனக்கு வேலை வேண்டுமானால் எல்லா தந்திரங்களையும் கையாளவேண்டும். ரத்தினப்பாதான் எனக்கு இதைச் சொல்லிக் கொடுத்தான். அது ரொம்ப சரியான விஷயம். பழையபடி எனக்கு வேலையும் கிடைத்து விட்டது. சம்பளமும் உயர்ந்தது......எல்லாம் தந்திரத்தின் பயன்?"

"வாடிக்கைக்காரர்களாவது? வண்டைக்காயாவது? அதெல்லாம் ஒன்றுமில்லை. ஆனால் பழைய வாடிக்கைக்காரர்களெல்லோரையும் எனக்குத் தெரியும்' எனக்கு வேலை போய்விட்டதும் அவர்களில் பலர் வீட்டுக்கு நேரில் சென்றேன்.

ஒவ்வொருவரிட மிருந்தும் நான் ஐந்து ரூபாய் கடன் வாங்கினேன். திங்கட்கிழமை காலையில் கடைக்கு வந்தால் காசைத் திருப்பிக் கொடுத்து விடுவதாக நான் அவர்களுக்குக் கூறி யிருந்தேன். எல்லாம் கடைக்கு வந்து என்னைக் கேட்டுவிட்டு பின்னர் வெளிநடந்தார்கள்..........."

"சந்திரோதயம்"
மாத மிருமுறை வெளிவரும
சிறந்த தமிழ்ப் பத்திரிகை.
விளம்பர விகிதம்
தடவை ஒன்றுக்கு

கடைசீ பக்கம் மேல் அட்டை (இரண்டு கலர்களில்)	40	0	0
உள் அட்டை பக்கம்	30	0	0
சாதாரண பக்கம்	20	0	0
,, ½ பக்கம்	11	0	0

அரை பக்கத்திற்குக் குறைந்து விளம்பரம் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.
மற்ற விபரங்களுக்கு எழுதுக,
மானேஜர் :
"சந்திரோதயம்"
வண்ணாரப்பேட்டை, சென்னை.

:: தேவ நாயகி ::

“ இளங்கோவன் ”

இதோ, இதை எழுதுகின்ற விரல்கள் இருபத்து மூன்று வயது இளைஞனுடையவைகள். இன்றையோடு இவன் வாழ்க்கை முடிவடைகின்றது. நாளைய உதயத்தை இவன் கண்கள் பார்க்கப் போவதில்லை. அதோ, மஹா பயங்கரமான வாயுடன் சாவுத் தேவி நின்று கொண்டிருக்கிறாள்.

நான் மகா பாவி. எனது வாழ்க்கையை நீங்கள் வெறுக்கலாம். 'பன்றியினும் கேவலமானவன்'' என்று பெண்கள் அலட்சியமாகப் பேசலாம். 'இவன் மனிதனல்ல மிருகம்' என்று சிலர் கூறலாம். என்னைப்பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். எந்த விதத்தில் தூற்றினாலும் தூற்றுங்கள். ஆனால் உங்களை, ஒன்றுமட்டும் கேட்டுக் கொள்ளுகிறேன். சற்று என்னிடம்கருணை காட்டி, எனக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள். நான் வேண்டுவதெல்லாம் பிரார்த்தனையே; வேறொன்றுமல்ல.

> “தினமணி”யில் பிரசுரமான இக்கதை கதாசிரியரின் விசேஷ அநுமதிமீது இங்கு பிரசுரிக்கப் படுகிறது.
>
> —ஆசிரியன்.

* * *

ஜோதிக் கதிர்கள் பாய்ந்த சொர்ணமயமான உடல். ரோஜா இதழ்களைப் போன்ற அவளது அதரங்களில் குழையும் புன்னகை, மனிதனை அவள் அடிமை கொள்ளப் பிறந்தவள் என்பதை தெரிவித்தது. அவள் கருவிழிகளில் லோகத்தின் சௌந்தர்யம் உருண்டு கொண்டிருந்தது. செக்கர் வானத்தைத் தழுவித் தழுவி ஓடும் கருமேகத்தைப்போல், கூந்தல் அவளது மேனியை மறைத்து மறைத்து விளையாடியது. மோகம் துள்ளும் அவளது முக விலாசத்தில் கணத்துக்கு கணம் நவநவமான உணர்ச்சிகளை மனிதன் அனுபவிக்க முடிந்தது.

அவளைக் காணும்போதே என் மன இருள் மாய்ந்துவிடுவது வழக்கம். அவள் வருகை என் உள்ளத்தில் விளக்கேற்றி வைத்ததுபோலாகிவிடும். அவளது மந்திரப் பேச்சில் ஆண் மகன் மயங்கவில்லையென்றால், அவன் மனிதனல்ல; மிருகம்.

ஆம்! அவன் ஒரு தெய்வப் பெண். வயது ஒன்பதுதான். அவ்வளவு சிறு வயதிலேயே அவளிடம் லோகத்தை ஆட்சி செய்யும் சக்தி அடங்கிக் கிடந்தது. அவள் பெயர் தேவநாயகி. என்ன அழகான பெயர்?

* * *

அவளைப்போல் நான் ஏன் இல்லை? அவளைக் கண்டால் லோகம் மயங்குகிறமாதிரி என்னைக்கண்டு ஏன் மயங்கமாட்டேனென்கிறது? உள்ளத்தில் உண்மையொளி ஓடிப்போய்விட்டது. சூதும், வாதும், வஞ்சனைகளும் மனத்தில் நிரந்தர குடிகளாகப் போய்விட்டன. அடடா! நினைத்தால் “பகீ” ரென்கிறது. சின்னப் போதினில்-அதாவது இன்றைக்கு பன்னிரண்டு வருஷங்களுக்குமுன்—என்னை இந்த மனித சமூகம் எப்படி நேசித்தது? எவ்வளவுபேர் என் காலடியிற்சுற்றிக் கிடந்தனர்? எவ்வளவு பேர்என் சிறு ஆசைகளைத் திருப்தி செய்யத் தயாராக விருந்தனர்? எவ்வளவுபேர் என்னை உச்சி முகர்ந்து முத்தமிட்டனர்? எவ்வளவுபேர் என்னைக் கட்டியணைத்தனர்? ஆனால் இப்போது அவர்களெல்லாம் எங்கே போய்விட்டனர்? என்னைப் பார்த்தால்கூட ஏன் பார்க்காததுபோல் போய்விடுகிறார்கள்? ஏனென்று கேட்கிறேன்? ஆத்மா பதில் சொல்கிறது. “உன் அழகு குலைந்து விட்டது. உண்மை போய்விட்டது. அழகுக்கு உயிர் உண்மை. உன்னிடம் உயிர் கிடையாது. இப்போது நீ அழகற்றவன். உன்னைக் கண்டால் இப்போது மனிதர்கள் வெறுக்கின்றனர்.”-ஐயோ என்ன பயங்கரமான உண்மை? எனது ஆத்மாவா இதைச் சொல்கிறது? இல்லை! இல்லை!! இது ஏதோ பைசாசத்தின் வார்த்தைகள். இதோ, மீண்டும் ஆத்மாவின் குரல்! “ஒ மூடனே! நான் பைசாச மல்ல. உண்மையுரைகளை லோகம் இப்படித்தான் காற்றில் விட்டுவிடுகிறது. உனது தூய்மை கறைபட்டுவிட்டது. உன் போலி நடிப்பால் என்னை நீ படுத்தும் பாடு; அடேயப்பா, பயங்கரமானது. இப்போதுகூட நீ தேவநாயகியைப் போலிருக்கலாம். போ! உனது அகவழுக்கைப் போக்கிக் கொள். ஆண்டவனிடம் அழு. அழுதால் உனக்கு விடுதலை, ஆறுதல், எல்லாம் கிடைக்கும்” ஆத்மாவின் வார்த்தைகள் உண்மைதான்போலிருக்கிறது! தலை கிறு கிறுக்கின்றது.

* * *

சாந்தியா காலம். அம்பிகையின் கோயில்மணி “கணார், கணார்” என்று ஒலித்துக்கொண்டிருந்தது. அகண்டாகாரமான பிரகாரத்தில்உட்கார்ந்துகொண்டு, ஏதோ எனது சொத்தைக் கனவில் மூழ்கி யிருந்தேன். அது தெய்வத்தின் சந்நிதானம். அதைக் கண்டதுமே அன்புணர்ச்சி கரையை உடைத்துக் கொண்டு கிளம்புகிறது. இதைக் “கல்! மண்! மரம்” என்று வாய்கூசாது மக்கள் தூற்றுகின்றனர். ஐயோ! இவர்கள் கண்கள் எப்போது திறக்கும்? லோகத்தின் இணையற்ற இன்பத்தை இழந்துவிட்ட இவர்கள் நிலையை நினைக்கும்போதெல்லாம் கண்ணீர் விடுகின்றேன்....

இந்த சமயத்தில்,

'மாமா' என்றது ஓர் குரல்.

திரும்பிப் பார்த்தேன். எதிரில் தேவநாயகி நின்று கொண்டிருந்தாள்.

புன்னகையுடன் அவளது தேவ சௌந்தர்யத்தைப் பருகிக்கொண்டிருந்தேன். அவளும் என்னை நோக்கினாள். மறு நிமிடம் அவள் நகைத்தாள். ஏன் நகைத்தாள்? அவளுள்ளத்தில் அப்போது ஓடிய உணர்ச்சியென்ன? அது மட்டும் இந்த நிமிஷம் வரையில் தேவ ரகசியமாகவே யிருக்கிறது.

“ஏன் சிரித்தாள்? உனது வீழ்ந்த வாழ்க்கையைக் கண்டு சிரித்தாள்” என்றது ஆத்மா. இல்லை யில்லை! இந்த ஆத்மா இப்படித்தான் ஏதாவது கண்டபடி பேசிக் கொண்டிருக்கிறது.

“தேவநாயகி! ஏன் சிரிக்கிறாய்?” என்றேன்.

'ஏனா? என்னமோ சிரிச்சேன்! மாமா! பெப்பர் மின்ட், சாக் (chalk) எல்லாம் நேக்கு எப்போ வாங்கித்தரப் போரயள்?” என்றாள் அவள்.

அப்போது ஜிலு ஜிலு வென்று வீசிய காற்றில் அவளது பட்டுப் பாவாடை மேலும் கீழுமாகப் பறந்து கொண்டிருந்தது. அந்தப் பாழும் நேரத்தில்தான் 'பைசாசம்” தன் வேலையைச் செய்ய ஆரம்பித்தது.

கலகலவென்று ஒரே சிரிப்பு.

யார் சிரித்தது? தேவநாயகி சிரிக்கவில்லை. பின்னர் யார்? சுற்றிலும் பார்த்தேன். ஒருவரும் இல்லை. ஏதோ மனத் தோற்றம் என்று முடிவு செய்துவிட்டேன்.

“தேவநாயகி! இப்படி வா!” என்று கூறிய வண்ணமாய் அவளது கையைப்பிடித்து இழுத்து, என் மடி மீது அமர்த்திக்கொண்டேன். அவள் என் மார்பின் மீது சாய்ந்து, தனது இரண்டு கைகளையும் எனது கழுத்தி லிட்டு என்னைப் பார்க்கத் தொடங்கினாள். நானும் பார்த்தேன். அவளது அப்போதைய ரம்மியமான நிலை எனது இருதயத்தை குட்டிச் சுவரடித்து விட்டது. அவளது கைகளை மெல்ல வருடினேன். அவளது மேனி சிவந்தது. ஏதோ ஒரு உணர்ச்சியால், பூங்கொடியைப் போன்ற அவளது உடல் ஒரு நிமிஷம் நடுங்க அமர்ந்தது. அவள் அடைந்த அந்த நடுக்கத்தில் எனக்கு இன்னும் உணர்ச்சி அதிகப்பட்டது.

“தேவநாயகி! பெப்பெர் மின்டெல்லாம் தர்ரேன நீ என்ன தரப்போராய்?” என்றேன்.

“என்ன வேணும் மாமா! சொல்லுங்கோ, தர்ரேன்” என்று கூறினாள் அவள்.

“ஒரு முத்தம்” என்றேன்.

அவள் கன்னக் குமிழ்களில் செவ்வொளி தோன்றி மறைந்தது.

அவள் தயங்கவில்லை, பளிச்சென்று எனது அதரங்களில் முத்தமிட்டாள் குழந்தை. முத்தமென்றால் ஒன்றோடு நின்றுவிடவில்லை; பத்துப் பன்னிரண்டு முத்தங்கள் கொடுத்தாள். உள்ளம் துடித்துவிட்டேன். எனது கண்கள் திறந்து விட்டன. என்னை நானே சபித்துக்கொண்டேன். கள்ளமறியாத சிறுமி—காமமென்றால் இன்னதென்றறியாத பூங்கொடி-கற்பின் கொழுந்து,..........................எனது ஈனத் தன்மையைக் கண்டு நெஞ்சம் குன்றிப்போய் விட்டேன்.

மனிதன் தனக்குத் தானே உணர்ந்து அடையும் தண்டனையைவிட, லோகம் அவனுக்கு வேறு எந்த அதிகமான தண்டனையையும் கொடுத்துவிட முடியாது.

அப்போது முன்னர் கேட்டதுபோல் ஓர் சிரிப்பு! திடுக்கிட்டேன்.

“பார்! நீ நாளுக்கு நாள் எவ்வளவு கேவலமாகி வருகிறாய் என்று. குழந்தை! அவள் மாசற்றவள். கேவலம், சாஹசம் நிறைந்த வேசியல்ல. அவளைத் தொடக்கூட உனக்கு யோக்கியதை யில்லை. அவள் நிலையென்ன? உன் நிலை யென்ன? அவள் அன்னை; நீ அற்ப மகன், உனது செய்கையால் தர்மம் நடுநடுங்கிப் போய்விட்டது. மாயை கூத்தடிக்கிறாள். உன்னை உலகம் எப்படி விரும்ப முடியும்? போலி மனிதர்கள் உனது நடிப்பில் வீழ்கின்றனர். உண்மை மனிதர்களுக்கு நீ “வெட்ட வெளிச்

22317

சம்." அவர்கள் உன்னை வெறுக்கின்றனர்" என்றது ஆத்மா.

ஓ! நான் என்ன செய்யட்டும்?

* * *

மனிதன். அவனை அறிந்துவிட்டால் கடவுளையும் அறிந்துவிடலாம். பக்கத்திலிருக்கும் மனிதனையும் தன்னையும் அறிய முடியாதவன் கண்ணுக்குக் காணாத அந்த சக்தியை எப்படி அறிய முடியும்? லோகம் எவ்வளவு அந்தகாரத்தில் மூழ்கிக் கிடக்கிறது? உணர்ச்சிகளை வெற்றிகொள்வோன் ஞானி. இவன்தான் வையத்தின் ஜீவ சக்தி. மற்றவர்களெல்லாம் பதர்கள். பூமிக்கு வெறுஞ் சுமை. கேவலமான புழுக்கள்...... இந்த சிந்தனையில் அந்த இரவு ஓடிக் கொண்டிருந்தது.

* * *

அப்பொழுதுதான் பொழுது விடிந்தது. படுக்கையை விட்டு எழுந்திருக்க மனம் வாராமல் புரண்டு கொண்டிருந்தேன்.

அந்த சமயத்தில் மிருதுவான கரமொன்று என் மீது விழுவதை உணர்ந்தேன்.

"யாரது" என்றேன் கண்களைத் திறக்காமலேயே.

"நான் தான் மாமா" என்று சொல்லிய வண்ணமாய் என்னைக் கட்டித் தழுவினாள் தேவநாயகி.

ஆஹா! ஒரே இன்ப உலகத்தில் ஆழ்ந்துவிட்டேன். இந்த இன்பம் துன்பத்தை மூடிக்கொண்டிருக்கும் திரை என்று எனக்கு எப்படித் தெரியும்?

அடுத்த நிமிஷம் என் உடல் ஏதோ ஒரு சக்தியால் ஆடியது. தேவநாயகியை நானும் கட்டித் தழுவி அவள் அதரங்களில் முத்தமிட்டேன். குழந்தை உணர்ச்சியற்றாள். நான் குருடனாகி விட்டேன். இதுவே எனது கடைசி வீழ்ச்சி. ஐயோ!......

மஹா பயங்கரமான ஓர் சிரிப்பு என் உள்ளத்திலெழுந்து ஒலித்தது. ஆத்மாவோ கண்ணீர் விட்டுக் கதறியது.

* * *

கவிஞர்கள்—மஹா அழகான காவியங்களால் லோகத்தை சாரமற்ற கற்பனைக் கடலில் மூழ்த்துகின்றனர். தத்துவசாஸ்திரிகள்—தங்கள் நூல்களைக் கொண்டு மூடர்கள் மனத்தை அலைக்கின்றனர். சைத்ரிகர்கள்—தங்கள் தூரிய சிருஷ்டிகள் மூலம் இயற்கை ரஸனையைக் கொன்று வருகின்றனர். கலைஞர்களால் லோகம் பாவத்திலிருந்து தலை நிமிர முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறது. கலைஞர்கள் மனதில் ஒரே உணர்ச்சிதான் ஏக சகராதிபத்யம் செய்து வருகிறது. அதுதான் காமம்! காதல்!...... வேதாந்தம் பேசுகிறேன். கதை என்றும், கற்பனையென்றும் கதைக்கிறேன். ஆனால் நான், எனது ஈன உணர்ச்சியால் ஆட்சி செய்யப்படுகையில், எவ்வளவு இழிவானவனாக மாறுகிறேன் என்று நினைக்கும்போது, உள்ளமே சுழல்கிறது.

ஆண்டவனருள் பெறாத மனித வாழ்க்கை மிகவும் கேவலமானது.

பெண்கள்! ஆண்களை வீழ்த்தும் அரக்கிகள். இவர்கள் உரையெல்லாம அமுதம் ததும்புகின்றது; உள்ளத்திலோ நஞ்சு கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. மஹா மாயாவிகள்...... இல்லை! இவர்கள்மீது குறை கூற எனக்கு என்ன உரிமையிருக்கிறது. மனிதனை மனிதன் குறை கூறுவது எவ்வளவு மதியீனம். ஒருவன், மற்றொருவனைக் குறை கூறுவானாகில், அவன் ஆண்டவனையே பழிப்பவனாகின்றான். "பெண்கள் அடிமைகள்" என்ற கூச்சல் வெறும கூச்சல். அவ்வாறு கூறலது பொய். ஆண்களல்லவோ—இன்று அடிமைகள்! பெண்ணை அடிமைகொள்ளும் ஆண் வீரம் போய் விட்டது. ரஜபுத்ர சரிதங்கள் இன்று கட்டுக் கதைகளாகி விட்டன. ஆண்கள்! பேடிகள்! அடிமைப் பதர்கள்! இவர்கள் சமூகமே அழிந்து போனால்கூட ஒருவரும் கண்ணீர்விட வேண்டிய அவசியமில்லை. ஆண்கள்—காமுகர்கள்—லோகம் இவர்களால் தூள் தூளாகி வருகின்றது. இந்தப் பாவிகளுக்குப் "பாவமே" இன்னதென்று தெரிவதில்லை. இந்த கூட்டம் லோகத்தில் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகரித்து வருகிறது.

அன்று மாலை.

வீதியில் ஏழெட்டுச் சிறுமிகளுடன் அவள் விளையாடிக்கொண்டிருந்தாள்.

அவள் முகத்தைப் பார்த்தேன். அவளும் பார்த்தாள். ஆனால் அவள் வதனத்தில் முந்திய சிரிப்பைக் காணோம். அதற்குப் பதில் கோபமும் அழுகையும் கொந்தளித்துக் கொண்டிருந்தன.

அந்த நிலைமை என் மார்பைப் பிளந்தது. கொலை செய்தவன் போன்ற ஓர் உணர்ச்சி என்னுள் தோன்றி விட்டது. தேவநாயகியைப் பார்க்கவும் அஞ்சினேன். எதைக் கண்டும் ஞானி அஞ்சுவதில்லை. குற்றவாளியோ நிழலுக்குக்கூட பயப்படுகிறான். அவன் ஒரு பெரிய கோழை.

"அதோ போறான் பார் அந்த மாமா! ரொம்ப கெட்டவாடீ!...... பொல்லாதவாடீ! வாடீ! எல்லாம் நம்ப ஆத்துக்குப் போயிடலாம்" என்று என்னைச்

சுட்டிக்காட்டிக் கத்தினாள் தேவநாயகி.

அவள் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் நெருப்புத் துண்டங்களைப் போல் எனது உள்ளத்தைத் தீய்த்தது. அவமானம் ஒருபுறம். மற்றொரு புறம் வலிய வருவித்துக் கொண்ட அகந்தை, எல்லாம் மனத்தில் தாண்டவமாடின. ஐயோ, அவள் என்னை எவ்வளவு மேன்மையாக நேசித்து வந்தாள்? என்னிடம் அவளுக்கிருந்த அன்போ எல்லையற்றது? கரையற்ற காதல் கொண்டிருந்த அவளுள்ளத்தில் கணத்தில் விஷத்தைக் கொட்டிவிட்டேன். குழந்தை என்னமாய்த் துடிக்கிறாள்? அவள் ஆத்திர மொழிகளைக் கேட்டு என் எனது மூட மனம் கோபம் கொள்கிறது?......

அன்று முழுதும் ஒன்று செய்யத் தோன்றவில்லை. நெஞ்சம் 'படக் படக்' என்று அடித்துக்கொண்டது...... என் தலைவிதி!

அமைதி கண்டு இரண்டு நாட்களாய் விட்டன.

லோகம் எனது தவறை மன்னிக்கவே மன்னிக்காது. அதனிடமிருந்து ஒரு துளி இரக்கத்தை கூட நான் எதிர்பார்க்கவேயில்லை. ஆனால், ஆண்டவன் ஒருவனே என்னை மன்னிக்க முடியும். அவன் தான் கருணையின் உருவம்.

"இதில் என்ன தவறு? என் இந்த வீண் கலக்கம்? இப்போது என்ன முழுகிப் போய்விட்டது. தேவநாயகியும் ஒரு சாதாரணப் பெண்ணே. அவளுக்கும் அந்த உணர்ச்சியுண்டு. உலகத்தில் உனது செய்கை புதுமையானதல்ல" என்றது ஓர் குரல்.

"அவள் தான் மாயை. அந்தக் குரல் அவளுடையதுதான்" என்றது ஆத்மா.

"என் சக்தியை நீ எதிர்க்க முடியாது. நீ என்னுடையவனே. க்ஷணத்தில் உன்னை பொடிப் பொடியாகச் செய்து விடுவேன்" என்று மீண்டும் மாயை கர்ஜித்தாள்.

ஊம்!.........

* * *

அவள், படுத்த படுக்கையாயிருக்கிறாள். தேவநாயகிக்கு ஜுரம் வந்து இன்றோடு ஆறு நாட்களாகின்றன. அவள் வீட்டார் என்னை உறுத்திப் பார்த்தனர். அவள் சகோதரன் மட்டும் என்னை வரவேற்றான்.

தேவநாயகி தங்கப் பதுமையைப்போல், அவள் படுக்கையில் கிடந்தாள். அவள் கண்ணொளி குறைந்து விளங்கியது. அதரங்கள் வெடித்துக் கிடந்தன முகத்தில் பிரேதக் களைத் தட்டியது. நான் ஒரு நிமிஷம் கற்சிலைபோலாகிவிட்டேன்.

அவள் விழிகளைத் திறந்தாள். என்னைப் பார்த்தாள். "மாமா! பெப்பர்மின்ட் கொண்டு வந்தீங்களா?" என்றாள்.

தயாராக சட்டப்பையில் வைத்திருந்த பெப்பர்மின்டுகளை அவள் கையில் கொடுத்து, ஒன்றை அவள் வாயில் போட்டேன். அதைத் தின்றுவிட்டாள். மறு நிமிஷம்!

அவள் கண்களும் என் கண்களும் நன்றாய் சந்தித்தன. அவளது பார்வை எனது உடலை "கிடுகிடு" வென்று உலுக்கியது.

"மாமா! மாமாடீ!...இவன் பொல்லாதவனாச்சேடீ!...' என்று கத்தினாள் குழந்தை. அவ்வளவுதான் தாமதம்! குழந்தையின் கால்களும் கைகளும் கோண ஆரம்பித்து விட்டன. ஐயோ, பாவம்! குழந்தைக்கு வலி வந்துவிட்டது. அவளுக்கு ஸ்மரணையில்லை. இந்த நிலைமையில் அவள் அரைமணி நேரம் எமனுடன் போராடினாள். இப்போது வலிப்பு அடங்கிவிட்டது. அவளது விழிகள் மலர்ந்தன. அப்போது அந்தக் கண்களில் ரௌத்திரம் இல்லை. ஆனால் யாத்திரையின் ஒப்வு அவள் கண்களில் ஜ்வலித்தது.

மெதுவாக அவள் பக்கம் குனிந்தேன்.

"தேவநாயகி' என்றேன்.

பதிலில்லை.

"ஐயோ! மோசம் செய்து விட்டாள்" என்று அலறினாள் அவளது அன்னை.

ஆம்! அங்கு அவளில்லை. வெறும் உடல்-மாயையின் பிரதி பிம்பமே—அங்குக் கிடந்தது.

"ஓ" வென்று கதறினேன்.

* * *

நான் கொலை பாதகன்தான். சின்னஞ் சிறு மகளைக் கொன்று விட்டேன். அதற்காக விதிக்கப்படும் தண்டனையை அநுபவிக்கத் தயாராகிவிட்டேன். மனிதர்களது தீர்ப்பு எனக்கு வேண்டியதில்லை. மனிதன் தீர்ப்பளிக்க லாயக்கற்றவன். அவன் முழு மூடன். மனித வாழ்க்கையின் சிக்கல்களும், இயற்கைகளும் மனிதச் சட்டங்களுக்குப் புறம்பானவைகள். லோகத்தின் நீதி மன்றங்களைக் கண்டு நெஞ்சம் என்ன பாடுகின்றது?

* * *

நாளை ஆண்டவன் சந்நிதானத்தில் எனக்கு தண்டனை விதிக்கப்படும். இதோ, அதற்குத் தயாராகி விட்டேன். அங்கு தேவநாயகியின் கால்களில் விழுந்து மன்னிப்பு வாங்கிக் கொள்வேன்.

காமம் லோகத்தை ஆட்சி செலுத்துகிறது. காமத் தீயை இந்த நாகரியுகம் வளர்த்து வருகின்றது. காமம் மகத்தானதோர் சக்தி. அதை வென்றவனே ஆண்டவன் அன்பைக் காண முடியும்........

போய் வருகிறேன்........ மீண்டும் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்காக ஆண்டவனைப் பிரார்த்தியுங்கள்........

சினிமா ரஸிகர்களே! இதோ!

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும்

எம். கே. ராதா

எஸ். வி. வெங்கடராமன்

டி. என். மீனாக்ஷி

ஆகியோர் முழுத்திறமையுடன் நடித்த

உயரிய சமூகத் தமிழ் பேசும் படம்.

சந்திர மோஹனா

அல்லது

"சமூகத் தொண்டு"

நவ நாகரீக காக்ஷிகளும்
இன் சுவை தரும் இனிய கீதங்களும்
பார்த்து பிரமிக்கும் பயங்கரச் செயல்களும்
விடா நகைப்பைத்தரும் ஹாஸ்யங்களும்
உற்சாக மூட்டும் உயரிய சம்பாஷணைகளும்

ஒருங்கே அமையப் பெற்றது.

டைரெக்ஷன்: ராஜா சந்திரசேகர்.

சம்பாஷணை: எம். கந்தசாமி முதலியார்.

கதை: கொத்தமங்கலம் எஸ். எம். சுப்பிரமணியம்.

மதுரை, திருநெல்வேலி, திருச்சிநாப்பள்ளி, சேலம், கோயமுத்தூர், காரைக்குடி, ஊர்கம், புதுக்கோட்டை, திருவாரூர், திருப்பூர் முதலிய ஊர் தியேட்டர்களில் ஆரம்ப தினத்தை எதிர் பாருங்கள்!

விபரங்களுக்கு: தந்தி:— *Movietone.*

மோஹன் மூவிடோன் கம்பெனி,

157, தெற்கு மாசி வீதி, மதுரை.

Edited and Published by N. VIJAYAKUMAR, 329, T. H. Road, Washermenpet, Madras.
Printed at the SRI AUDIMULAM PRESS, 20, Perumal Kovil Garden Street, G. T. Madras.

பட முதலாளிகளே !!

பம்பாய், கல்கத்தா, முதலிய இடங்களில் பிளாக் செய்து காலத்தையும் பணத்தையும் ஏன் விரையம் செய்கிறீர்கள் ?

M. C. A.

(ESTD. 1890)

உங்களிஷ்டப்படி:—

கலர் பிளாக்குகள், ஆப்டோன் பிளாக்குகள், லைன் பிளாக்குகள், கலர் ஸ்லைடுகள்

முதலியன

குறித்த காலத்தில் குறைந்த சார்ஜில் — சிறந்த முறையில் செய்து கொடுக்குமிட

தென்னிந்தியாவில் இது ஒன்றே

எம். ஸி. அப்பாசாமி செட்டி & கோ

ஜோன்ஸ் தெரு, ஜி. டி., மதராஸ்

டெலிபோன் நெ. 3202

Regd. No. M. 3560

எதிர் பாருங்கள் !! விரைவில் வெளிவருகிறது!!!

"சந்திரோதயம்"

எடிசன் மலர்

சினிமாக் கலை யுலகம் சிரமேல் வைத்து வணங்கும் அந்த மகத்தான விஞ்ஞானி யின் திருநாளைக் கொண்டாடும் நோக்கத்துடனே இது பிரசுரிக்கப் படுகிறது.

விலை அணா 4 தான்

கண்களைக்கவரும் படங்களும் மனதிற்கு மகிழ்ச்சி தரும் கட்டுரைகளும் இந்த மலரில் ஏராளம். வீண் புகழ்ச்சி பாட நாங்கள் விரும்பவில்லை. தமிழ் நாட்டில் இதுவரையில் இம்முறையில் எந்த மலரும் வெளி வந்ததில்லை. வேண்டுவோர் முன்னதாகவே அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும்.

பூரா விபரங்களுக்கு

"சந்திரோதயம்" ஆபீஸ்

வண்ணாரப்பேட்டை : : சென்னை